# சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்

# (PGIIM)

## கொழும்புப் பல்கலைக்கழகம்

**2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையும் கணக்குகளும்**

# அறிக்கைபற்றி

இவ்வறிக்கையில் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIIM) தொடர்பாக 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் 2024 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பொது தகவல்கள், செயலாற்றுகை மற்றும் சாதனைகள் விபரமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

## அறிக்கையிடல் கட்டமைப்பு மற்றும் பரப்பு

இவ் அறிக்கையானது பயிற்சியாளர்கள், தற்போது நடாத்தப்படும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், மனித வளங்கள், சாதனைகள், நிதிச் செயலாற்றுகை மற்றும் ஆண்டு கணக்குகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாகும்.

## தொலைநோக்கு

நாட்டின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பிராந்திய மற்றும் உலகளாவிய சுகாதாரத்தில் பதிலளிக்கும் வகையில் பங்களிப்புச் செய்யவும் தேவையான ஆயுர்வேத, யூனானி, சித்த மருத்துவம் மற்றும் பாரம்பரிய மருத்துவத்துறையில் உயர் தொழில்சார் தராதரங்களைக் கொண்ட பாரம்பரிய சுகாதார நிபுணர்களை உருவாக்குவதில் சிறப்பு வாய்ந்த மத்திய நிலையமாதல்.

## செயற்பணி

இலங்கை, பிராந்திய மற்றும் உலகளாவிய மக்களுக்கு உயர்ந்தளவு மனிதாபிமானமிக்க சுகாதாரப் பராமரிப்பினை வழங்குவதற்காக ஆயுர்வேத, யூனானி, சித்த மருத்துவம் மற்றும் பாரம்பரிய மருத்துவத்துறையில் அறிவும் திறனும் கொண்ட நிபுணர்களை உருவாக்குதல்.

## இலக்குகள்

1. நாட்டின் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்ற பங்களிக்க ஆயுர்வேதம், யுனானி, சித்த மற்றும் பாரம்பரிய சுகாதார நிபுணர்களை உருவாக்குதல்.
2. சுதேச மருத்துவத் துறையில் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு நெகிழ்வான கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலை உருவாக்குதல்.
3. சுதேச மருத்துவத் துறையில் ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை உருவாக்குதல்.
4. திறமையான, பயனுள்ள நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் ஊடாக சிறந்த நிர்வாக முறையை உருவாக்குதல்.
5. நிறுவனத்தின் கல்வித் தேவைகள், தரத்தை உறுதிப்படுத்தவும் வளர்ச்சிக்கு இடமளிக்கவும் உள்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடும்தல்.

| உள்ளடக்கம் | | | பக்கம் |
|---|---|---|---|
| அறிக்கைபற்றி | | | i |
| | அறிக்கையிடல் கட்டமைப்பு மற்றும் பரப்பு | | i |
| தொலைநோக்கு | | | ii |
| செயற்பணி | | | ii |
| இலக்குகள | | | ii |
| பணிப்பாளரின் செய்தி | | | iv |
| அட்டவணைகளின் பட்டியல் | | | vi |
| உரு.ீ.வரைபட பட்டியல் | | | vi |
| சுருக்கக் குறியீடுகளின் பட்டியல் | | | vi |
| பகுதி ஒன்று - 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை | | | |
| 1 | சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் | | 1 |
| | 1.1 | நிறுவனம் - சுருக்கமான அறிமுகம் | 1 |
| | 1.2 | நிறுவனத்தின் பணிப்பாளர் | 8 |
| | 1.3 | முகாமைத்துவச் சபை | 8 |
| | 1.4 | நிதிக் குழு | 10 |
| | 1.5 | கல்வி சபைகள் | 10 |
| | 1.6 | நூலகக் குழு | 13 |
| | 1.7 | பாடவிதான அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழு | 14 |
| | 1.8 | சர்வதேச ஒத்துழைப்புக்கான குழு | 16 |
| | 1.9 | உள்ளக தர உறுதிப் பிரிவு | 17 |
| | 1.10 | சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் - சஞ்சிகை குழு (JPGIIM) | 19 |
| 2 | 2024 ஆம் ஆண்டில் கல்விசார் நடவடிக்கைகள் | | 24 |
| | 2.1 | சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பயிற்சி பெறுவோரின் பதிவு விபரங்கள் | 24 |
| | 2.2 | சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை | 24 |
| | 2.3 | பரீட்சை பெறுபேறுகள் | 26 |
| | 2.4 | மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்புகளுக்கான ஒப்புதலுக்காகக் காத்திருத்தல். | 27 |
| | 2.5 | ஆயர்வேத மருத்துவ கலாநிதி மற்றும் மற்றும் சபை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள். | 27 |
| | 2.6 | யுனானி மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள். | 28 |
| | 2.7 | யுனானி மருத்துவ கலாநிதியின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் சபைச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள | 28 |
| | 2.8 | சித்த மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒப்புதலுக்காகக் காத்திருத்தல். | 29 |
| 3 | சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிருவாக பிரிவுகள் மற்றும் நூலகம் | | 30 |
| | 3.1 | நிர்வாகப் பிரிவு | 30 |
| | 3.2 | நிதிப் பரிவு | 30 |
| | 3.3 | நூலகம் | 31 |
| 4 | மனிதவளத் தரவுகள் | | 33 |
| | 4.1 | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் தற்கால பதவியணி | 33 |
| பகுதி இரண்டு – இறுதிக் கணக்குகளும் கணக்காய்வுத் தகவல்களும் | | | |
| 5 | 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள | | 36 |
| 6 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | | 75 |
| 7 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில் | | 82 |
| 8 | நிலைபேறான அபிவிருத்திக்கான முன்மொழிவு | | 93 |
| 9 | இடர் பகுப்பாய்வு அறிக்கை | | 95 |
| 10 | இருப்பியல் மற்றும் நிதி செயல்திறன் பகுப்பாய்வு | | 102 |

## பணிப்பாளரின் செய்தி



2024 ஆம் ஆண்டுக்காக சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PGIIM) வருடாந்த அறிக்கை சமர்ப்பிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி மற்றும் சுதேச மருத்துவ முறை ஆகிய துறைகளில் நிபுணத்துவ மருத்துவர்களை உருவாக்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட முதன்மையான நிறுவனமாக 2024 ஆம் ஆண்டு, சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டாக அமைந்தது.

அதன்படி இவ் ஆண்டில், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் வலுவான கல்வி மற்றும் நிதிசார் தரங்களை பராமரித்துக்கொண்டு, அதன் நோக்கத்திற்கு ஒழுங்கமைந்து வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்தது. இதன் முக்கிய மைல்கற்களாக: PGIIM 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முதல் தொகுதி பயிற்சியாளர்களுக்கான மருத்துவ கலாநிதி ஆயுர்வேத கயாச்சிகிட்சா திட்டத்திற்கான துணைத் தேர்வை வெற்றிகரமாக நடத்தியமையை முறிப்பிட முடியும். மருத்துவ கலாநிதி ஆயுர்வேத பயிற்சியாளர்களின் முதல் தொகுதி (2020-2025) தற்போது இந்தியாவின் ஆயுர்வேத கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (ITRA) முதுநிலை பதிவாளர்களாக மருத்துவ கலாநிதிக்கு பிந்தைய வெளிநாட்டுப் பயிற்சியைப் பெற்று வருகிறது. மருத்துவ கலாநிதி ஆயுர்வேத மருத்துவப் பயிற்சியாளர்களின் இரண்டாவது தொகுதி மற்றும் மருத்துவ கலாநிதி யுனானி மருத்துவப் பயிற்சியாளர்களின் முதல் தொகுதி (2022-2027) தற்போது பதிவாளர்களாக மருத்துவ கலாநிதிக்கு முந்தைய மருத்துவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. மருத்துவ கலாநிதி ஆயுர்வேதத்தின் (2024-2029) மூன்றாவது தொகுதிக்கான நோக்குநிலை 2024ஆம் ஆண்டில் ஒக்டோபரில் நடைபெற்றது. மேலும் அவர்கள் தற்பொழுது மருத்துவ கலாநிதிக்கு முந்தைய மருத்துவப் பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

இந்தியப் பல்கலைக்கழகங்களில் இருந்து மருத்துவச் சிகிச்சைப் பட்டம் பெற்ற சித்த மருத்துவ பட்டதாரிகளுக்கான இரண்டு வருட முதுநிலை பதிவாளர் (SR) பயிற்சித் திட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கப்பல்துறையில் உள்ள அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையங்களில் நடத்தப்படுகிறது.

ஆயுர்வேதம், சித்த மற்றும் யுனானி மருத்துவத்திற்கான சிறப்பு சபைகள் மற்றும் படிப்பு சபை, முகாமைத்துவ சபை, மூதவை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக பேரவையால் வழிநடத்தப்பட்டு திறம்பட செயல்படுகின்றன. உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவு (IQAC) மற்றும் பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழு (CDEC) ஆகியவை எங்கள் திட்டங்களின் தரத்தை தொடர்ந்து கண்காணித்து மேம்படுத்துகின்றன. நிர்வாக மற்றும் நிதி வளர்ச்சி: நிர்வாக மற்றும் நிதிக் கிளைகள் முகாமைத்துவ சபையால் வழிநடத்தப்படும் பொது செயல்பாடுகளை நிர்வகிப்பதில் மிகுந்த விடாமுயற்சியைக் காட்டியுள்ளன.

எமது கல்வி சாதனைகளுக்கு மேலதிகமாக, PGIIM ஆனது ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. நாங்கள் 2024ஆம் ஆண்டில் திறந்த அணுகல், சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழான சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் சஞ்சிகையை (JPGIIM) ஆரம்பித்ததுடன் நிறுவனத்தின் செய்திமடலின் இரண்டு இதழ்களை வெளியிட்டோம். “தர ஆராய்ச்சி மூலம் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்”

எனும் கருப்பொருளின் கீழ் நடைபெற்ற வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கானது (ARS PGIIM 2024) ஒக்டோபர் 2024 இல் ஒரு முக்கிய நிகழ்வாக கருதப்படுகின்றது.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஐந்து ஆயர்வேத நிபுணத்துவ துறைகளின் பொருட்டு நிபுணத்துவ மருத்துவ பட்டப்பின் படிப்பு பரிசோதனை முதலாவது தடவையாக 2023 ஆம் ஆண்டில் அதன் முதலாவது பரீட்சார்த்திகள் பொருட்டு நடாத்தியதுடன், 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் பட்டப்படிப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நிபுணத்துவ மருத்துவ பட்டப்பின் படிப்பு பட்டத்தின் முதலாவது மாணவர் குழு சிரேஷ்ட பதிவாளர்களாக சேவை நிலையங்களை அடிப்படையாகக்கொண்ட பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.
இவ் வெற்றிகள் காணப்படினும், கவனம் செலுத்த வேண்டிய சவால்களும் உள்ளன. குறிப்பிடத்தக்க வகையில், நிரந்தர அலுவலக வளாகங்கள் இல்லாதது மற்றும் போதுமான பணியாளர்கள் இல்லாதது போன்ற சிரமங்களை PGIIM தொடர்ந்து எதிர்கொள்கிறது, இவை இரண்டும் எமது நிலையான வளர்ச்சிக்கு அவசியமானவையாகும்.

இவ்வாண்டில் சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வெற்றிக்காக தனது பங்களிப்பை வழங்கிய முதுநிலை உதவிப் பதிவாளர், முதநிலை உதவி நிதியாளர், உதவி நூலகர் அடங்கலாக முகாமைத்துவ சபை, கல்விசார் சபை, நிபுணத்துவ சபை உறுப்பினர்கள், பயிற்சியாளர்கள், பரிசோதகர்கள், மேற்பார்வையாளர்கள், பயிலுநர்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ளவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். PGIIM இன் தொடர்ச்சியான வெற்றியை உறுதி செய்வதில் அவர்களின் கூட்டு முயற்சிகள் மிகவும் இன்றியமையாததாகும்.

**பேராசிரியர் எஸ்.எம்.எஸ்.சமரகோன்**
**பணிப்பாளர்**
**சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்**

## அட்டவணைகளின் பட்டியல்


| | | |
|---|---|---|
| அட்டவணை 1 | முகாமைத்துவச் சபையினது கூட்ட விபரங்கள் | **8** |
| அட்டவணை 2 | நிதிக் குழுவின் கூட்ட விபரங்கள் | **10** |
| அட்டவணை 3 | கற்கைச் சபையின் கூட்ட விபரங்கள் | **11** |
| அட்டவணை 4 | கற்கைச் சபையின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் | **11** |
| அட்டவணை 5 | விசேடித்த துறைச் சபை கூட்டங்களின் விபரங்கள் | **12** |
| அட்டவணை 6 | விசேடித்த துறைச் சபைகளின் தவிசாளர்களும் செயலாளர்களும் | **13** |
| அட்டவணை 7 | நூலகக் குழுவின் கூட்ட விபரங்கள் | **14** |
| அட்டவணை 8 | உள்ளகத் தர உறுதிப் பிரிவின் கூட்ட விபரங்கள் | **19** |
| அட்டவணை 9 | JPGIIM இன் ஆசிரியர் குழுவின் கூட்ட விபரங்கள் | **22** |
| அட்டவணை 10 | மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் பொருட்டு பதிவாகிய பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை விபரங்கள் | **24** |
| அட்டவணை 11 | மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் பொருட்டு பயிற்சி பெறுநர்களின் முழு எண்ணிக்கை | **24** |
| அட்டவணை 12 | சிரேஷ்ட பதிவாளர் பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை | **25** |
| அட்டவணை 13 | ஆயுர்வேத கயாச்சிகிட்சாவில் மருத்துவ கலாநிதி தேர்வு (சிறப்பு) விபரங்கள் - செப்டெம்பர்/ஒக்டோபர் 2024 | **26** |
| அட்டவணை 14 | 2024 ஆம் ஆண்டிற்கான கயாச்சிகிட்சாவில் நிபுணத்துவ மருத்துவ தேர்வு மற்றும் சபை சான்றிதழ் விபரங்கள் | **27** |
| அட்டவணை 15 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்கால பதவியணி | **34** |


## உரு/வரைபட பட்டியல்


| | | |
|---|---|---|
| உரு 1 | நிறுவனக் கட்டமைப்பு | **07** |


## சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்

| | |
|---|---|
| PGIIM | சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் |
| FIM | சுதேச மருத்துவ நிறுவனம் |
| GWUIM | கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் |
| BIMARI | பண்டாரநாயக்க ஞாபகர்த்த ஆயுர்வேத ஆய்வு நிறுவகம் |
| BOM | முகாமைத்துவச் சபை |
| BOS | கல்விச் சபை |
| SpB | நிபுணத்துவ சபைகள் |
| MD | நிபுணத்துவ மருத்துவ பட்டம் |
| IQAC | உள்ளகத் தர உறுதிப் பிரிவு |

# பகுதி - ஒன்று

# 2024ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை

# 1. சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PGIIM)

## 1.1 சுருக்கமான அறிமுகம்

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனமானது (PGIIM) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழக சட்டத்தின் கீழ், 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 08 ஆம் திகதியுடைய, 2048/46 ஆம் இலக்க சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவனக் (PGIIM) கட்டளைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கல்வி நிறுவனமாகும். அதன்படி நிறுவன சேவைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறை ஆகியவற்றிற்கான மனிதவளத் தேவைகளை பூர்த்தி செய்வதில் இது முக்கியமான கடமைப் பொறுப்புகளை வகிக்கின்றது. சுகாதார சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு ஆயுர்வேதம், யூனானி மற்றும் சித்த மருத்துவத் துறைகளில் சிறப்புத் தேர்ச்சி வாய்ந்த அவசியமான நிபுணர்களையும், உயர் கல்வி அமைச்சின் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யூனானி ஆகிய துறைகளில் நிபுணர்களை வழங்குதலும் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பொறுப்பாகும். அதன்படி, உள்நாட்டு மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் நாட்டுக்கு தேவையான தொழிற்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கற்கை நெறிகளைத் (PGIIM) தொடங்குவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் (PGIIM) செயல்பாட்டு நடவடிக்கைகள், முகாமைத்துவ சபையின் முதலாவது கூட்டம் 2019 பெப்ரவரி 25ஆம் திகதி நடைபெற்ற பின்னர் 2019 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. PGIIM தனக்கான நிரந்தர கட்டிடம் கிடைக்கும் வரையில் சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பொரளையில் உள்ள ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் தற்காலிக கட்டிடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் முந்தைய பணிப்பாளர்களின் மூன்று ஆண்டு பதவிக்காலத்தை நிறைவு செய்ததைத் தொடர்ந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளராக பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரக்கோன், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ முதுகலை நிறுவனத்தின் இயக்குநராக 2024 பெப்ரவரி 3 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டார்,

2020 மற்றும் 2021ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அனுமதி கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து தற்போது சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், ஐந்து ஆயர்வேத மருத்துவ கலாநிதி நிகழ்ச்சித்திட்டங்களையும், ஒரு யூனானி மருத்துவ கலாநிதி நிகழ்ச்சித் திட்டமும் அடங்கலாக, ஆறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றது.

அதேபோன்று மேலும் ஆறு மருத்துவ கலாநிதி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களான இரண்டு ஆயர்வேத நிகழ்ச்சித்திட்டங்கள், இரண்டு சித்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இரண்டு யூனானி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட ஆறு மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ் திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்ற உடனேயே, PGIIM குறித்த 6 திட்டங்களுக்கு மாணவர்களைச் சேர்க்க திட்டமிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், PGIIM தற்போதுள்ள அனைத்து ஆயுர்வேத மற்றும் யுனானி MD மற்றும் சபைச் சான்றிதழ் திட்டங்களின் திட்டவிவரக் கையேட்டை (prospectuses) திருத்தி, பேரவையின் ஒப்புதலைப் பெற்றது. மேலும் புதிய ஆயர்வேத மருத்துவ கலாநிதி நிகழ்ச்சித்திட்டமொன்றும் ஆயர்வேத தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா திட்டமொன்றுக்கான திட்டவிவரக் கையேடு (prospectuses) தயாரிப்பதற்கும் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கான ஒப்புதலுக்காக 2025ஆம் ஆண்டு பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்.

பட்டப்பின் படிப்பு சுதேச மருத்துவ நிறுவகம் ஆயுர்வேதம் மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ் பெற்ற 3வது தொகுதி மாணவர்களுக்கான வழிகாட்டுதல் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தியது. இந் நிகழ்வின் முக்கிய சிறப்பம்சமாக தன்வந்திரி பூஜை நடைபெற்றது. பயிற்சி பெறுபவர்கள் தங்கள் கல்விப் பயணத்தைத் தொடங்கும்போது அவர்களுக்கு ஆசிர்வாதம் தேடும் ஒரு புனித சடங்கு இதுவாகும். இதைத் தொடர்ந்து ஆயுர்வேத மருத்துவத்தில் அவர்களின் பாதையின் தொடக்கத்தைக் குறிக்கும் ஒரு பாரம்பரிய துவக்க விழாவான சிஷ்யோபனயன சம்ஸ்காரம் நடைபெற்றது.

2024ஆம் ஆண்டு ஜனவரி இல் நடைபெற்ற கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு விழாவில் ஆயுர்வேதத்தில் பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு படிப்பின் முதல் தொகுதி மாணவர்கள் பட்டம் பெற்றனர். ஒரு வருட பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு உள்நாட்டு பயிற்சியை நிறைவு செய்த பின், முதல் ஆயுர்வேத தொகுதியின் சிரேஷ்ட பதிவாளர்கள், தங்கள் பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு வெளிநாட்டுப் பயிற்சியைப் பெறுவதற்காக இந்தியாவில் உள்ள கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டனர். 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு தேர்வில் வெற்றிபெறாதவர்களுக்காக 2024 ஆம் ஆண்டு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டது. அந்த பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு பயிற்சி பெற்றவர்கள் 2024ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதியன்று நடைபெற்ற கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு விழாவிலும் பங்கேற்றனர்.

உயர்கல்வி நிறுவனத்தின் முக்கிய பொறுப்பான அறிவைப் பரப்புவதற்காக, "தரமான ஆராய்ச்சி மூலம் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்" என்ற கருப்பொருளில், பட்டப்பின் படிப்பு சுதேச மருத்துவ நிறுவனத்தின் (ARS PGIIM 2024) 1வது வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந் கருத்தரங்கு, பணிப்பாளர், பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரகோன் மற்றும் கருத்தரங்கத் தலைவர் பேராசிரியர் (திருமதி) கே. ப்ரியாணி பி. பீரிஸ் ஆகியோரின் தலைமையில் 2024ஆம் ஆண்டு அக்டோபர் 18ஆம் திகதியன்று நடைபெற்றது. இந் நிகழ்வில், தலைமை விருந்தினராக, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முதுநிலை பேராசிரியர் எச்.டி. கருணாரத்ன அவர்களும், கௌரவ விருந்தினராக, இந்தியாவின் ஜாம்நகரில் உள்ள ஆயுர்வேத கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரான பஞ்சகர்மா துறையின் தலைவரான பேராசிரியர் அனுப் தகார் அவர்கள் இருந்ததுடன் மற்றும் ஓய்வுபெற்ற பேராசிரியரும் PGIIM இன் முன்னாள் பணிப்பாளருமான ஜெயந்த ஜெயவர்தன அவர்கள் சிறப்புரையாற்றினார்.

ஒரு உயர்கல்வி நிறுவனத்தில் ஆராய்ச்சி கலாச்சாரத்தை உருவாக்குதலானது, அறிவைப் பரப்புவதற்கு எடுக்கக்கூடிய மிக முக்கியமான நடவடிக்கையாகும். ஆராய்ச்சியானது ஆய்வு தொடர்பான உளப்பாங்கினை கட்டியெழுப்புவதற்கு ஆதரிப்பதுடன், புத்தாக்கம், படைப்பாற்றல், விவேக சிந்தனை மற்றும் சிக்கலான விடயங்களை தீர்க்கும் திறன்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

உயர்கல்வி ஆராய்ச்சிக்கும் மக்களின் ஆரோக்கியம் உட்பட ஒரு நாட்டின் சமூக நலனுக்கும் இடையே வலுவான மற்றும் நேர்மறையான உறவு உள்ளது. அதன்படி, உயர்கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, *சுதேச மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவக திறந்த ஆய்வு சஞ்சிகையை (JPGIIM)* தொடங்க திட்டமிட்டுள்ளது. அதன்படி, 2025 ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ள அதன் தொடக்க இதழான *தொகுதி 1, இதழ் 1* க்கு 2024ஆம் ஆண்டில் சமர்ப்பிப்புகளை ஏற்கத் தொடங்கியது. ஏதிர்வரும் ஆண்டில் இவ் இதழை வெற்றிகரமாக வெளியிடுவதை நோக்கி தலையங்கக் குழு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

பங்குதாரர்களுக்கான சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்வதில் PGIIM உறுதியாக உள்ளது. இதற்கு இணங்க, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் ஆதரவுடன், PGIIM இந்தத் துறையில் உள்ள மருத்துவ அதிகாரிகளிடையே உள்நாட்டு மருத்துவத்தில் மருத்துவ கலாநிதி பயிற்சித் தேவைகளை அடையாளம் காண ஒரு சந்தை ஆய்வை நடத்தியது. இந்த ஆய்விலிருந்து சேகரிக்கப்பட்ட தரவு, ஆறு புதிய MD மற்றும் சபைச் சான்றிதழ் திட்டங்களுக்கான

விண்ணப்பங்களைத் தயாரிப்பதிலும், PGIIM இல் தற்போதுள்ள MD திட்டங்களின் விவரக்குறிப்புகளைத் திருத்துவதிலும் பயன்படுத்தப்பட்டது.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது, அதன் பங்குதாரர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக சமூகத்தின் தேவை குறித்து எப்போதும் அக்கறை கொண்டுள்ளது. அதன்படி, சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவனம், சுதேச மருத்துவப் பிரிவில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கிடையில் சுதேச மருத்துவம் தொடர்பான பட்டநிலை பயிற்சி தேவைகளை அடையாளம் காணுவதற்காக பாடத்திட்ட மேம்பாடு மற்றும் மதிப்பீட்டுக் குழுவின் உதவியுடன், சந்தை ஆய்வை நடத்தியது. இந்த ஆய்விலிருந்து சேகரிக்கப்பட்ட தரவு, ஆறு புதிய MD மற்றும் சபைச் சான்றிதழ் திட்டங்களுக்கான விண்ணப்பங்களைத் தயாரிப்பதிலும், PGIIM இல் தற்போதுள்ள MD திட்டங்களின் விபரக்குறிப்புகளைத் திருத்துவதிலும் பயன்படுத்தப்பட்டது.

2024 ஆம் ஆண்டில், PGIIM அதன் செய்தித்தாளின் தொகுதி 1 இன் இரண்டு இதழ்களை வெளியிட்டது, இது ஒரு முக்கியமான தகவல் தொடர்பு கருவியாக செயல்படுகிறது. இது கல்வித் திட்டங்கள், ஆராய்ச்சி சாதனைகள், நிர்வாக மற்றும் தேர்வு அறிவிப்புகள், மாணவர் செயல்பாடுகள், பயிற்சிப் பட்டறைகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் சமூக ஈடுபாடு குறித்த சரியான நேரத்தில் புதுப்பிப்புகளை வழங்குகிறது. மேலும் செய்தித்தாளின் வெளிப்படைத்தன்மையை வளர்க்கிறது, நிறுவனத் தெரிவுநிலையை மேம்படுத்துகிறது மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களிடையே தொடர்புகளை வலுப்படுத்துகிறது.

சர்வதேச ஒத்துழைப்புகள் மாணவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் வளர்ச்சி வாய்ப்புகளுக்கான ஒரு சாளரத்தைத் திறக்கின்றன. கல்வி முறையில் உள்ள வேறுபாடு, ஆராய்ச்சி, மருத்துவ நடைமுறைகள் மற்றும் பாடத்திட்ட மேம்பாடு ஆகிய துறைகளில் எல்லைகளுக்கு அப்பால் ஆராய அனுமதிப்பதன் மூலம் கல்வியின் தரத்தை வளப்படுத்துகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு, உயர்கல்வித் துறையில் சுதேச மருத்துவத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல, PGIIM பயிற்சி பெறுபவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் ஆராய்ச்சி அனுபவத்தை வழங்க இந்திய ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்தியாவின் ஆயுஷ் அமைச்சுடன் இணைந்து பணியாற்ற PGIIM நடவடிக்கை எடுத்துள்ளது. சிறப்பு சபை, கற்றல் சபை மற்றும் PGIIM முகாமைத்தவ சபையின் பரிந்துரையின் பேரில், பின்வரும் பயிற்சி மையங்களான, பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் (BHU) - வாரணாசி, இந்தியா, ஆயுர்வேத பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகம் (ITRA) - ஜாம்நகர், இந்தியா, தேசிய ஆயுர்வேத நிறுவகம் - ஜெய்ப்பூர், இந்தியா, SDM ஆயுர்வேத கல்லூரி - பெங்களூரு - இந்தியா மற்றும் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் - புது தில்லி, இந்தியா. PGIIM இன் வெளிநாட்டு பயிற்சி மையங்களாக அங்கீகாரம் பெற்றன.

அதன்படி, உள்நாட்டில் ஒரு வருட பட்டப்பின் படிப்பு மருத்துவப் பயிற்சியை முடித்த பதினாறு (16) சிரேஷ்ட பதிவாளர்கள் (முதல் தொகுதி) 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் 16ஆம் திகதியன்று இந்தியாவின் ஜாம்நகரில் உள்ள ஆயுர்வேத கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (ITRA) தங்கள் வெளிநாட்டுப் பயிற்சியை இந்தியாவில் ஆரம்பித்தனர்.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIIM), 2024ஆம் ஆண்டு டிசம்பரில், மருத்துவ கலாநிதிக்கு முன் பயிற்சி பெறுபவர்களுக்காக "போர்ட்போலியோ எழுத்து குறித்த பட்டறை"யை வெற்றிகரமாக நடத்தியது. இப் பட்டறை, பங்கேற்பாளர்களின் கல்வி மற்றும் தொழில்முறை திறன்களை போர்ட்∴போலியோ எழுத்தில் அத்தியாவசிய திறன்களுடன் அவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டது - மருத்துவப் பயிற்சி பெறுபவர்கள் தங்கள் கற்றல் அனுபவங்களை ஆவணப்படுத்தவும், தொழில்முறை வளர்ச்சியைப் பற்றி சிந்திக்கவும், பட்டப்பின் படிப்பு மருத்துவப் பயிற்சிக்கான மதிப்பீட்டு அளவுகோல்களை பூர்த்தி செய்யவும் இது ஒரு முக்கியமான தேவையாகும்.

2024ஆம் ஆண்டு செப்டெம்பர், PGIIM ஆனது பீட உறுப்பினர்கள், பட்டப்பின் படிப்ப மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் உற்சாகமான பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில், ஓய்வு பெற்ற பேராசிரியர் ஜெயந்த ஜெயவர்தனா அவர்களின் சிறப்பு விரிவுரையொன்றறை நடத்தியது. ‘‘பட்டப்பின் படிப்பு அறிஞர்களுக்கான வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் பற்றிய நுண்ணறிவு" என்ற தலைப்பிலான இவ் விரிவுரையானது, உலகளாவிய கல்வி நிலப்பரப்பின் ஒரு கட்டாய ஆய்வை வழங்கியது. கல்வி எல்லைகளை விரிவுபடுத்துதல், ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை வளர்த்தல் மற்றும் தொழில்முறை வளர்ச்சியை மேம்படுத்துவதில் வெளிநாட்டு பயிற்சியின் மகத்தான மதிப்பை இது வலியுறுத்தியது.


மேலதிகமாக, 2024ஆம் ஆண்டு டிசம்பர் PGIIM ஒரு நுண்ணறிவுள்ள ‘‘சிரேஷ்ட பதிவாளர் (SR) பயிற்சி குறித்த பட்டறை’’ ஒன்றை நடத்தியது, இது மருத்துவப் பணியில் முன்னேறும் முதுநிலை பதிவாளர் பயிற்சியாளர்களுக்கு மதிப்புமிக்க வழிகாட்டுதலை வழங்கியது.
அதே நேரத்தில், பயிற்சி பெறுபவர்களுக்கு உகந்த கற்றல் சூழலை வழங்குவதற்காக PGIIM இன் உள்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. PGIIM இன் நூலகம் அதன் பயிற்சி பெறுபவர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் குறிப்பு மற்றும் கடன் வசதிகளை வழங்கியது.

PGIIM அதன் அனைத்து நிதி நடவடிக்கைகள் மற்றும் பதிவு பராமரிப்பு செயல்முறைகளிலும் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளை (SLPSAS) விடாமுயற்சியுடன் பின்பற்றுகிறது. SLPSAS உடன் இணங்குவது உயர்தர நிதி அறிக்கைகளை உருவாக்குவதை ஊக்குவிக்கிறது, சிறந்த நிதி மேலாண்மை நடைமுறைகளை எளிதாக்குகிறது, நிதி செயல்திறன் மற்றும் நிலைகளின் நியாயமான பார்வையை துல்லியமாக பிரதிபலிக்கிறது, மேலும் இறுதியில் சிறந்த முடிவெடுப்பதை வளர்க்கிறது என்பதால் இந்த உறுதிப்பாடு மிக முக்கியமானது. மேலும், SLPSAS ஐப் பின்பற்றுவது நிதி அறிக்கையிடல் அமைப்பில் சீரான தன்மை மற்றும் ஒப்பீட்டை உறுதி செய்கிறது, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சியை ஊக்குவிக்கிறது. இந் நிர்வாகக் கொள்கைகளுக்கு நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு சான்றாக, PGIIM அதன் 2023 நிதிநிலை அறிக்கைகளுக்கு தகுதியற்ற தணிக்கைக் கருத்தைப் பெற்றது.

மனித வளங்களை வலுப்படுத்தும் பொருட்டு, PGIIM பல பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது. PGIIM இன் அனைத்து ஊழியர்களுக்கும் “செயற்கை நுண்ணறிவு- (AI)” என்ற தலைப்பில் ஒரு பயிற்சிப் பட்டறை 2024ஆம் ஆண்டு நவம்பர் நடைபெற்றது. மேலும் மென் திறன் அபிவிருத்தி குறித்த ஒரு பட்டறை ஜனவரி 2025 இல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும், PGIIM தற்போது பணியாளர்கள் பற்றாக்குறையால் பாரிய சிக்கலை எதிர்கொள்கிறது. PGIIM-ல் 16 பதவி நிலைகள் இருந்தாலும், தற்போது 9 நிரந்தர ஊழியர்கள் மட்டுமே உள்ளனர். முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு வைத்தல்) இல்லாதது PGIIM-ல் நிதி நடவடிக்கைகள் சீராக இயங்குவதை உறுதி செய்வதில் சவால்களை உருவாக்கியுள்ளது. மேலும், அனைத்து கல்வி, நிர்வாக மற்றும் கல்விசாரா ஊழியர்களும் பணி உதவியாளர்களின் கடமைகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதால், பணி உதவியாளர்களின் பற்றாக்குறை PGIIM-ன் நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகளின் செயல்திறனையும் பாதிக்கிறது. PGIIM-ல் ஒரு (01) தொழில்நுட்ப அதிகாரி, ஒரு (01) முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு வைத்தல்) மற்றும் இரண்டு (02) பணி உதவியாளர்களை நிரந்தரமாக நியமித்து முகாமைத்துவ சேவைகள் துறையின் ஒப்புதலுக்காகக் காத்திருக்க ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. PGIIM-ல் உள்ள ஒன்பது ஊழியர்களைக் கொண்டு மேற்கண்ட அனைத்து பணிகளையும் சாதிக்க முடியும். ஒழுக்கம், குழுப்பணி மற்றும் ஊழியர்களின் ஒற்றுமை மற்றும் PGIIM-ன் மாணவர்கள் மற்றும் வள நபர்களுடன் நல்ல ஒருங்கிணைப்பு ஆகியவை குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களைக் கொண்டு பெரிய பணிகளைச் சாதிப்பதற்கான திறவுகோல்களாகும்.

# நிறுவனக் கட்டமைப்பு




உரு: 01

### 1.2 நிறுவகத்தின் பணிப்பாளர்

பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரக்கோன் அவர்கள் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி 03ஆம் திகதியன்று சுதேச மருத்துவ முதுகலை நிறுவனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இதற்கு முன்பு, 2024ஆம் ஆண்டு ஜனவரி 01அம் திகதி முதல் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி 02ஆம் திகதி வரை, பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன அவர்கள், PGIIM இன் பணிப்பாளராக பணியாற்றினார்.

### 1.3 முகாமைத்துவச் சபை (BoM)

முகாமைத்துவச் சபை (BoM) என்பது சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று மற்றும் கல்விசார் சபையாவதுடன், ஒவ்வொரு மாதமும் அதன் கூட்டங்கள் நடாத்தப்படும். 2023 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையின் 09 கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

கூட்டங்களின் எண்ணிக்கை, நடைபெற்ற திகதிகள் மற்றும் வருகைப் பதிவுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| கூட்ட இல. | கூட்டம் நடைபெற்ற திகதி | சமூகமளித்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | சமூகமளிக்க விலக்க அளிக்கப்பட்டவர்கள் | சமூகமளிக்காத வர்கள் | புதவி விலகியவர்கள் |
|---|---|---|---|---|---|
| 43 ஆவது கூட்டம் | 17.01.2024 | 12 | - | 04 | - |
| 44 ஆவது கூட்டம் | 21.02.2024 | 12 | 01 | 02 | - |
| 45 ஆவது கூட்டம் | 20.03.2024 | 11 | - | 06 | - |
| 46 ஆவது கூட்டம் | 19.04.2024 | 11 | 01 | 05 | - |
| 47 ஆவது கூட்டம் | 22.07.2024 | 09 | 03 | 05 | - |
| 48 ஆவது கூட்டம் | 07.08.2024 | 09 | 04 | 04 | - |
| 49 ஆவது கூட்டம் | 18.09.2024 | 07 | 02 | 08 | 01 |
| 50 ஆவது கூட்டம் | 29.10.2024 | 08 | 06 | 02 | 02 |
| 51 ஆவது கூட்டம் | 20.12.2024 | 09 | 02 | 02 | 02 |

***அட்டவணை 1*** *- முகாமைத்துவ சபையின் கூட்ட விபரங்கள்*

மீளாய்வாண்டில் முகாமைத்துவச் சபையானது (BoM) பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

**பதவி – வழி**

**பணிப்பாளர்/ PGIIM**
பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரகோன் 03.02.2024 முதல்
பேராசிரியர் கிறிஷாந்த அபேசேன 02.02.2024 வரை

**பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலர்/ உயர் கல்வி அமைச்சின் செயலாளர்**
திருமதி எம்.எச்.டீ.டீ. துஷாரா

**பெயர் குறிப்பிடப்பட்ட அலுவலர்/ சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர்**
திருமதி. யூ.எஸ்.கே. தெனவத்த

**நிதி அமைச்சின் நியமத்தர்/செயலாளர்**
செல்வி எச்.டி.டி.பீ. கருணாரத்ன

**ஆயுர்வேத ஆணையாளர்**
திரு. தம்மிக அபேகுணவர்தன

**முன்னாள் பணிப்பாளர்**
பேராசிரியர் கிறிஷாந்த அபேசேன 03.02.2024 முதல்
பேராசிரியர் ஜயந்த ஜயவர்தன 02.02.2024 வரை

**தலைவர், சித்த மருத்துவ அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
வைத்தியர் (திருமதி) விவியன் சத்தியசீலன் 22.07.2024 வரை

**பணிப்பாளர்- பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத நிறுவகம்**
வைத்தியர் சுவர்ணா களுதொடகே – பதில் பணிப்பாளர்/BIMA] 01.01.2024 முதல்

**சிறப்பு தர மருத்துவர் (ஆயுர்வேதம்)**
வைத்தியர் டி.கே.ஜி. புஞ்சிஹேவா

**சிறப்பு தர மருத்துவர் (சித்த மருத்துவம்)**
கலாநிதி (திருமதி) எஸ்.வர்ணகுலேந்திரன்

**சிறப்பு தர மருத்துவர் (யூனானி)**
வைத்தியர் ஏ.ஜி.எ.ப். நஜீயா

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நியாயமான உறுப்பினர்கள்**
திரு.த.தர்மராஜா
திரு. S.D.W சமன் தியாகஹ வடுகே 15.10.2024 வரை

திரு. கே.கே. சமிந்த பிரயங்கா கோனார
வைத்தியர். டபிள்யூ.ஏ.எல். சந்திரசிறி வெலிவிட்ட 18.09.2024 வரை
பேராசிரியர் ஜயந்த ஜயவர்தன 18.09.2024 முதல்

**பேரவையினால் நியமித்த அலுவலர்கள்**
திரு.மஹிந்த மடிஹேவா
திரு.சன்ன த சில்வா

**அழைக்கப்பட்டவர்**
பேராசிரியர் பி.கே. பெரேரா – பீடாதிபதி / சுதேச மருத்துவ பீடம் 07.08.2024 முதல்

**1.4 நிதிக் குழு**
மீளாய்வாய்டில் நிதிக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரகோன் - பணிப்பாளர், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்
பேராசிரியர் கிறிஷாந்த அபேசேன - முகாமைத்துவ சபை உறுப்பினர்
திரு. டீ. தர்மராஜா - முகாமைத்துவ சபை உறுப்பினர்
திரு.மஹிந்த மடிஹேவா - முகாமைத்துவ சபை உறுப்பினர்

கூட்ட எண்ணிக்கை, கூட்டங்களின் திகதிகள் மற்றும் வருகைப் பதிவுகள் பின்வருமாறாகும்.

| **கூட்ட இல.** | **கூட்டம் நடைபெற்ற திகதி** | **சமூகமளித்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை** | **சமூகமளிக்காமை தொடர்பாக அறிவித்த எண்ணிக்கை** | **சமூகமளிக்காத் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 18வது (2024/01) | 13.02.2024 | 04 | ----- | - |
| 19வது (2024/02) | 05.08.2024 | 04 | -- | - |

***அட்டவணை 2*** *– நிதிக் குழுவின் கூட்ட விபரங்கள்*

**1.5 கல்விச் சபைகள்**
கல்விசார் விடயங்கள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான முடிவுகள் கொழும்புப் பல்கலைக்கழகம், மூதவை என்பவற்றின் அனுமதிக்கமைவாக, கல்விசார் சபை (BOS) மற்றும் நிபுணத்துவ சபை (SpB) ஆகியவற்றால் மேற்கொள்ளப்படுகின்றது. கல்விசார் சபை மற்றும் நிபுணத்துவ சபை கூட்டங்களும் மாதத்திற்கு ஒரு முறை நடாத்தப்படும்.

### 1.5.1 கற்கைச் சபை

***கற்கைச் சபையின் பட்டியல்***

ஆயுர்வேத மருத்துவ கற்கைச் சபை

சித்த மருத்துவ கற்கைச் சபை

யுனானி மருத்துவ கற்கைச் சபை

**2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற கற்கைச் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை**

| சபையின் பெயர் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஆயுர்வேதம் | 10 |
| சித்தம் | 07 |
| யுனானி | 09 |

***அட்டவணை 3*** *- கற்கைச் சபைக் கூட்டங்களின் விபரங்கள்*

**கற்கைச் சபையின் தலைவர்களும் செயலாளர்களும் - 2023**

| கற்கை சபை | தலைவர் | செயலாளர் |
|---|---|---|
| ஆயுர்வேத மருத்துவம் | பேராசிரியர் எஸ்.கே.எம்.கே. ஹேராபத்தெனிய | மருத்துவர் பி.எம்.எஸ்.அமரஜீவ |
| சித்த மருத்துவம் | வைத்தியர் என்.வர்ணகுலேந்திரன் | வைத்தியர் கே.சௌந்தராஜன் |
| யுனானி மருத்துவம் | பேராசிரியர் எம்.எஸ்.எம்.ஷிபா | பேராசிரியர் எம்.சீ.எம். மஹீஸ் |

***அட்டவணை 4 -*** *கல்விச் சபையின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்*

### 1.5.2 விசேடித்த துறைச் சபைகள்

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி ஆகிய துறைகளின் பொருட்டு 12 விசேடித்த துறைச் சபைகள் உள்ளன.

**விசேடித்த துறைச் சபைகள்**

***ஆயுர்வேத மருத்துவம்***

கௌமாரபிரித்ய விசேடித்த துறைச் சபை

காய சிகிச்சை விசேடித்த துறைச் சபை

பிரசூதிதந்திர விசேடித்த துறைச் சபை

சல்லியதந்திர விசேடித்த துறைச் சபை

ஸ்வஸ்தவ்ரித்த விசேடித்த துறைச் சபை

பைசஜ்ய கல்பனா மற்றும் ரசஷாஸ்திர விசேடித்த துறைச் சபை

சாலக்ய விசேடித்த துறைச் சபை

***சித்த மருத்துவம்***

குணபாடம் விசேடித்த துறைச் சபை

மருத்துவம் விசேடித்த துறைச் சபை

***யுனானி மருத்துவம்***

மௌலிஜித் விசேடித்த துறைச் சபை

இல்முல் அத்வியா விசேடித்த துறைச் சபை

அம்ராஸ்-இ-நிஸ்வான் விசேடித்த துறைச் சபை

**2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற விசேடித்த துறைச் சபை கூட்டங்களின் எண்ணிக்கை**

| **சபையின் பெயர்** | **நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| **ஆயுர்வேத மருத்துவம்** | |
| பைசஜ்ய கல்பனா மற்றும் ரசசாத்திர | 04 |
| கௌமாரபிரித்யா | 09 |
| கயாச்சிகித்சகா | 09 |
| பிரசுதிதந்தரா | 09 |
| ஷல்யதந்திரம் | 06 |
| ஸ்வஸ்தாவ்ரிதா | 09 |
| ஷாலாக்யா | 12 |
| **சித்த மருத்துவம்** | |
| குணபாதம் | 07 |
| மருத்துவம் | 07 |
| **யுனானி மருத்துவம்** | |
| மௌலிஜித் | 09 |
| இல்முல் அத்வியா | 01 |
| அம்ராஸ்-இ-நிஸ்வான் | 01 |

***அட்டவணை 5*** *- விசேடித்த துறைச் சபை கூட்டங்களின் விபரங்கள்*

***விசேடித்த துறைச் சபைகளின் தவிசாளர்களும் செயலாளர்களும் - 2024***

| நிபுணத்துவ சபை | தவிசாளர் | செயலாளர் |
|---|---|---|
| **ஆயுர்வேத மருத்துவம்** | | |
| கௌமாரபிரித்யா | வைத்தியர் ஐ. ஏ. எம். லீனா | வைத்தியர் ஓ.டி.எம்.ஆர்.கே.எஸ்.பி. கலவான |
| கயாச்சிகித்சகா | வைத்தியர் டி.கே.ஜி. புஞ்சிஹேவா | வைத்தியர் இ.டி.டி.பி. குணரத்ன |
| பிரசுதிதந்தரா | வைத்தியர் திருமதி கே.பி.கே.ஆர். கருணாகொட | வைத்தியர் எச்.எல்.எம்.ஜி. சஞ்ஜீவனி |
| ஷால்யதந்திரம் | வைத்தியர் பீ.ஜீ.டி.பீ.கே. குமார | வைத்தியர் கே.கே.வி.எஸ். பேஷல |
| ஸ்வஸ்தாவ்ரிதா | பேராசிரியர் எம்.ஆர்.எஸ். பீரிஸ் | வைத்தியர் ஐ. ஏ. எம். லீனா |
| பைசஜ்யா கல்பனா | வைத்தியர் எஸ்.கே.எம்.கே. ஹேரபத்தெனிய | வைத்தியர் எம்.வீ,ஆர். வைஜயந்திமாலா |
| ஷாலாக்யா | பேராசிரியர் கே.பி.பி. பீரிஸ் | வைத்தியர் ஆர். எல். வை. யூ. ரத்னாயக்க |
| **சித்த மருத்துவம்** | | |
| குணபாடம் | வைத்தியர். (திருமதி) வி.சத்தியசீலன் | வைத்தியர் எஸ். கனகசுந்தரம் |
| மருத்துவம் | வைத்தியர். (திருமதி) ஏ. ஸ்ரீதரன் | வைத்தியர் திருமதி எஸ். வர்ணகுலேந்திரன் |
| **யுனானி** | | |
| மொய்லிஜாத் | பேராசிரியர் எம்.சீ.எம். மஹீஸ் | வைத்தியர் ஏ.எல்.எம் இஸான் |
| இல்முல் அத்வியா | | வைத்தியர் பி.ஜ.நிஹாரா |
| அம்ராஸ்-இ-நிஸ்வான் | பேராசிரியர்.எம்.யு.இசட்.என்.ஃ.பர்ஸானா | வைத்தியர் ஜே.ருமைசா |

**அட்டவணை 6 -** *விசேடித்த துறைச் சபைகளின் தவிசாளர்களும் செயலாளர்களும்*

**1.6 நூலகக் குழு**

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பொருட்டு நூலகமொன்றை தாபித்தல் மற்றும் நூலகச் செயல்பாடுகளுக்குத் தேவையான பரிந்துரைகளைப் பெறுவதற்கும் 2021 ஆம் ஆண்டில் ஒரு நூலகக் குழு உருவாக்கப்பட்டது. பின்வரும் உறுப்பினர்கள் 2024.12..31 ஆம் திகதியில் இந்த நூலகக் குழுவில் பணியாற்றியுள்ளனர்.

*குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது:*

பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரகோன் - பணிப்பாளர் /PGIIM – தலைவர்

பேராசிரியர் டபிள்யூ.எம்.எஸ்.எஸ்.கே. குலதுங்க - சுதேச மருத்துவ பீடம்

வைத்தியர் ஜுஹ.ஃபர் ருமைசா - சுதேச மருத்துவ பீடம்

வைத்தியர் க.சௌந்தர்ராஜன் – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வைத்தியர் சி.கே. கமகே - முதுநிலை உதவி நூலகர், சுதேச வைத்திய பீடம்

திரு. டி.ஜி.ஆர்.எல். குணரத்ன - உதவி நூலகர், PGIIM

திருமதி டப்ளியூ.என்.பீ.எம்.என்.என். கருணாரத்ன - முதுநிலை உதவிப் பதிவாளர், PGIIM

திருமதி அனுஷிகா - முதுநிலை உதவியாளர் பர்சர், PGIIM

கூட்டங்களின் எண்ணிக்கை, கூட்டங்களின் திகதிகள் மற்றும் வருகைப் பதிவுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| **கூட்ட இல.** | **கூட்டம் நடைபெற்ற திகதி** | **சமூகமளித்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை** | **சமூகமளிக்காமை தொடர்பாக அறிவித்த எண்ணிக்கை** | **சமூகமளிக்காத உறுப்பினர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 9 ஆவது கூட்டம் | 27.02.2024 | 06 | 02 | 0 |
| 10 ஆவது கூட்டம் | 09.12.2024 | 07 | 01 | 0 |

***அட்டவணை 7*** *– நூலகக் குழுவின் கூட்ட விபரங்கள்*

### 1.7 பாடவிதான அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழு (CDEC)

2021 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகளை அடைவதற்காக பாடவிதான அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழு நிறுவப்பட்டது.

- பாடத்திட்டங்களை உருவாக்குதல், பாடத்திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பாடத்திட்டங்களை முகாமைத்துவ சபைக்குப் பரிந்துரைத்தல்
- கல்வி சார்ந்த விடயங்கள் மற்றும் தேர்வுகள் தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் ஆவணங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் மேற்படி ஆவணங்களை முகாமைத்துவ சபைக்குப் பரிந்துரை செய்தல்.

31.12.2024 இன்படி பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழுவில் பின்வரும் உறுப்பினர்கள் பணியாற்றினர்.

குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது.

| | |
|---|---|
| பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரகோன் | பணிப்பாளர் / PGIIM |
| டாக்டர் இ.டி.டி.பி. குணரத்ன.்.தலைவர் | சுதேச மருத்துவ பீடம், UOC |
| பேராசிரியர் ப்ரியாணி பீரிஸ் | GWUIM |
| பேராசிரியர் கோமிந்த பொன்னம்பெரும | பணிப்பாளர் - தர உறுதி மையம், UOC |

| | |
|---|---|
| பேராசிரியர் பந்துல சிறிபத்தன | மருத்துவக் கல்வி, PGIM<br>கொழும்புப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் எஸ்.பாலமனோஹரி | சித்த மருத்துவ பீடம்<br>திருகோணமலை வளாகம் |
| பேராசிரியர் எஸ்.பி. மொல்லிகொட | சுதேச மருத்துவ பீடம், UOC |
| வைத்தியர் ஓ.டி.எம்.ஆர்.கே.எஸ்.பி. கலவானா | சுதேச மருத்துவ பீடம், UOC |
| வைத்தியர் பி.எம்.எஸ். அமரஜீவ | சுதேச மருத்துவ பீடம், UOC |
| வைத்தியர் ஏ.எல்.எம்.இஹ்ஸான் | சுதேச மருத்துவ பீடம், UOC |
| வைத்தியர் கே.கே.வி.எஸ். பே'லா | சுதேச மருத்துவ பீடம், UOC |
| திருமதி டப்ளியூ.என்.பீ.எம்.என்.என். கருணாரத்ன | முதுநிலை உதவிப் பதிவாளர் / செயலாளர் / CDEC |

ஆறு நடந்து வரும் எம்.டி. ஆயுர்வேத திட்டங்கள் மற்றும் எம்.டி. யுனானி திட்டத்திற்கான பின்வரும் விளக்கக் குறிப்புகள் 2024 ஆம் ஆண்டில் பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழுவால் திருத்தப்பட்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூதவையிலிருந்து ஒப்புதல் பெறப்பட்டன.

- ஆயுர்வேத கயாச்சிகித்சகா மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ்
- ஆயுர்வேத கௌமாரபிரித்யா மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ்
- ஆயுர்வேத ஷால்யதந்திரம் மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ்
- ஆயுர்வேத பிரசுதிதந்திர ஸ்ட்ரீரோகா மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ்
- ஆயுர்வேத ஸ்வஸ்தாவ்ரிதா மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ்

2023 ஆம் ஆண்டில் பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழவினால் தேஷிய சிகிச்சையில் மருத்துவ கலாநிதி மற்றும் ஆயுர்வேத சமூக சுகாதார அபிவிருத்தி சபைச் சான்றிதழ் மற்றும் முதுகலை டிப்ளோமா ஆகியவற்றிற்கான தகவலறிக்கையை உருவாக்கத் தொடங்கியது.

மேற்கூறிய கடமைகளுக்கு மேலதிகமாக பாடவிதான அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக் குழு (CDEC) தற்போது நடாத்தப்படுகின்ற நிபுணத்துவ பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பயிலுநர்களின் பின்னாய்வுகளை அடையாளம் காண்பதற்காக, குறித்த நிகழ்ச்சித்திட்டஙகளை மதிப்பிடுவதற்கான தரவுகளை சேகரிக்கும் பொருட்டு வினாக்கொத்து தாயரிக்கும் பணியில் ஈடுபட்டது. சுதேச மருத்துவம் தொடர்பான பட்ட பின்படிப்பு தேவைகளை அடையாளம் காணுதல்

மிகவும் முக்கியம் என்பதால் பாடவிதான அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுக்குழு 2024 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தேவைகளின் மதிப்பீடை மேற்கொண்டது. சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களினது தரத்தினை சான்றுப்படுத்தும் பொருட்டு இச் செயற்பாடுகள் மிக முக்கியமாகும்.

### 1.8 சர்வதேச ஒத்துழைப்புக்கான குழு (CIC)

சுதேச மருத்துவம் தொடர்பான உயர் கல்வியை மேம்படுத்துவதற்காக ஏனைய நாடுகளுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்திக்கொள்ளும் செயற்பாட்டினை துரிதப்படுத்தும் நோக்கத்துடன சர்வதேச ஒத்துழைப்புக்கான குழு தாபிக்கப்பட்டது. தற்போதுள்ள நிபுணத்தவ மருத்துவ பட்டங்களை மருத்துவ கலாநிதி (MD) கற்கின்ற பயிற்சிபெறுநர்களின் பட்டப்பின் நிபுணத்துவ மருத்துவ பட்டங்களின் பயிற்சிக்காக வாய்ப்புகளை உருவாக்குதல் குழுவின் ஆரம்பித்தல் காணப்பட்ட இலக்கு ஆகும். 31.12.2024 இன்படி சர்வதேச ஒத்துழைப்புகளுக்கான குழுவில் பின்வரும் உறுப்பினர்கள் பணியாற்றினர்.

*குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது.*

| | |
|---|---|
| பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரகோன் | பணிப்பாளர் / PGIIM |
| பேராசிரியர் ப்ரியாணி பீரிஸ் | GWUIM |
| பேராசிரியர் எஸ்.கே.எம்.கே. ஹேரபத்தெனிய | சுதேச மருத்துவ பீடம், UOC |
| பேராசிரியர் எம்.எஸ்.எம். ீ.ூபா | சுதேச மருத்துவ பீடம், UOC |
| வைத்தியர் பி.எம்.எஸ். அமரஜீவ | சுதேச மருத்துவ பீடம், UOC |
| கலாநிதி டி.வீரரத்ன | சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு |
| பேராசிரியர் கே.பி.கே.ஆர். கருணாகொட | சுதேச மருத்துவ பீடம், UOC |
| வைத்தியர் ஐ.ஏ.எம். லீனா | சுதேச மருத்துவ பீடம், UOC |
| வைத்தியர் கே.கே.வி.எஸ். பே'ாலா | சுதேச மருத்துவ பீடம், UOC |
| வைத்தியர் ஏ. ஸ்ரீதரன் | சித்த மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் என்.டி.என். ஜெயவர்தன | சுதேச மருத்துவ பீடம், UOC |
| திருமதி டப்ளியூ.என்.பீ.எம்.என்.என். கருணாரத்னா | முதுநிலை உதவி பதிவாளர் |

திருமதி எம்.என். அனுரீகா | முதுநிலை உதவி கணக்காளர்

சர்வதேச ஒத்துழைப்புக்கான குழு, சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பயிலுநர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்காக சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் மற்றும் இந்தியாவின் முதன்மையான பல்கலைக்கழகம் என்பவற்றுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசு மற்றும் இந்தியாவின் ஆயுஸ் (Ayush) அமைச்சு என்பவற்றுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றது. கூடுதலாக, சிறப்பு சபைகள் மற்றும் ஆயுர்வேத மருத்துவ ஆய்வு சபை மற்றும் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமைத்துவச் சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில், பின்வரும் நிறுவனங்கள் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் க்கான வெளிநாட்டு பயிற்சி மையங்களாக நியமிக்கப்பட்டுள்ளன:

- பனாரஸ் இந்து பல்கலைக்கழகம் (BHU), வாரணாசி, இந்தியா
- ஆயுர்வேத கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (ITRA), ஜாம்நகர், இந்தியா
- தேசிய ஆயுர்வேத நிறுவனம், ஜெய்பூர், இந்தியா
- SDM ஆயுர்வேத கல்லூரி, பெங்களூர், இந்தியா
- அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம், புது தில்லி, இந்தியா.

### 1.9 உள்ளகத் தர உறுதிப் பிரிவு (IQAC)

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் உள்ளகத் தர உறுதிப் பிரிவு (IQAC) பல்கலைக்கழகங்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2014 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களின் படி கொழும்பு பல்கலைக்கழகத்தின் உள்ளகத் தரக் காப்பீட்டுப் பிரிவின் கட்டளையின் கீழ் 2022 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. PGIIM - உள்ளகத் தர உறுதிப் பிரிவு (IQAC) உரிய அதிகாரத்துவம் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள தர சான்றுப்படுத்தல் கொள்கை சட்டகம் மற்றும் துணைச் சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன.

உள்ளகத் தர உறுதிப் பிரிவு (IQAC) மூலம் உயர்தர சேவையை வழங்குவதற்காக கற்கை சபை பதவியணி, நிர்வாக பதவியணி, கல்விசாரா பதவியணி மற்றும் மாணவர்கள் அடங்கலாக பல பங்குதாரர்களின் பங்கேற்புடனான வலுவான நிறுவனமாகும். கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வடிவமைத்தல் மற்றும் முன்னேற்றத்தை கண்காணிப்பதன் மூலம் நிறுவனம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் தரங்களை உறுதி செய்வதே இப்பிரிவின் செயல்பாடு ஆகும்.

31.12.2024 இன்படி, பின்வரும் உறுப்பினர்கள் முதுகலை சுதேச மருத்துவ நிறுவனத்தின் (IQAC-PGIIM) உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவில் பணியாற்றினர்.

குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது.

| | |
|---|---|
| பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரகோன் | பணிப்பாளர் / PGIIM |
| பேராசிரியர் கே.பி.பி. பீரிஸ் | கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் (திருமதி) என். பஹாமியா | சுதேச மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் (திருமதி) எம்.யூ.ஜீ.என். /பர்சானா | சுதேச மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| டாக்டர் பி.எம்.எஸ். அமரஜீவ | சுதேச மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் டபிள்யூ.எம்.எஸ்.எஸ்.கே. குலதுங்க | சுதேச மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் (செல்வி) வி.சத்தியசீலன் | சுதேச மருத்துவப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் ஐ.ஏ.எம். லீனா | சுதேச மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் கே.கே.வி.எஸ். பேஷாலா | சுதேச மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் ஒய்.ஏ.யு.டி. கருணாரத்ன | சுதேச மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் (செல்வி) பி.உதயனன் | சுதேச மருத்துவப் பீடம், திருகோணமலை வளாகம் (ஒருங்கிணைப்பாளர் / IQAC) |
| செல்வி நதீ்ஷா கருணாரத்ன | உதவி சிரேஷ்ட பதிவாளர் |
| செல்வி எம்.என். அனுஷிகா | உதவி சிரேஷ்ட நிதியாளர் |
| திரு. டி.ஜி.ஆர்.எல் குணரத்ன | உதவி நூலகர் (அவை ஏற்பாட்டாளர் / IQAC) |
| வைத்தியர் பி.எம். ரிஷாட் | யுனானி மருத்துவத்தில் பிரதிநிதி |
| வைத்தியர் எம்.எம்.ஏ.ஃப். ஷிஹாரா | ஆயுர்வேத மருத்துவத்தில் முப்படைகளின் பிரதிநிதி |

வைத்தியர் பி.எல். எதிரிசிங்க சிரேஷ்ட பதிவாளர்களிடையே பிரதிநிதி

கூட்ட எண்கள், கூட்டங்களின் திகதிகள் மற்றும் வருகைப் பதிவுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| கூட்டம் எண் | கூட்டத் திகதி | கலந்து கொண்ட உறுப்பினர்களி | மன்னிக்கப்பட்டது | கலந்து கொள்ளவில்லை |
|---|---|---|---|---|
| 09வது கூட்டம் – | 23.01.2024 | 09 | 05 | 03 |
| 10வது கூட்டம் – | 28.02.2024 | 06 | 07 | 04 |
| 11வது கூட்டம் – | 26.03.2024 | 09 | 06 | 02 |
| 12வது கூட்டம் – | 22.04.2024 | 07 | 03 | 07 |
| 13வது கூட்டம் - | 27.05.2024 | 10 | 03 | 04 |
| 14வது கூட்டம் - | 24.07.2024 | 13 | 02 | 02 |
| 15வது கூட்டம் – | 27.08.2024 | 12 | 01 | 04 |
| 16வது கூட்டம் – | 27.09.2024 | 09 | 05 | 03 |
| 17வது கூட்டம் – | 23.10.2024 | 12 | 03 | 02 |
| 18வது கூட்டம் – | 26.11.2024 | 10 | 06 | 1 |

***அட்டவணை 8*** – உள்ளகத் தர உறுதிப் பிரிவின் *கூட்ட விபரங்கள்*

### 1.10 சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சி சஞ்சிகைக் குழு (JPGIIM)

பல்கலைக்கழகங்கள் என்பது பொதுவாக அறிவை உருவாக்கும் மற்றும் அறிவை கடத்தும் மையங்களாகக் கருதப்படுவதுடன், பல்கலைக்கழகங்கள், அறிவை உருவாக்குவதிலும் பரப்புவதிலும் மிக முக்கியமான கடமைப்பொறுப்புகளை வகிக்கின்றன. பாரம்பரிய சிகிச்சை மற்றும் மருத்துவம் ஊடாக ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குவதனை சான்றுப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு கலாச்சார மரபுரிமைகள் மற்றும் பாரம்பரிய அறிவைப் பாதுகாப்பதும் இதில் அடங்கும்.

சுதேச மருத்துவத் துறையில் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, சுதேச மருத்துவத் துறையில் புதிய ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் வெளியிடுவதற்கும் வாய்ப்புகளை வழங்குவதற்காக, PGIIM, சுதேச மருத்துவத் துறைக்காக ஒரு திறந்த அணுகல் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழை ஆரம்பிக்கத் திட்டமிட்டது. மேலும், ஆசிரியர்கள், நூலாசிரியர்கள் மற்றும் விமர்சகர்கள், இதழின் பெயரைத் தேர்ந்தெடுத்தல், காகிதத் தேர்வுக்கான அளவுகோல்களை நிறுவுதல் மற்றும் இதழின் ஒட்டுமொத்த தரத்தை உறுதி செய்தல் ஆகியவற்றின் பொறுப்புடன் 2023 இல் சஞ்சிகைக் குழு நியமிக்கப்பட்டது. இப் பணிகளை இக் குழு வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளமை, இதழின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் ஒரு உறுதியான அடித்தளத்தை அமைத்துள்ளது.

சஞ்சிகைக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது.

| | |
|---|---|
| பேராசிரியர் எஸ்.எம்.எஸ். சமரகோன் | பணிப்பாளர் / PGIIM |
| பேராசிரியர் கே.பி.பி. பீரிஸ் | கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் எஸ்.பி. மொல்லிகொட | சுதேச மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் என். ஃபஹாமியா | சுதேச மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் பி.கே பெரேரா | பீடாதிபதி, சுதேச மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் டபிள்யூ.ஏ.வீரசூரிய | நூலகம் மற்றும் தகவல் அறிவியல் துறை குளுளு, களனிப் பல்கலைக்கழகம |
| கலாநிதி று.யு.ளு.ளு.வீரகோன் | சுதேச மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் (திருமதி) என். நவலட்சுமி | சித்த மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| வைத்தியர் (திருமதி) பி. உதயணன் | சித்த மருத்துவ பீடம், திருகோணமலை வளாகம், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி நிரா'ா குணரத்ன | சுதேச மருத்துவ பீடம், கம்பஹா விக்கிரமராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி நிலுகா குணதிலக்க | சுகாதார அமைச்சு |
| வைத்தியர் யசஸ்வி வல்பிதா | சமூக மருத்துவத் துறை, மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம் |
| திரு. டி.ஜி.ஆர்.எல். குணரத்ன | உதவி நூலகர் / PGIIM |

அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, பட்டப்பின் முகாமைத்துவ நிறுவனத்தின் (JPGIIM) இதழின் ஆசிரியர் குழு மற்றும் ஆலோசனைக் குழுவிற்கு பின்வரும் உறுப்பினர்களை குழு நியமித்தது.

*JPGIIM இன் ஆசிரியர் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.*

பேராசிரியர் எஸ். எம். எஸ். சமரக்கோன் - தலைமை ஆசிரியர்
இயக்குநர், சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவனம், கொழும்புப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் (திருமதி) கே.பி.பி. பீரிஸ் - நிர்வாக ஆசிரியர்
சாலியா'ாலக்யா துறை, சுதேச மருத்துவ பீடம், கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்

திரு. டி.ஜி.ஆர்.எல்.குணரத்ன - இணை ஆசிரியர்
உதவி நூலகர் - கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவனம்

பேராசிரியர் எஸ்.கே.எம்.கே. ஹெரபத்தெனிய
திரவ்யகுண விஞ்ஞான மற்றும் ஸ்வஸ்தவ்ரித்தா துறை, சுதேச மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்

வைத்தியர் (திருமதி) இ.டி.டி.பி. குணரத்ன
கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆயுர்வேத மருத்துவம் மற்றும் சுதேச மருத்துவத் துறை

பேராசிரியர் நிஷா குமாரி ஓஜா
பீடாதிபதி, உயர் புலமைபரிசில் மற்றும் பட்டப்பின் ஆய்வுகள், கௌமர்பிரித்யா துறையின் தலைவர், இந்தியா

பேராசிரியர் எம்.யு.இசட்.என். பர்சானா
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடம், யுனானி மருத்துவ மருத்துவத் துறை

பேராசிரியர் என். பஹ்ராமியா
கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடம், இல்முல் அத்வியா துறை.

பேராசிரியர் எம்.எஸ்.எம். ஷிபா
யுனானி மருத்துவ மருத்துவத் துறை, சுதேச மருத்துவ பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

உதவி பேராசிரியர் ஷாஹித் ஷா சவுத்ரி
இல்முல் சைட்லா துறை, யுனானி மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி பள்ளி, ஜாமியா ஹம்தார்ட், புது தில்லி, இந்தியா

வைத்தியர் (செல்வி) கே.சௌந்தரராஜன்
முதுநிலை விரிவுரையாளர் தரம் 1, சித்த மருத்துவப் பிரிவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வைத்தியர் (செல்வி) ஏ. ஸ்ரீதரன்
முதுநிலை விரிவுரையாளர் தரம் 1, சித்த மருத்துவப் பிரிவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

முனைவர் பி.செல்வா சண்முகம்
தலைவர் - சித்த மருத்துவம் மற்றும் ஆராய்ச்சிக்கான உலகளாவிய மையம், சென்னை, இந்தியா

கூட்ட எண்கள், கூட்டங்களின் திகதிகள் மற்றும் வருகைப் பதிவுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| **கூட்டம் எண்** | **கூட்டத் திகதி** | **கலந்து கொண்ட உறுப்பினர்களின்** | **மன்னிக்கப்பட்டது** | **கலந்து கொள்ளவில்லை** |
|---|---|---|---|---|
| 01வது கூட்டம் | 10.12.2024 | 08 | 04 | 0 |

**அட்டவணை 9 -** *சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சி சஞ்சிகைஆசிரியர் குழுவின் கூட்ட விபரங்கள்*

இதழின் பாதை மற்றும் தரம் குறித்த மூலோபாய வழிகாட்டுதல் மற்றும் நிபுணர் ஆலோசனையை வழங்க JPGIIM இன் ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழு தலையங்க நடைமுறைகளை பரிந்துரைத்தல், கொள்கைகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் வளர்ந்து வரும் போக்குகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்குவதன் மூலம் கல்வி முனைப்பை உறுதி செய்கிறது. காகிதத் தேர்வு குறித்து ஆலோசனை வழங்குவதன் மூலமும் அதன் ஒட்டுமொத்த வெற்றிக்கு பங்களிப்பதன் மூலமும் இதழின் தரநிலைகள் மற்றும் நம்பகத்தன்மையை நிலைநிறுத்தவும் சபை உதவுகிறது.

JPGIIM இன் ஆலோசனைக் குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

**வாழ்நாள் பேராசிரியர் ஜயந்த ஜயவர்தனே**
முன்னாள் பணிப்பாளர் - சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம்.

**பேராசிரியர் பர்னீத் அபயசுந்தர**
சமூகவியல் மற்றும் மானுடவியல் துறை, இலங்கை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

**பேராசிரியர் ரவிநாராயண் ஆச்சார்யா**
பணிப்பாளர் நாயகம், இந்து ஆயுர்வேத அறிவியல் மத்திய ஆராய்ச்சி பேரவை, இந்தியா

**பேராசிரியர் எச்.எம். சந்தோலா**
முன்னாள் பீடாதிபதி, ஜீபுவு மற்றும் சுயு, குஜராத் ஆயுர்வேத பல்கலைக்கழகம், இந்தியா

**முதுநிலை பேராசிரியர் கிருஷாந்த அபேசேனா**
முன்னாள் பணிப்பாளர் - உள்நாட்டு மருத்துவ பட்டப்பின் நிறுவனம்
பொது சுகாதாரத் துறை, மருத்துவ பீடம், களனி பல்கலைக்கழகம், இலங்கை.

**வைத்தியர் எம்சிஎம் மஹ்ரீஸ்**
முதுநிலை விரிவுரையாளர் தரம் 1, இல்முல் அட்வியா துறை, சுதேச மருத்துவப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

**வைத்தியர் என். ஜாகீர் அகமது**
ஆயுஸ் அமைச்சின் மத்திய ஆராய்ச்சி பேரவை (CCRUM) பணிப்பாளர் நாயகம், இந்திய அரசு, நியூ டெலி, இந்தியா.

**வைத்தியர் என். வர்ணகுலேந்திரன்**
முதுநிலை விரிவுரையாளர் தரம் 1, சித்த மருத்துவ பீடம், திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
**வைத்தியர் (செல்வி) வி.சத்தியசீலன்**
முதுநிலை விரிவுரையாளர் தரம் 1, சித்த மருத்துவப் பிரிவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
**பேராசிரியர் (டாக்டர்) ஆர். மீனாகுமாரி**
பணிப்பாளர், சித்தா தேசிய நிறுவனம் (NIS), தாம்பரம் சானிடோரியம், சென்னை, இந்தியா

அதன்படி, *சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவனத்தின் (JPGIIM) இதழ்*, மார்ச் 2025 இல் வெளியிட திட்டமிடப்பட்ட அதன் தொடக்க இதழான *தொகுதி 1, இதழ் 1* க்கு 2024 இல் சமர்ப்பிப்புகளை ஏற்கத் தொடங்கியது. வரும் ஆண்டில் இதழை வெற்றிகரமாக வெளியிடுவதை நோக்கி ஆசிரியப்பீட குழு தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

## 2. 2024 ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகள்

### 2.1 சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பயிற்சி பெறுவோரின் பதிவு விபரங்கள்

2024 ஆம் ஆண்டில் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் பட்டப்பின் படிப்பு கற்கைநெறி பொருட்டு பதிவாகிய பயிலுநர்களின் எண்ணிக்கை பின்வருமாறு ஆகும்.

| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | முழுநேர/ பகுதி நெர | மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் பொருட்டு பதிவாகிய பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை (2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை) | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| ஆயர்வேத கௌமாரபிரித்ய மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 0 | 2 | 2 |
| ஆயர்வேத காயகிசட்சா மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 0 | *5 | 5 |
| ஆயர்வேத பிரசூதிதந்திர ஸ்த்ரீரோக மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 0 | 2 | 2 |
| ஆயர்வேத சல்யதந்திர மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 1 | 0 | 1 |
| ஆயர்வேத சுவஸ்தவிருத்த மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | | **1** | **9** | **10** |

***அட்டவணை 10*** *– மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் பொருட்டு பதிவாகிய பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை விபரங்கள்*

**01 ஆயுர்வேத கயாச்சிகிட்சா மற்றும் சபைச் சான்றிதழ் துறையில் எம்.டி.யில் பதிவு செய்த பயிற்சியாளர் அந்தப் படிப்பிலிருந்து விலகினார்.*

### 2.2 சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை

2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் பட்டப்பின் படிப்பிற்காக உள்ளடக்கப்பட்டுள்ள பயிற்சி பெறுநர்களின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

2.2.1 PGIIM இன் முன்-MD பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை

| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | முழுநேர/ பகுதி நெர | மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் பொருட்டு பயிற்சி பெறுநர்களின் முழு எண்ணிக்கை (2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை) | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| ஆயர்வேத கௌமாரபிரித்ய மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 0 | 4 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆயர்வேத காயகிசட்சா மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 0 | 6 | 6 |
| ஆயர்வேத பிரசூதிதந்திர ஸ்த்ரீரோக மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 0 | 5 | 5 |
| ஆயர்வேத சல்யதந்திர மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 1 | 1 | 2 |
| ஆயர்வேத சுவஸ்தவிருத்த மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 0 | 0 | 0 |
| யுனானி மௌலிஜாத் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | 1 | 1 | 2 |
| **மொத்தம்** | | **2** | **17** | **19** |

***அட்டவணை 11*** *- மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் பொருட்டு பயிற்சி பெறுநர்களின் முழு எண்ணிக்கை*

### 2.2.3 சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட பதிவாளர் பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை

| **கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்** | **முழுநேர/ பகுதி நெர** | **சிரேஷ்ட பதிவாளர் பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை (2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை)** | | |
|---|---|---|---|---|
| | | **ஆண்** | **பெண்** | **மொத்தம்** |
| ஆயர்வேத கௌமாரபிரித்ய மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | **01** | **01** | **02** |
| ஆயர்வேத காயகிசட்சா மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | **04** | **08** | **12** |
| ஆயர்வேத பிரசூதிதந்திர ஸ்த்ரீரோக மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | **0** | **02** | **02** |
| ஆயர்வேத சல்யதந்திர மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | **01** | **0** | **01** |
| ஆயர்வேத சுவஸ்தவிருத்த மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | **0** | **03** | **03** |
| மருத்துவம் மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | **0** | **02** | **02** |
| யுனானி மௌலிஜாத் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | முழுநேரம் | **01** | **0** | **01** |
| **மொத்தம்** | | **07** | **16** | **23** |

***அட்டவணை 12*** *- சிரேஷ்ட பதிவாளர் பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கை*

## 2.3 பரீட்சை பெறுபேறுகள்

### 2.3.1 MD தேர்வு (சிறப்பு) ஆயுர்வேத காயகிசட்சா - செப்டெம்பர் / ஒக்டோபர் 2024

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், ஆயுர்வேத காயகிசட்சாவில் அதன் முதலாவது மருத்துவ கலாநிதி பரீட்சையை 2024 ஆம் ஆண்டில் நடாத்தியது. 4 பயிற்சி பெறுநர்கள் ஆயர்வேத மருத்துவ கலாநிதி பட்டதாரிகளாக சித்தியடைந்துள்ளனர். 2024 செப்டெம்பர் / ஒக்டோபர் மாதங்களில் நடைபெற்ற மருத்துவ கலாநிதி பரீட்சையையின் பெறுபேறுகள் பின்வருவனவாகும்.

| கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | MD தேர்வு (சிறப்பு) ஆயுர்வேத காயகிசட்சா 2024 (2024 டிசம்பர் 31இல் இருந்தவாறான) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விண்ணப்பம் செய்த எண்ணிக்கை | | | தோற்றிய எண்ணிக்கை | | | சித்தியடைந்த எண்ணிக்கை | | | சித்தியடையாத எண்ணிக்கை | | |
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| ஆயர்வேத காயகிசட்சா மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் | 0 | 4 | 4 | 0 | 4 | 4 | 0 | 4 | 4 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | 0 | 4 | 4 | 0 | 4 | 4 | 0 | 4 | 4 | 0 | 0 | 0 |

***அட்டவணை 13*** *- ஆயுர்வேத* காயகிசட்சா *MD தேர்வின் (சிறப்பு) விபரங்கள்–* செப்டெம்பர் / ஒக்டோபர் *2024*

### 2.3.2 2024 ஆம் ஆண்டிற்கான ஆயுர்வேதத்தில் மருத்துவ கலாநிதி பட்டத்திற்கான தேர்வு மற்றும் சபைச் சான்றிதழ்

2024 ஆம் ஆண்டிற்கான ஆயுர்வேதத்தில் மருத்துவ கலாநிதி படிப்பு மற்றும் சபைச் சான்றிதழில் முழுநேர சேவைப் பயிற்சித் திட்டங்களில் சேர்வதற்கான தேர்வுத் தெரிவை PGIIM நடத்தியது.

பயிற்சியாளர்கள் பின்வருமாறு MD திட்டங்களுக்கு இணைக்கப்பட்டனர்

1. **காயகிசட்சா** - ஆறு (6) வேட்பாளர்கள், 3 பேர் ஆயுர்வேத / தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து, 3 பேர் அரசு சாரா துறையிலிருந்து.

2. **சல்யதந்திரம்** - இரண்டு (2) வேட்பாளர்கள், ஒருவர் ஆயுர்வேத / தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து, ஒருவர் அரசு சாரா துறையிலிருந்து.

3. **கௌமாரபிரித்ய** - இரண்டு (2) வேட்பாளர்கள், ஒருவர் ஆயுர்வேத / தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து, ஒருவர் அரசு சாரா துறையிலிருந்து.

4. **பிரசூதிதந்திர ஸ்த்ரீரோக** - இரண்டு (2) வேட்பாளர்கள், ஒருவர் ஆயுர்வேத / தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து, ஒருவர் அரசு சாரா துறையிலிருந்து.

5. **சல்யதந்திரம்** - இரண்டு (2) வேட்பாளர்கள், ஒருவர் ஆயுர்வேத / தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து, ஒருவர் அரசு சாரா துறையிலிருந்து.

6. **பைசஜ்யகல்பனா மற்றும் ரசாசாஸ்திரம்** - இரண்டு (2) வேட்பாளர்கள், ஒருவர் ஆயுர்வேத / தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து, ஒருவர் அரசு சாரா துறையிலிருந்து.

| பரீட்சை | பரீட்சைக்கு பதிவு செய்யப்பட்டவர்களின் எண். | நிராகரிக்கப் பட்ட விண்ணப்பங்களின் எண். | பரீட்சையில் கலந்து கொண்டவர்களின் எண். | பரீட்சையில் கலந்து கொள்ளாதவர்கள் எண். | தெரிவு செய்யப்பட்டவர்களின் எண். |
|---|---|---|---|---|---|
| ஆயுர்வேதத்தில் ஆனு பட்டத்திற்கான பரீட்சை மற்றும் சபைச் சான்றிதழ் - செப்டெம்பர் - 2024 | 23 | 04 | 19 | - | 16 |

***அட்டவணை 14*** *- 2024 ஆம் ஆண்டிற்கான ஆயுர்வேதத்தில் எம்.டி.க்கான தேர்வுத் தேர்வு மற்றும் வாரியச் சான்றிதழ் விவரங்கள்*

**2.4 மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்புகளுக்கான ஒப்புதலுக்காகக் காத்திருத்தல்.**

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் மூலம் பின்வரும் மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. ஆயர்வேத பயிசஜ்ய கல்பனா மற்றும் ரசசாஸ்த்ரம் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.
2. ஆயர்வேத சல்யதந்திரம மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.
3. ஆயர்வேத பிரசூதிதந்திர மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.
4. யுனானி அம்ராஸ் இ நிஸ்வான் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.
5. சித்த குணபாடம் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.
6. சித்த மருத்துவம் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.

**2.5 ஆயர்வேத மருத்துவ கலாநிதி மற்றும் மற்றும் சபை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்.**

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் கல்விசார் நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. அனைத்து பயிலுநர்களும் அவர்களின் பொருட்டு ஒதுக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் மருத்துவ கலாநிதி பட்டப்படிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினார்கள். மீளாய்விற்கான ஆண்டில் சுதேச மருத்துவ பட்டப் படிப்பு நிறுவனம் மூலம் பின்வரும் ஆயர்வேதம் தொடர்பான மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

1. ஆயர்வேத கௌமாரபிரித்ய மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ
2. ஆயர்வேத காயகிசட்சா மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்
3. ஆயர்வேத பிரசூதிதந்திர ஸ்த்ரீரோக மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்
4. ஆயர்வேத சல்யதந்திர மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்
5. ஆயர்வேத சுவஸ்தவிருத்த மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்

**2.6 யுனானி மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்.**

**மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்புகளுக்கான ஒப்புதல்கள்**

யுனானி மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அனுமதி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவை சபையினதும் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினதும் முகாமைத்துவ சபையின் பரிந்துரை மீது யுனானி தொடர்பான மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான இரண்டு விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1. யுனானி இல்முல் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.
2. யுனானி அம்ராஸ்-இ நிஸ்வான் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.

**2.7 யுனானி மருத்துவ கலாநிதியின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் சபைச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்.**

PGIIM இன் யுனானி மற்றும் சபைச் சான்றிதழ் திட்டத்தின் முதல் தொகுதி 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது, அதன்படி இரண்டு பயிற்சியாளர்கள் மோலிஜாட்டில் உள்ள யுனானி மருத்துவ கலாநிதி மற்றும் சபைச் சான்றிதழ் திட்டத்தில் இணைக்கப்பட்டனர். PGIIM இன் கல்வி நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தன, மேலும் பயிற்சியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பயிற்சி மையங்களில் MD பயிற்சியில் பங்கேற்றனர். மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், PGIIM ஆல் யுனானி மற்றும் சபைச் சான்றிதழ் திட்டத்தில் பின்வரும் MD மேற்கொள்ளப்படுகிறது.

1. யுனானி மோலிஜாத்தில் எம்.டி. மற்றும் வாரிய சான்றிதழ்

**2.8 சித்த மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒப்புதலுக்காகக் காத்திருத்தல்.**

சித்த மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அங்கீகரித்தல் கொழும்புப் பல்கலைக்கழத்தின் பேரவை சபையினதும் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினதும் முகாமைத்துவ சபையின் பரிந்துரைகள் மீது பின்வரும் சித்த மருத்துவம் தொடர்பான சித்த மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான இரண்டு விண்ணப்பங்கள் 2020 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதன்மூலம் குறித்த சித்த மருத்துவ கலாநிதி பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்குவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

1. சித்த குணபாடம் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.
2. சித்த மருத்துவம் மருத்துவ கலாநிதி மற்றும் சபை சான்றிதழ்.

# 3. சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PGIIM) நிர்வாகப் பிரிவுகள் மற்றும் நூலகம்

PGIIM இன் நிர்வாகச் செயல்பாடுகள் முக்கியமாக நிறுவனத்தின் நிர்வாகப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு ஆகியவற்றால் கையாளப்படுகின்றன. PGIIM நூலகம் வெற்றிகரமாக கடமைகளை நிறைவேற்றுகின்றது.

## 3.1 நிர்வாகப் பிரிவு

PGIIM இன் நிர்வாகப் பிரிவு அனைத்து பொது நிர்வாகப் பணிகளையும், கல்விச் செயல்பாடுகளை எளிதாக்குவது தொடர்பான செயல்பாடுகளையும் நடத்துகிறது. முகாமைத்துவ சபையின் கூட்டங்கள் மற்றும் பிற கூட்டங்களை நடத்துவதற்கு நிர்வாக ஒத்துழைப்பை வழங்குதல், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூதவை மற்றும் பேரவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக ஆவணங்களை சமர்ப்பித்தல், கல்வித் திட்டங்கள் மற்றும் மாணவர் தேவைகள் தொடர்பான ஆவணங்களைக் கையாளுதல் ஆகியவை தொடர்புடைய அதிகாரிகளுடன் பணியாற்றுதல், மீளாய்வாண்டில் நிர்வாகப் பிரிவினால் கல்வி நடவடிக்கைகள் சார்ந்து நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகளும் அடங்கும்.

மேலும் பதவியணி ஆட்சேர்ப்பு மூலம் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திடம் மனித வளங்களை ஆட்சேர்ப்புச் செய்தல், சுயவிபரக் கோவைகளை கையாளுதல், பழுதுபார்க்கும் பணி, கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களை பராமரித்தல், பதவியணி மற்றும் மாணவர்களுக்கு பொது சேவைகளை வழங்குதல், சேவைகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தகவல் தொடர்பு வசதிகளை வழங்குதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவது நிர்வாகப் பிரிவின் நிர்வாக நடவடிக்கைகளில் சிலவாகும். 2024 ஆம் ஆண்டில், நிர்வாகப் பிரிவு ஒரு முதுநிலை உதவிப் பதிவாளர் மற்றும் நான்கு முகாமைத்துவ உதவியாளர்களை கொண்டமைந்திருந்தது.

## 3.2 நிதிப் பிரிவு

PGIIM இன் நிதிப் பிரிவானது, நிறுவகத்தின் நிதி நிர்வாகம் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகளை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது. இதன் முதன்மை பணிகளாக ஆண்டு, காலாண்டு மற்றும் மாதாந்திர வரவு செலவுத் திட்டங்களைத் தயாரித்தல், நிதி விடயங்கள் தொடர்பான அறிக்கைகளை உரிய அதிகாரிகளுக்கு அனுப்புதல், நிறுவனம் மூலம் பெற்றக் கொள்ளும் அனைத்து சேவைகளுக்கும் பணம் செலுத்துதல் என்பன குறிப்பிடப்படுகின்றன. மேலும், சில்லறை பணத்தைக் கையாளுதல், காசோலைகளை வழங்குதல்,

சம்பளம் செலுத்தல் ஆகிய நடவடிக்கைகளை சுதேச மருத்தவப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிதிப் பிரிவால் கையாளப்படும் மேலதிக பணிகளாகும். நிதிப் பிரிவின் மற்றொரு முக்கிய பொறுப்பு, நிறுவனத்திற்குத் தேவையான பொருட்கள், புத்தகங்கள், பருவ இதழ்கள் மற்றும் பிற பொருட்கள் உள்ளிட்ட தொடர்ச்சியான மற்றும் மூலதனப் பொருட்களை கொள்முதல் செய்வதாகும்.

மேலும் PGIIM அதன் அனைத்து நிதி நடவடிக்கைகள் மற்றும் பதிவு பராமரிப்பு செயன்முறைகளிலும் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளின் (SLPSAS) வழிமுறைகளை முழுமையாக பின்பற்றுகிறது. ஏனெனில் SLPSAS இணக்கமுள்ள செயல்முறைகள் உயர் தரமான நிதி அறிக்கைகளை உருவாக்க உதவுகின்றன. இதன் மூலம் துல்லியமான நிதி முகாமைத்துவ நடைமுறைகள் மேம்படுத்தப்படுகின்றன, நிதி செயல்திறன் மற்றும் நிலையை உண்மையான முறையில் பிரதிபலிக்கின்றன, மேலும் சிறந்த முடிவெடுக்க உதவுகிறது.

மேலும் SLPSAS பின்பற்றுதல் நிதி அறிக்கையிடும் முறைமைகளில் ஒருமைத்துவத்தையும் ஒப்புமையையும் உறுதிப்படுத்துகிறது, அதேசமயம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புமுறை மற்றும் நல்லாட்சியை ஊக்குவிக்கிறது. இந்த ஆட்சி நெறிமுறைகளுக்கு நிறுவனத்தின் உறுதியின் அடையாளமாக, PGIIM 2022 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கைகளுக்கு தகுதியற்ற ஒப்பீட்டு கருத்தை (Unqualified Audit Opinion) பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டில், நிதிப் பிரிவில், மற்றுமொரு பல்கலைக்கழகத்தில் இருந்து பதவி உயர்வு மூலம் PGIIM இல் இணைந்த ஒரு முதுநிலை உதவியாளர் நிதி உதவியாளரும், ஒரு முகாமைத்துவ உதவியாளரும் இருந்தனர். நிதிப் பிரிவில் இணைக்கப்பட்ட மற்றொரு முகாமைத்துவ உதவியாளர் (புத்தகக் காப்பாளர்) 2024 இல் தனது பதவியைவட்டு விலகினார். நிதி நடவடிக்கைகளை சீராக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும், நிறுவனத்தின் நிர்வாக மற்றும் கல்வி செயல்பாடுகளை ஆதரிக்க துல்லியமான பதிவுகளைப் பராமரிப்பதற்கும் இக் குழு பொறுப்பாகும்.

**3.3 நூலகம்**

2022 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் அதன் நூலகத்தை அதிகாரப்பூர்வமாக அதன் பயனர்களுக்குத் திறந்து வைத்தது. நிகழ்நிலை ஊடாக நூலகத் தூண்டல் அமர்வு நடைபெற்றது. ஆயுர்வேதம் மற்றும் யுனானிக்கு தேவையான புத்தகங்களைச் சேர்ப்பதன் மூலம் எங்கள் நூலக பயனர்களுக்கு மேலும் நூலகம் மற்றும்

தகவல் சேவைகளை வழங்க சேகரிப்பு விரிவுபடுத்தப்படுகிறது. PGIIM நூலகத்திற்காக 2022 இல் 225 புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன. தற்போதைய நூலக வளங்கள் இரண்டு வடிவங்களில் கிடைக்கின்றன: அச்சு புத்தகங்கள் மற்றும் மின்னணு வளங்கள். ஆயுர்வேதம் மற்றும் யுனானி புத்தகங்களின் முழு அச்சிடப்பட்ட புத்தகத் தொகுப்பிற்கும் ஆய்வு வாரியம் மற்றும் நூலகக் குழு அனுமதி வழங்கியுள்ளது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகம் PGIIM நூலகத்துடன் நான்கு நூலக தரவுத்தளங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. PGIIM நூலகம் SLISTINET இல் உறுப்பினராக உள்ளது. மேலும், சுதேச மருத்துவ நிறுவகத்தின் நூலகம் 2022 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக நூலகத்தைப் பயன்படுத்த எங்கள் முதுநிலைப் பயிற்சியாளர்களை அனுமதிக்கிறது.--

இப்போது PGIIM நூலகத்தில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட புத்தக சேகரிப்பு மற்றும் ஒரு வாசிப்பு அறை உள்ளது. வாசிப்பு பகுதி படிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் ஒரே நேரத்தில் 10 - 15 பேர் வரை பயன்படுத்த முடியம். மாணவர்கள் தங்கள் தனிப்பட்ட சாதனங்களைப் படிப்பதற்காகவும், நூலகத்தில் கூடுதல் ஆராய்ச்சி செய்யவும் பயன்படுத்தலாம். முதுகலை பயிற்சி பெறுபவர்களுக்கு கல்வி நோக்கங்களுக்காக Wi-fi வலையமைப்பு உள்ளது. இது வாசிப்புத்திறனை மேம்படுத்தவும், ஒளியிடல் வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

# 4. மனித வளங்கள் தரவு

PGIIM இன் மொத்த பதவியணியில் எண்ணிக்கை பதின் ஆறு ஆகும். நிதிப் பிரிவிற்கு பெரும் பலத்தை அளிக்கும் வகையில், மே மாதத்தில் PGIIMக்கு ஒரு புதிய முதுநிலை உதவியாளர் பர்சார் ஒதுக்கப்பட்டது. தற்போது, முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு வைத்தல்), தொழில்நுட்ப அதிகாரி, பணி உதவியாளர்கள் மற்றும் சாரதிகள் உள்ளிட்ட ஏழு வெற்றிடங்கள் உள்ளன. மேற்கண்ட வெற்றிடங்களை நிரப்ப முகாமைத்துவ சேவைகள் துறையின் ஒப்புதலைக் கோரி PGIIM தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், தற்போதுள்ள உறுப்பினர்களின் அர்ப்பணிப்புடன், அனைத்து கல்வி நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகளும் PGIIM இல் சிறப்பாகச் செயல்படுகின்றன. இருப்பினும், முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு வைத்தல்) மற்றும் தொழில்நுட்ப அதிகாரி இல்லாதது தொடர்புடைய செயல்பாடுகளின் செயல்திறனில் குறிப்பிடத்தக்க தவிர்க்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள ஊழியர்களின் திறனை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை PGIIM அடையாளம் கண்டுள்ளது. அலுவலகப் பணிகளில் நவீன தொழில்நுட்பக் கருவிகளை இணைப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, பணியிட உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறனை அதிகரிக்க செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாடு குறித்த பயிற்சிப்பட்டறையை நவம்பர் 2024 இல் ஏற்பாடு செய்தது. களனி பல்கலைக்கழகத்தின் உதவி நூலகரான திரு. கசுன் முனசிங்க அவர்கள் மேற்கண்ட பயிற்சிப பட்டறையின் வளவாளராகப் பணியாற்றினார். ஒவ்வொரு பணியாளர் பிரிவிற்கும் அவர்களின் பாட விடயங்களில் தனித்தனியாக பயிற்சி அளிக்க வேண்டியிருந்தாலும், நிதித் தடைகள் காரணமாக PGIIM ஊழியர்களை வெளிப்புற பயிற்சித் திட்டங்களுக்கு அனுப்பும் நிலையில் இல்லை.

### 4.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்கால பதவியணி

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திடம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பதவியணி எண்ணிக்கை கீழே அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| பதவி | சேவை | தரம் | சம்பளக் குறியீடு | சேவை மட்டம் | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிட ங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| பணி உதவியாளர்* | UWAS | III/II/I/Special | U-PL 1 | ஆரம்ப | 02 | 0 | 02 |
| சாரதி | UDS | III/II/I/Special | U-PL 3 | ஆரம்ப | 03 | 0 | 03 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் (புத்தகப் பராமரிப்பு) | UMAS | III/II/I | U-MN 1 | இடை நிலை | 01 | 01 | 0 |
| முகாமைத்துவ உதவியாளர் | UMAS | III/II/I | U-MN 1 | இடை நிலை | 05 | 05 | 0 |
| தொழில்நுட்ப அலுவலர் | UTS | III/II/I | U-MT 1 | இடை நிலை | 01 | 0 | 1 |
| சிரேஷ்ட உதவி நிதியாளர் | UA & FS | II/I | U-EX 2 | சிரேஷ்ட | 01 | 0 | 1 |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் | UA & FS | II/I | U-EX 2 | சிரேஷ்ட | 01 | 01 | 0 |
| உதவி நூலகர் | கல்விசார் | | UAC 3 | சிரேஷ்ட | 01 | 01 | 0 |
| பணிப்பாளர் | கல்விசார் | | U-AC 5 | சிரேஷ்ட | 01 | 01 | 0 |
| **மொத்தம்** | | | | | **16** | **09** | **07** |

***அட்டவணை 12 - PGIIM இன் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மற்றும் தற்போதைய பணியாளர்கள் விபரங்கள்***

PGIIM -க்கு நிரந்தரமாக ஒரு (01) தொழில்நுட்ப அதிகாரி, ஒரு (01) முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு வைத்தல்) மற்றும் இரண்டு (02) பணி உதவியாளர் பணியிடங்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தற்போது PGIIM-ன் மொத்த நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை ஒன்பது (09) ஆகும். இக் கோரிக்கை முகாமைத்துவ சேவைகள் துறை மூலம் அமைச்சரவை ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் 2025 ஆம் ஆண்டுக்குள் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பும் என PGIIM நம்புகிறது.

# பகுதி – இரண்டு

# 2024 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும் கணக்காய்வுத் தகவல்களும்

# 5. 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

## சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்
## கொழும்புப் பல்கலைக்கழகம்

### நிதி நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31 ஆம் திகதி இருந்தவாறான | குறிப்பு இல. | 2024 | 2023 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 3 | 15,512,571 | 8,747,112 |
| நிலையான வைப்புகளின் முதலீடு | 4 | 1,943,969 | 1,806,873 |
| கிடைக்கப்பெற வேண்டியவைகள் | 5 | 317,080 | 614,443 |
| பதவியணி கடன் மற்றும் முற்பணம் | 6 | 143,320 | 144,736 |
| முற்பணம் | 7 | 9,684 | 14,794 |
| பொருட் பதிவேடு / இருப்புகள் | 8 | 196,751 | 471,657 |
| மொத்த நடைமுறை சொத்துக்கள் | | 18,123,374 | 11,799,616 |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| பதவியணி கடன் மற்றும் முற்பணம் | 6 | 192,126 | 306,323 |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் (தேறிய) | 9 | 8,259,718 | 8,140,790 |
| புலனாகாத சொத்துக்கள் | 10 | 34,192 | 47,192 |
| மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள் | | 8,486,036 | 8,494,304 |
| **மொத்த சொத்துக்கள்** | | **26,609,410** | **20,293,921** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| அட்டுறு செலவினம் | 11 | 8,560,948 | 6,237,057 |
| செலுத்தப்பட வேண்டியவைகள் | 12 | 1,373,733 | 85,000 |
| பிற்போடப்பட்ட வருமானம் | | 2,465,667 | 1,433,333 |
| பிற்போடப்பட்ட வருமானம் PBC கட்டணங்கள் | | 600,000 | 1,030,000 |
| **மொத்த நடைமுறை பொறுப்புகள்** | | 13,000,348 | 8,785,391 |
| **நடைமுறையல்லாத பொறுப்புகள்** | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் | 13 | 3,718,248 | 1,871,018 |
| மொத்த நடைமுறையல்லாத பொறுப்புகள் | | 3,718,248 | 1,871,018 |
| **மொத்த பொறுப்புகள்** | | **16,718,596** | **10,656,408** |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **9,890,814** | **9,637,513** |
| **திரட்டிய ஒதுக்கம் மற்றும் நிதியம்** | | | |
| திரட்டிய நிதியம் - மூலதனம் | 14 | 6,545,096 | 6,439,168 |

| | | | |
|---|---|---|---|
| திரட்டிய நிதியம் - மீண்டுவரும் | 15 | (2,517,285) | (4,410,810) |
| செலவிடப்படாத மூலதன அளிப்புகள் | 16-A | - | - |
| ஆழுர்நு கிடைக்கப்பெறும் மூலதன அளிப்புகள் | 17 | 5,136,260 | 6,882,411 |
| மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் | | 726,743 | 726,743 |
| **மொத்த தேறிய சொத்துக்கள் /சமபகுதிகள்** | | **9,890,814** | **9,637,513** |

இந்த நிதி அறிக்கைகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வழங்கப்பட்ட பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

……………………………………….

எம்.என். அனுசிகா
சிரேஷ்ட உதவி நிதியாளர்

…....................................................

எல்.டி.ஜீ.ஜீ. தி சில்வா
சிரேஷ்ட உதவி பதிவாளர் (பதில்)

முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள், இந் நிதிக் கூற்றுகள் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்பை வகிக்கின்றார்கள்.

இந் நிதிக் கூற்றுகள் முகாமைத்துவ சபை மூலம் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் பொருட்டு ஒப்பமிடப்பட்டுள்ளது.

……………………………………..

பேராசிரியர் எஸ்.எம்.எஸ்.சமரகோன்
பணிப்பாளர்

……………………………………..

ரீ. தர்மராஜா
முகாமைத்துவ சபை உறுப்பினர்

…………………

ஜயந்த ஜயவர்தன
முகாமைத்துவ சபை உறுப்பினர்

அடைப்புக்குள் காணப்படும் எண்ணிக்கையிலிருந்து கழிவுகள் காட்டப்படுகின்றன.

பக்க இலக்கம் **42** தொடக்கம் **69** வரையிலான நிதிக் கூற்றுகள் பொருட்டு குறிப்புகள் இந் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதியாகும்.

- ***ஆங்கில பதிப்பில் கையொப்படமிடப்பட்டுள்ளது.***

**சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**
**நிதி செயலாற்றுகை தொடர்பான கூற்று**

| டிசெம்பர் 31 ஆம் திகதியில் இருந்தவாறான | குறிப்பு இல. | 2024 ரூபா. | 2023 ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| **பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளின் வருமானம் - நடைமுறை** | | | |
| மீண்டு வரும் செலவுகளுக்கான அரசாங்க மானியம் | | 24,465,000 | 15,000,000 |
| **பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளின் மொத்த வருமானம் - நடைமுறை** | | 24,465,000 | 15,000,000 |
| **பரிமாற்ற பரிவர்த்தனைகளின் வருமானம் - நடைமுறை** | | | |
| உருவாக்கிய வருமானம் | **18** | 5,636,667 | 5,005,833 |
| ஏனைய வருமானம் | **19** | 1,346,789 | 1,251,821 |
| **பரிமாற்றக் பரிவர்த்தனைகளின் மொத்த வருமானம் - நடைமுறை** | | 6,983,456 | 6,257,655 |
| **மொத்த வருமானம் -நடைமுறை** | | **31,448,456** | **21,257,655** |
| **செயற்பாட்டுச் செலவுகள் - நடைமுறை** | | | |
| பணியாளர் ஊதியங்கள் | **21-A** | 22,429,192 | 19,726,671 |
| பயணம் மற்றும் வாழ்வாதாரம் | **21-B** | 95,160 | 28,158 |
| பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் | **21-C** | 340,938 | 643,482 |
| பராமரிப்பு செலவுகள் | **21-D** | 61,571 | 182,511 |
| ஒப்பந்த சேவைகள் | **21-E** | 4,057,386 | 6,355,405 |
| பிற தொடர் செலவுகள் | **21-F** | 2,733,548 | 2,722,311 |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள் - நடைமுறை** | | **29,717,795** | **29,658,537** |
| **காலப்பகுதிக்கான நடைமுறை மிகை ∴ (பற்றாக்குறை)** | | **1,730,661** | **(8,400,883)** |
| **பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளின் வருமானம்** | | | |
| மூலதனச் செலவுகளுக்கான அரசாங்க மானியம் | | 1,746,151 | 967,164 |
| பரிசு, மானியம் வகையிலான பொருட்கள் | | - | 33,869 |
| **பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனைகளின் வருமானம் - மூலதனம்** | | 1,746,151 | 1,001,032 |
| **பரிமாற்றப் பரிவர்த்தனைகளின் வருமானம் - மூலதனம்** | | - | - |
| **மொத்தப் பரிமாற்றப் பரிவர்த்தனைகளின் வருமானம் - மூலதனம்** | | - | - |
| **மொத்த வருமானம் - மூலதனம்** | | **1,746,151** | **1,001,032** |
| **செயற்பாட்டுச் செலவுகள்-மூலதனம்** | | | |
| தேய்மானம் | **21-G** | 1,627,223 | 1,556,927 |
| கடன்தீர் நிதி | **21-H** | 13,000 | 13,000 |
| **மொத்த இயக்கச் செலவுகள் - மூலதனம்** | | **1,640,223** | **1,569,927** |
| **காலத்திற்கான மூலதன மிகை/(பற்றாக்குறை)** | | **105,928** | **(568,895)** |
| **காலத்திற்கான மொத்த மிகை/பற்றாக்குறை).** | | **1,836,589** | **(8,969,778)** |
| **தற்போதைய மிகை/(பற்றாக்குறை) நடப்பு** | | **1,730,661** | **(8,400,883)** |
| **காலத்திற்கான மூலதன மிகை.∵(பற்றாக்குறை)** | | **105,928** | **(568,895)** |

## கொழும்புப் பல்கலைக்கழகம்

**உரிமையாண்மை / தேறிய சொத்து மாற்றக் கூற்று**

**2024 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது**

| | திரட்டிய நிதியம் - நடைமுறை (ரூபா.) | திரட்டிய நிதியம் - மூலதனம் (ரூபா.) | செலவினம் மேற்கொள்ளாத மூலதன அளிப்புகள் (ரூபா.) | ஆழுர்ந்து இருந்து மூலதன அளிப்புகள் (ரூபா.) | மீள்கணிப்பீட்டு ஒதுக்கம் (ரூபா.) | மொத்தம் (ரூபா.) |
|---|---|---|---|---|---|---|
| **2023 ஜனவரி 01 ஆம் திகதி மீதி** | **3,768,698** | **7,008,063** | **849,575** | **7,000,000** | **-** | **18,626,336** |
| வருடத்தில் பெறப்பட்ட மூலதன மானியம் | - | - | - | - | - | - |
| சீராக்கல் | 221,374 | - | - | - | - | 221,374 |
| செலவின மூலதன மானியங்கள் | - | 967,164 | (849,575) | (117,589) | - | - |
| வருமான கூற்றுக்கு மாற்றுதல் | - | (967,164) | - | - | - | (967,164) |
| மறுமதிப்பீட்டு மிகை | - | - | - | - | 726,743 | 726,743 |
| காலப்பகுதிக்கான மிகை | (8,400,883) | (568,895) | - | - | - | (8,969,778) |
| **2023 டிசம்பர் 01 ஆம் திகதி மீதி** | **(4,410,810)** | **6,439,168** | **-** | **6,882,411** | **726,743** | **9,637,512** |
| வருடத்தில் பெறப்பட்ட மூலதன மானியம் | - | - | - | - | - | - |
| சீராக்கல் | 162,864 | - | - | - | - | 162,864 |
| செலவின மூலதன மானியங்கள் | - | 1,746,151 | - | (1,746,151) | - | - |
| வருமான கூற்றுக்கு மாற்றுதல் | - | (1,746,151) | - | - | - | (1,746,151) |
| மறுமதிப்பீட்டு மிகை | - | - | - | - | | |
| காலப்பகுதிக்கான மிகை | 1,730,661 | 105,928 | - | - | - | 1,836,589 |
| **2024 டிசம்பர் 01 ஆம் திகதி மீதி** | **(2,517,285)** | **6,545,096** | **-** | **5,136,260** | **726,743** | **9,890,814** |

## சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம்
## கொழும்புப் பல்கலைக்கழகம்
## காசுப் பாய்ச்சல் கூற்று

| டிசெம்பர் 31 ஆம் திகதியில் இருந்தவாறான | 2024 (ரூபா.) | 2023 (ரூபா.) |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் (பயன்படும்)** | | |
| இயக்க நடவடிக்கைகளிலிருந்தான மிகை | 1,836,589 | (8,969,778) |
| *சீராக்கங்கள்* | | |
| **காசு அல்லாத இயக்கங்கள்** | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் தேய்மானம் | 1,627,223 | 1,556,927 |
| அசையா சொத்துக்களின் கடன் மறுசீரமைப்பு | 13,000 | 13,000 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 1,847,231 | 305,987 |
| முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் | (578,526) | (1,229,035) |
| மானியங்களைத் தள்ளுபடி செய்தல் | 162,864 | 220,835 |
| முந்தைய ஆண்டுகளின் திரட்டப்பட்ட செலவினங்களை மாற்றியமைத்தல் | (1,746,151) | (967,164) |
| பரிசுகள், நன்கொடைகள், பொருள்கள் | - | (33,869) |
| **செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை.˙.(பற்றாக்குறை)** | **3,162,230** | **(9,103,097)** |
| இருப்புகளில் அதிகரிப்பு / குறைப்பு | 274,907 | 18,066 |
| தற்போதைய சொத்துகளில் அதிகரிப்பு / குறைப்பு | 302,472 | (25,466) |
| தற்போதைய பொறுப்புகளில் அதிகரிப்பு / குறைப்பு | 3,143,824 | 3,435,330 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **6,883,432** | **(5,675,167)** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | | |
| சொத்து, ஆதனங்கள் மற்றும் உபகரணங்களை கையகப்படுத்துதல் | (675,018) | (1,928,125) |
| ஊழியர்களுக்கு கடன் கொடுப்பனவுகள் | 115,613 | 158,141 |
| ஊழியர்களிடமிருந்து கடன்களை திரும்பப் பெறுதல் | - | 1,870,000 |
| நிலையான வைப்புகளை திரும்பப் பெறுதல் | (137,095) | (213,380) |
| நிலையான வைப்புகளில் முதலீடு | 578,526 | 1,368,927 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் தேறிய காசுப் பாய்ச்சல்கள்** | **(117,974)** | **1,255,562** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஆண்டுக்கு பெறப்பட்ட மூலதன மானியங்கள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | - | - |
| **காசு மற்றும் காசிற்கு சமமானவை தேறிய அதிகரிப்பு.˙. குறைவு** | 6,765,459 | (4,419,604) |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ள காசு மற்றும் காசிற்கு சமமானவை | 8,747,112 | 13,166,716 |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமானவை** | **15,512,571** | **8,747,112** |
| **காசு மற்றும் காசிற்கு சமமானவைகள்:** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் (குறிப்பு 3) | **15,512,571** | **8,747,112** |

**சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**
**நிதி செயலாற்றுகையின் வரவுசெலவுடன் ஒப்பிடப்பட்ட கூற்று**

| டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2024 உண்மையான ரூபா. | 2024 வரவுசெலவு ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| திறைசேரியிலிருந்தான மீண்டுவரும் மானியம் | | 24,465,000 | 24,000,000 |
| உருவாக்கப்பட்ட வருமானம் | 18 | 5,636,667 | 3,395,000 |
| வேறு வருமானம் | 19 | 1,346,789 | 200,000 |
| செலவழித்த மூலதன மானியத்தின் பரிமாற்றம் | 20 | 1,746,151 | - |
| **மொத்த வருமானம்** | | **33,194,607** | **27,595,000** |
| **செயற்பாட்டுச் செலவுகள்** | | | |
| பணியாளர் ஊதியங்கள் | 21-A | 22,429,192 | 24,000,000 |
| பயணம் மற்றும் வாழ்வாதாரம் | 21-B | 95,160 | 30,000 |
| பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் | 21-C | 340,938 | 970,000 |
| பராமரிப்பு செலவுகள் | 21-D | 61,571 | 340,000 |
| ஒப்பந்த சேவைகள் | 21-E | 4,057,386 | 6,544,000 |
| பிற தொடர் செலவுகள் | 21-F | 2,733,548 | 15,405,000 |
| தேய்மானம் | 21-G | 1,627,223 | - |
| பணமதிப்பிழப்பு | 21-H | 13,000 | - |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | | **31,358,017** | **47,289,000** |
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை)** | | **1,836,589** | **(19,694,000)** |

## 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 1. பொதுவான தகவல்கள்

#### 1.1 சட்ட மற்றும் அமைப்புரீதியான வடிவம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 24 உடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 18 ஆம் பிரிவின் கீழ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் 2031/38 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தால் சுதேச மருத்துவப் பட்டப்பின் நிறுவகமானது (PGIIM) நிறுவப்பட்டது. குறித்த நிறுவனம் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவனமாவதுடன், 2019 ஆண்டில் பெப்ரவரி மாதம் அதன் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டள்ள நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்டது. இந்த அலுவலகம் 5 ஆம் மாடி, ஆயுர்வேதப் போதனா வைத்தியசாலை, கொட்டா வீதி, பொரள்ளை முகவரியில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

2024 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குரிய நிதிநிலைக் கூற்று, நிதி செயல்திறன் கூற்று, உரிமையாண்மை றங்களுக்கான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பன 2025 பெப்ரவரி 27 ஆம் திகதி நடைபெற்ற முகாமைத்துவச் சபைக் கூட்டத்தில் முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.

#### 1.2 நிதியாண்டு

நிறுவகத்தின் நிதியாண்டு 2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியாகும்.

#### 1.3 பிரதான செயல்பாடுகள் மற்றும் செயல்பாடுகளின் தன்மை

(அ) மாணவர்களை சேர்த்தல் மற்றும் நிறுவனத்தினதும் பல்கலைக்கழகத்தினும் பரிந்துரை மீது மேற்கொள்ளப்படும் ஆயுர்வேதம், யுனானி, சித்த மருத்துவ முறைகள் தொடர்பான நிபுணத்துவ மருத்துவ துறைகளின் பட்டப்பின் படிப்பு ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

(ஆ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் மற்றும் ஆணைக்குழுவின் இணக்கத்துடன் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யுனானி மருத்துவ முறைகள் அல்லது தொடர்புடைய நிபுணத்துவ துறைகளில்வ ழங்கப்படவுள்ள பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் சான்றிதழ்கள் மற்றும் பிற கல்வித் தேர்ச்சிகளை நிர்ணயித்தல்.

(இ) ஆயுர்வேதம், சித்தம் மற்றும் யுனானி மருத்துவ முறைகள் அல்லது தொடர்புடைய நிபுணத்துவ மருத்துவ துறைகளில் தேர்ச்சி பெற்ற நிர்ணயிக்கும் நோக்கத்திற்காக, பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன், பல்கலைக்கழகம் மூலம் துணைச் சட்டங்களால் விதிக்கப்படும் ஏனைய நிபந்தனைகளை பூர்த்திசெய்துள்ள நபர்களை, பட்டப்பின் படிப்பு பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள், பட்டப்பின் படிப்பு சான்றிதழ்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற கல்வி சிறப்புத் தேர்ச்சிகளை வழங்குவதற்கு தகுதியுடையவர்கள் என்று பல்கலைக்கழகத்திடம் பரிந்துரை செய்தல்.

(ஈ) ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அறிஞர்கள் பரிமாற்றிக் கொள்ளுதல் அல்லது வேறு வகையில் நிறுவகத்துடன் ஒத்த நோக்கங்கள் அல்லது ஓரளவு ஒத்த நோக்கங்களைக் கொண்ட இலங்கையில் அல்லது வெளிநாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள் அல்லது நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்.

## 1.4 தொடர்ச்சியான நிலைப்பாடு

நிலைத்திருத்தல் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படை

### 1.5.1 இணக்கக் கூற்று

இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தர நியமங்களுக்கு (SLPSAS) இணங்க வரலாற்றுக் கிரய முறையின் அடிப்படையில் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந் நிதிக் கூற்றுக்களில் நிதி நிலைக் கூற்று, நிதி செயல்திறன் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, உரிமையாண்மை மாற்றங்களுக்கான கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியன அடங்கும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.5.2 அளவீட்டிற்கான அடிப்படை

தொடர்புடைய குறிப்புகளின் கீழ் நியாயமான மதிப்பு தொடர்பாக பொருத்தமான வெளிப்பாடுகள் செய்யப்படுவதைத் தவிர, நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலும் வரலாற்றுக் கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.5.3 ஒப்பீட்டுத் தகவல்

தற்போதைய காலகட்டத்தின் நிதிநிலை அறிக்கைகளின் புரிதலை மேம்படுத்துவதற்கும் ஒப்பீட்டை மேம்படுத்துவதற்கும், நிதிநிலை அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட அனைத்துத் தொகைகளுக்கும், முந்தைய காலத்தைப் பொறுத்தமட்டில் ஒப்பீட்டுத் தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

### 1.5.4 பொருண்மை மற்றும் திரட்டல்

நிதி அறிக்கைகளில் ஒரே மாதிரியான உருப்படிகளின் ஒவ்வொரு பொருள் வகுப்பும் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன. வித்தியாசமான தன்மை அல்லது செயல்பாட்டின் உருப்படிகள் முக்கியமற்றவை எனில், தனித்தனியாக வழங்கப்படுகின்றன,

### 1.5..5 ஈடுசெய்தல்

**SLPSAS** ஆல் தேவைப்பட்டால் அல்லது அனுமதிக்கப்படாவிட்டாலொழிய சொத்து மற்றும் பொறுப்புகள் மற்றும் வருமானம் மற்றும் செலவுகள் ஈடுசெய்யப்படவில்லை.

### 1.5.6 அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான அனைத்து பொருள் நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, நிதி அறிக்கைகளில் தேவையான இடங்களில் பொருத்தமான மாற்றங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

### 1.5.7 செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

இந் நிதிக் கூற்றுக்கள் “இலங்கை ரூபாயில்” (ரூபா.) தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன, இது நிறுவனத்தின் செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமாகும்.

### 1.5.8 அண்ணளவாக்கல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் தராதரங்களால் அனுமதிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படாவிட்டால், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொகைகள் அருகிலுள்ள ரூபாய்க்கு அண்ணளவாக்கப்பட்டுள்ளன.

### 1.5.9 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகள்

கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முக்கியமான தீர்ப்புகளில் ஏதேனும் மாற்றங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான தொடர்புடைய குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 நடைமுறைச் சொத்துக்கள்

நிதிக் கூற்றுக்களின் திகதியின் பின்னர் ஒரு வருடத்திற்குள் மீட்கப்படும் சொத்துக்கள் நிதி நிலைக் கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்ட நடைமுறைச் சொத்துக்களாகும்.

### 2.1.1 காசு மற்றும் காசையொத்தவைகள்

காசு மற்றும் காசையொத்தவைகளில் கையிலுள்ள காசு, வங்கி நிலுவைகள் மற்றும் குறுகிய கால முதலீடுகள் ஆகியன அடங்கும். 2019 இல் உயர்கல்வி அமைச்சிலிருந்து பெறப்பட்ட ரூபா.7,000,000.00 மூலதன மானியம் 2019 இல் நிதி முகாமைத்துவக் கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன் நடப்பாண்டில் ஈட்டப்பட்ட வட்டி ரூபா.441,430.90 ஆகும்.

**மூலதன கணக்கு மீதி**

மூலதன கணக்கில் எந்நேரங்களிலும் குறைந்தபட்ச இருப்பு ரூ.500,000 பராமரிக்கப்படுகிறது. காசோலை வழங்கப்படும்போது, மூலதன கணக்கு இருப்பு ரூ.500,000 ஆக இருப்பதை உறுதி செய்வதற்காக, நிதி முகாமைத்துவக் கணக்கிலிருந்து தொடர்புடைய தொகை மாற்றப்படும். பணம் ரூ.500,000 ஐத் விஞ்சினால், தேவையான இருப்பைப் பராமரிக்க காசோலை பற்றுச்சீட்டு செய்யப்பட்டவுடன் நிதி முகாமைத்துவக் கணக்கிலிருந்து கூடுதல் நிதி மாற்றப்படும்.

31.12.2024 நிலவரப்படி, ரூ. 647,017.60 காசோலை வழங்கப்பட்டது, எனினும் அத் திகதியில் பணம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் விளைவாக, காசுப்புத்தக இருப்பு ரூ. (147,042.60) எதிர்மறை இருப்பைப் பிரதிபலித்தது. இது 2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பு 5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.1.2 நிலையான வைப்புகளில் முதலீடு

2022 ஆம் ஆண்டில் மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியான புதுப்பித்தலுடன், மக்கள் வங்கி, பொரளை கிளையில் தலா ரூ. 500,000 நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டது. இந் நிலையான வைப்புகளின் திரட்டப்பட்ட மதிப்பு 31.12.2024 நிலவரப்படி ரூ. 1,943,968.65 ஆகும்.

### 2.1.3 சரக்கிருப்புக்களும் களஞ்சியப் பொருட்களும்

சரக்குகள் குறைந்த செலவு மற்றும் நிகர உணரக்கூடிய மதிப்பில் குறிப்பிடப்படுகின்றன. பொதுவாக செலவு முதலில்-வெளியேறும் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது மற்றும் சரக்குகளைப் பெறுவதற்கும் அவற்றை அவற்றின் தற்போதைய நிலை மற்றும் இடத்திற்குக் கொண்டுவருவதற்கும் ஏற்படும் செலவினங்களை உள்ளடக்கியது.

நிறுவனத்தின் சரக்குகளில் நிலையான மற்றும் பிற நுகர்வுப் பொருட்கள் அடங்கும்.

## 2.2 நடைமுறை அல்லாத சொத்துக்கள்

### 2.2.1 ஆதனம், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

மேலும், கட்டிடம் ஆயர்வேத திணைக்களத்திற்குரிய சுதேச மருத்துவ பட்டப்படிப்பு நிறுவனத்தின் அலுலக வளாத்தை பகுதகளாக்கப்ட்டு செங்குத்து திரைகளை பொருத்தவதற்காக சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனம் ரூபா. 172,901.40 செலவிடப்பட்டுள்ளது. கட்டிடம் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு உரித்தற்றதால் 2022 ஆம் ஆண்டில் இப் பணத் தொகை திரைகள் மற்றும் பொருத்தல் தலைப்பின் கீழ் மூலதன செலவினமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. பொதுவாக கட்டிடங்கள் 5% ஆன விகிதாசாரம் பிரகாரம் 20 ஆண்டு காலப்பகுதிக்கு தேய்மானம்

செய்யப்படுகிறது. எவ்வாறாயினும், கட்டிடம் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு உரியதற்றாகும். இந்த திரைகள் மற்றும் பொருத்துதல் செலவினம் 10% ஆன விகிதாசாரத்தின் கீழ் 10 ஆண்டு காலப்பகுதிக்கு தேய்மானம் செய்யப்படும்.

கொழும்புப் பல்கலைக்கழகம் உயர்கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ஆரம்ப மானியத்தில் 2018 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் சார்பாக ரூபா. 2,264,892.50 பெறுமதியான சொத்துக்களைக் கொள்வனவு செய்யப்படடது. இந்த சொத்துக்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தால் 2018 ஆம் ஆண்டில் அவர்களின் சொத்துகளாக அவர்களின் நிதி அறிக்கைகளில் அங்கீகரிக்கப்பட்டு மூலதனமாக்கப்பட்டன. மேலும், ரூபா. 149,425.53 கொழும்புப் பல்கலைக்கழகத்தால் 2018 ஆம் ஆண்டிற்கான திரட்டிய தேய்மானமான அடையாளம் காணப்ப்டுள்ளது. அதன்படி, ரூபா. 2,115,466.97 பெறுமதியான சொத்துக்கள் 01.01.2019 திகதியிலுள்ளவாறு சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தினால் அவர்களின் தேறிய எழுதப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு மூலதனமாக்கப்பபட்டதுடன் அந்தந்த மானியம் சொத்துக்களின் மீதியுள்ள பயனுள்ள காலப்பகுதியின் போது கடன்தீர்ப்பனவு செய்யப்படுகின்றது.

**அ) அடையாளம் மற்றும் அளவீட்டிற்கான அடிப்படை**

பொருளுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் அந் நிறுவனத்திற்கு பாயும் மற்றும் பொருளின் விலையை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியும் எனில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்திலிருந்து திரட்டப்பட்ட தேய்மானம் கழிக்க வரும் தொகையில் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் என்பது எந்தவொரு தற்செயலான செலவினங்களுடனும் கூடிய கொள்வனவு அல்லது நிர்மாணச் செலவு ஆகும்.

அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் ஆரம்பத்தில் செலவில் கூறப்பட்டு, பின்னர் கிரயத்திலிருந்து திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் சேத இழப்புக்களைக் கழித்து அளவிடப்படுகின்றன. பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவு விரிவான வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**ஆ) ஆரம்ப அடையாளம் காணுதல்**

சொத்தானது அதன் தன்மையில் அடிப்படையில் மூலதனமாக்கப்படுகின்றது. சொத்தானது தொட்டுரணக் கூடியதாகவும், ஒரு வருடத்திற்கும் மேலான ஆயுள் மற்றும் குறிப்பிடத்தக்க செலவு இருந்தால் மூலதனமாக்கப்படுகிறது. சொத்தின் ஆயுள் 5 முதல் 20 ஆண்டுகள் வரையிலான அதன் வகையைப் பொறுத்ததாகும்.

**இ) அடையாளம் காணப்பட்டதன் பின்னர் அளவிடல்**

**செலவின மாதிரி**

எல்லாவற்றையும் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் செலவினம் கழிக்கப்பட்டதன் பின்னர் சீராக்கப்பட்டது.

**மீள்கணிப்பீட்டு மொடியுள்**

பின்வரும் அடிப்படை PPE வகையீடுகளை அடையாளம் காணப்பட்டதன் பின்னர், நியாயமான பெறுமதி நம்பிக்கையுடன் அளவிட முடியுமான நியாயமான பெறுமதி மீண்டும் மதிப்பிடப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ளப்படும். அதனை மீண்டும் மதிப்பிடும் திகதியிலிருந்து நியாயமான பெறுமதயிாவதுடன், பின்னர் திரட்டிய தேய்மானம் மற்றும் பின்னராக நிகழும் எந்தவொரு நட்டமும் குறைவாகும். நிறுவனம் உள்ளக ரீதியாக நியமனம் செய்த குழு ஊடாக கணினி மற்றும் கணினி சாதனங்களை மீண்டும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தியது.

**- கணினி மற்றும் கணினி சாதனங்கள்**

மீள்கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து எழுகின்ற மீள்கணிப்பீட்டு தொகையான ரூபா.953,200.00 ஆன தொகை சொத்துகளாக அடையாளம் காணப்பட்டு, மிகை தொகை மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டு, நிதி நிலை தொடர்பான கூற்றில் திரட்டிய நிதியம் மற்றும் ஒதுக்கத்தில் உள்ளடக்கப்பட்டது. ஏதேனும் வலுக்குன்றல் தொடர்பாக அறியக் கூடியதாக உள்ளதா என்பதை தீர்மானிக்கும் பொருட்டு ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அத்துடன் புலனாகாத சொத்துக்களில் கொண்டுச் செல்லும் பெறுமதி மீளாய்வு செய்யப்படும். அவ்வாறு ஏதேனும், வகையில் அறியக்கூடியதாக இருப்பின், அப்போது சொத்துக்களில் மீண்டும் சொத்தில் பெற்றுக்கொள்ள முடியுமான பெறுமதி மதிப்பிடப்படும். சொத்தின் கொண்டுச் செல்வதற்கு முடியுமான பெறுமதி, அதன் மீள அறிவிட முடியுமான பெறுமதி விஞ்ஞாதபோது வலுக்குன்றல் நட்டமாக அடையாளம் காணப்படுகிறது.

**ஈ) தற்போதுள்ள நிலையான சொத்துக்களுக்கான தொடர்ந்துவரும் செலவுகள்**

புலனாகக்கூடிய நிலையான சொத்துக்களுக்கு ஏற்படும் செலவுகள், அது நிகழும் காலகட்டத்தில் நிதி செயல்திறன் அறிக்கையில் வசூலிக்கப்படுகிறது, இது பின்வரும் அளவுகோல்களில் ஒன்றை பூர்த்தி செய்யாவிட்டால், அது மூலதனமாக்கப்பட்டு தொடர்புடைய அடிப்படையில் தேய்வழிக்கப்படுகின்றது.

- நிலையான சொத்துக்களின் சந்தை மதிப்பு பின்னர் அதிகரித்தல்.

- சொத்து திறன் அதிகரித்தல்.
- வெளியீட்டின் தரத்தில் நிலையான முன்னேற்றம் அல்லது இயக்க செலவைக் குறைத்தல்.
- பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பால் உறுதிப்படுத்தப்பட்டதைத் தாண்டி சொத்து வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க நீட்டிப்பு.

**உ) தேய்மானம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணப் பொருட்களின் பயன்பாட்டிற்குக் கிடைத்த நாளிலிருந்து மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்க்கை குறித்த நேர் கோட்டு முறையில் நிதி செயற்திறன் அறிக்கையில் தேய்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காணிகள் தேய்மானம் செய்யப்படவில்லை. மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு.

| **விளக்கம்** | **மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம்** |
|---|---|
| அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 10 ஆண்டுகள் |
| கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள் | 5 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | 10 ஆண்டுகள் |
| நூலகப் புத்தகங்கள் | 5 ஆண்டுகள் |
| திரைகள் மற்றும் பொருத்தல்கள் | 10 ஆண்டுகள் |

பயனுள்ள ஆயட் காலத்தின் அடிப்படையில், கொள்வனவு செய்த திகதி முதல் மற்றும் கையகற்றும் தேதி வரை தேய்மானம் வழங்கப்படுகிறது. கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் 01.01.2019 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமாறு தேய்மானம் செய்யப்படுகின்றன. ஏனெனில், இந்த சொத்துக்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தால் 2018 டிசெம்பர் 31 ஆம் தேதி வரை தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

**2.2.2. புலனாகாத சொத்துகள்**

அனைத்து அருவப் பொருட்களும் ஆரம்பத்தில் குறைந்த திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் குறைபாடு இழப்புகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

புலனாகாத சொத்துகளின் விலையானது, அதன் கொள்முதல் விலை மற்றும் அதன் நோக்கம் கொண்ட பயன்பாட்டிற்குச் சொத்தை செயல்பாட்டு நிலைக்குக் கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் செலவை உள்ளடக்கியது.

05 வருட காலப்பகுதியின் நிதிச் செயல்பாட்டின் அறிக்கைக்கு அருவமான சொத்துக்களைத் திருப்பிச் செலுத்துதல் விதிக்கப்படுகிறது. மேலும், இலங்கை பொதுத்துறை கணக்கியல்

தரநிலைகள் இல.20, அருவமான சொத்துக்களின் படி, ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் கடனைத் திருப்பிச் செலுத்தும் காலம் மதிப்பாய்வு செய்யப்படும் மற்றும் ஏதேனும் மாற்றங்கள் கணக்கியல் மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கணக்கிடப்படும்.

**2.3 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்**

**2.3.1 நடைமுறைப் பொறுப்புகள்**

நிதி நிலைக் கூற்றுக்களில் தற்போதைய பொறுப்புகள் என வகைப்படுத்தப்பட்ட கடன்கள் நிதி நிலைகள் அறிக்கையின் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவை. நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கிடப்பட்டுள்ளன.

**2.3.2 பிற்போடப்பட்ட வருமானம்**

பாடநெறிகள் மற்றும் கல்வித் திட்டங்கள் தொடர்பான பற்றுச்சீட்டுக்கள், பாடநெறிகளின் தொடக்கத்தில் சேகரிக்கப்படும் போது பிற்போடப்பட்ட வருமானம் எழுகிறது. விரிவான வருமான அறிக்கையில் வருமானம் அங்கீகரிக்கப்படும் வரையிலான காலக்கெடுவின் அளவிலும், மீதமுள்ள பாடப்பிரிவு காலத்திற்கான நிலுவைத் தொகையானது, வருமானம் அங்கீகரிக்கப்படும் வரை நிதி நிலை அறிக்கையின் மீதான பொறுப்பாக பிற்போடப்பட்ட வருமானமாக அங்கீகரிக்கப்படுகிறது.

**2.3.3 ஓய்வூதிய நன்மைகளுக்கான கடப்பாடுகள்**

**பணியாளர் நன்மைகள்**

**(அ) வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை**

வரையறுக்கப்பட்ட நன்மை திட்டங்கள் ஒரு பணியாளர் ஓய்வூதியத்தில் பெறும் நன்மையின் அளவை மதிப்பிடுகின்றன.

தகுதிவாய்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் தேவைப்படும் பயன் திட்டத்தை பல்கலைக்கழகம் பின்பற்றுகின்றது.

இது பொதுவாக வயது, சேவை ஆண்டுகள் மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளைச் சார்ந்ததாகும். இந்த பொறுப்பை பூர்த்தி செய்வதற்காக, அறிக்கையிடல் தேதியின்படி முன்னோக்கி கொண்டு செல்லப்பட்ட ஒரு விதி, உள்ளக முகாமைத்துவ மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிடப்படும் தொகை. அதன்படி, பல்கலைக்கழக அமைப்பில் 1 ஆண்டு சேவையை பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு பொறுப்பு அறிக்கை திகதியின்படி அங்கீகரிக்கப்படுகிறது. எந்தவொரு கொடுப்பனவுகளின் கால நிகரத்தின் தொடக்கத்தில் முன்வைக்கப்பட்ட

ஏற்பாட்டிற்கும், காலத்தின் முடிவில் முன்னெடுக்கப்பட்ட ஏற்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடு இலாப நட்டக் கூற்றில் கையாளப்படுகிறது.
பணிக்கொடைப் பொறுப்பு வெளிப்புறமாக நிதியளிக்கப்படவில்லை அல்லது உண்மையில் மதிப்பிடப்படவில்லை.

**(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்**

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது ஒரு வேலைவாய்ப்புக்கு பிந்தைய திட்டமாகும், இதன் கீழ் ஒரு நிறுவனம் ஒரு தனி நிறுவனத்தில் நிலையான பங்களிப்பை செலுத்துகிறது, மேலும் கூடுதல் தொகையை செலுத்த சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடமை இருக்காது. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் விரிவான வருமான அறிக்கையில் அவை எப்போது வர வேண்டும் என்பதற்கான செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

**பல்கலைக்கழக சேமலாப நிதி (UPF) மற்றும் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி**

இலங்கை மற்றும் பல்கலைக்கழக சட்டத்தில் அந்தந்த சட்டங்கள் மற்றும் சட்டங்களின்படி பல்கலைக்கழக சேமலாப நிதிக்கு நிறுவகம் மற்றும் பணியாளர்களின் மொத்த சம்பளத்தில் முறையே 7% அல்லது 10% பங்களிப்பு செய்யப்படுகிறது. மேலும், ஓய்வூதியம் பெறும் ஊழியர்களுக்கு பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் பொருட்டு 8% பங்களிப்பு செய்யப்படுகிறது.

**ஊழியர்களின் நம்பிக்கை நிதி (நுவுகு)**

ஒவ்வொரு ஊழியரின் மொத்த சம்பளத்தில் 3% ஊழியர்களின் நம்பிக்கை நிதிக்கு பல்கலைக்கழகம் பங்களிப்புச் செய்கின்றது.

### 2.3.4 தற்செயலான பொறுப்புகள்

வழக்குகளில் எழும் பொறுப்புகள் தொடர்பாக கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. 2024 டிசெம்பர் 31 நிலவரப்படி மொத்த மதிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் நிதிக் நிலைக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4 உரிமையாண்மை

### 2.4.1 மூலதன மானியங்கள்

அரசாங்க மானியங்கள் அவற்றின் நியாயமான பெறுமதியில் அடையாளம் காணப்படுகின்றன. அங்கு மானியங்கள் பெறப்படும் என்பதற்கான நியாயமான உத்தரவாதம் மற்றும் பாதிக்கும் அனைத்து நிபந்தனைகளும் பின்பற்றப்படும்.

நிலையான சொத்துக்களை வாங்குவதற்கான அரசாங்க மானியங்களும் பிற நிறுவனங்களின் பங்களிப்புகளும் முதன்முதலில் முன்கூட்டியே பெறப்பட்ட மானியங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட சொத்துக்களை வாங்குவதற்கான மானியங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது செலவழிக்கப்பட்ட சொத்துக்களை வாங்குவதற்கான வருமானம் அல்லது செலவினங்களுக்காக அவை செலவிடப்படாத மூலதன மானியக் கணக்கில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

**2.4.2 மீண்டுவரும் அளிப்புகள்**

மீண்டுவரும் அளிப்புகள் நிதி செயலாற்றுகை கூற்றில் நிதி அடிப்படையில் அடையளாம் காணப்படுகிறது. அறிக்கையிடப்படும் நிதி ஆண்டில் கிடைக்கப்பெற்ற அளிப்புகள் பின்வருமாறாகும்.

| **ஆண்டு** | **2024 (ரூபா.)** | **2023 ((ரூபா.)** |
|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 24,465,000.00 | 15,000,000.00 |
| ஏனைய மீண்டுவரும் | - | - |
| மொத்த மீண்டுவரும் மானியங்கள் | 24,465,000.00 | 15,000,000.00 |

**மானியங்களுக்கான கணக்கீடு**

செலவினங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதே காலகட்டத்தில் வருமான அறிக்கையில் வருவாயாக பல்கலைக்கழகத்திற்கு ஏற்படும் செலவுகளுக்கு ஈடுசெய்யும் மானியங்கள் அடையாளம் காணப்படுகின்றன. ஒரு சொத்தின் விலைக்கு பல்கலைக்கழகத்திற்கு ஈடுசெய்யும் மானியங்கள் வருமான அறிக்கையில் தொடர்புடைய சொத்தின் பயனுள்ள வாழ்க்கை குறித்த முறையான அடிப்படையில் அடையாளம் காணப்படுகின்றன.

மூலதன மானியங்கள் கணக்கு வைப்பதற்காக இலங்கை பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 பயன்படுத்தப்படுகிறது.

2019 ஆம் ஆண்டில் உயர் கல்வி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற அடிப்படை மூலதன அளிப்பு ரூபா. 7,000,000.00 ஆவதுடன், 2019 ஆம் ஆண்டில் வருடாந்த வரவு செலவு படி திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற மூலதன அளிப்பு ரூபா. 6,100,000.00 ஆகும். இந்த இரண்டு அளிப்புகளும் 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மூலதன அளிப்புகளாக வெவ்வேறாக அடையாளம் காணப்பட்டு கடன்தீர்ப்பு செய்யப்பட்டது.

இதற்கு மேலதிகமாக 2019 ஆம் ஆண்டில் கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களின் அடிப்படையில் ஆழுர்நு இருந்து கிடைக்கப்பெற்ற மூலதன அளிப்புகளாக ரூபா. 2,115,466.97 ஐ அடையாளம் காணப்பட்டு அதன்படி கடன்தீர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நிறுவனம் மூலம் SLPSAS 11 பயன்படுத்தப்பட்டுள்ளது. – பரிமாற்றப்படாத பரிவர்த்தனைகளின் வருமானம் 2022 இல் இருந்து எதிர்காலம் பொருட்டு செயற்படும். இதன் படி செலவினம் மேற்கொண்ட மானியங்கள், செலவினம் மேற்கொள்ளாத மானியங்கள், பரிசுகள் மற்றும் அன்பளிப்புகள் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் "திரட்டிய நிதியம் - மூலதனம்" என்ற வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. மீண்டும் ளுடுீளுயுளு 11 இன் படி பொது ஒதுக்கம் தொடர்பான கணக்கில் திரட்டிய நிதியம் - நடைமுறையாக மீண்டும் பெயரிடப்பட்டது.

அறிக்கையிடல் நிதி ஆண்டில் பொது திறைசேரியிடமிருந்து மூலதன மானியங்கள் கிடைக்கப்பெறவில்லை.

### 2.5 விரிவான வருமானக் கூற்று

#### 2.5.1 வருமான அங்கீகாரம்

செலுத்தும் திகதியை கவனத்தில் கொள்ளாது நிறுவனத்திடம் பொருளாதார நன்மைகள் கிடைக்கப்பெறும் ஆற்றல், வருமானத்தை நம்பகரமானதாக அளவிடல் மீது வருமானம் அடையாளம் காணப்படும். வருமானம் அடையாளம் காணுவதற்கு முன்னர் பின்வரும் அளவுகோள்களையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

**01. பாடநெறிகள் மூலமான வருமானம்**

நிபுணத்துவ மருத்துவ பட்டப்படிப்பு கற்கைநெறிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் அவ்வப்போது மேற்கொள்ளும் அடிப்படையில் அடையாளம் காணப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் 5 நிபுணத்துவ மருத்துவ பட்டப்படிப்பை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் 5 நிபுணத்துவ மருத்துவ பட்டப்படிப்பை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம், கற்கைநெறி கட்டணம் மற்றும் ஏனைய கட்டணமாக 2024 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற பணத்தொகை ரூபா. 5,636,677.00 ஆவதுடன், 2023 ஆம் ஆண்டில் உற்பத்தி வருமானமாக அடையாளம் காணப்பட்டுள்ள தொகை ரூபா. 5,005,833.00 ஆகும்.

**02. வட்டி வருமானம்**

பயனுள்ள வட்டி முறையைப் பயன்படுத்தி வருமானம் அல்லது செலவில் அட்டுறுவாவதால் வட்டி வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது. வட்டி வருமானம் என்பது நிலையான வைப்பு முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் நிதி முகாமைத்துவக் கணக்கு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

03. பிற வருமானம்

அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட மேற்கண்ட வகைகளின் கீழ் குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் வருமானம்.

**2.5.2 செலவினங்களை அடையாளம் காணுதல்**

நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான செலவுகள் திரட்டப்பட்ட அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு, அவை நிகழும் காலகட்டத்தில் விரிவான வருமான அறிக்கைக்கு விதிக்கப்படும்.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் 2019 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ளதுடன், அலுவலகம் பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் 5வது மாடியில் அமைந்துள்ளது. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை மூலம் செலுத்தப்படுகிறது. சுதேச மருத்துவ விஞ்ஞான பட்டப்படிப்பு நிறுவனத்தால் பயன்படுத்தப்படும் அலுவலகங்கள் தொடர்பான மின்சாரம் மற்றும் நீர் கட்டணம் தொடர்பான தொகைகள் 2022 ஆகஸ்ட் மாதம் இறுதி வரை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் அவற்றை ஆயர்வேத போதனா மருத்துவமனைக்கு திருப்பிச் செலுத்தப்படவில்லை. 2019 முதல் 2021 வரையான காலப்பகுதியில் முறையே நீர் மற்றும் மின்சாரத்திற்காக ரூபா.480,000.00 மற்றும் ரூபா. 1,230,000.00 ஒதுக்கப்பட்டுள்ளது. (திரட்டப்பட்ட செலவுகளுக்கான ஏற்பாடுகள்). இருப்பினும் 2022 ஆகஸ்ட் மாதத்தில் 2019 முதல் 2021 வரையிலான காலத்திற்கு முறையே தண்ணீர் மற்றும் மின்சாரத்திற்காக ரூ.42,643.80 மற்றும் ரூ.3,739,324.38 செலுத்துமாறு ஆயர்வேத திணைக்களம் அறிவித்துள்ளது. சுதேச மருத்துவ பட்டப்பின்படிப்ப நிறுவனத்தின் நிதிக் குழுவில் இது தொடர்பாக கலந்துயைாடப்பட்டதுடன், மாதாந்த மின்சார கட்டணம் கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படும் அடிப்படை தொடர்பாக ஆயுர்வேத திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்மானிக்கப்பட்டது. ஆயுர்வேத திணைக்களம் பயன்படுத்தும் அடிப்படையில் பல தொழில்நுட்ப தவறுகள் காணப்படுவதால் உரித்து கூறுகின்ற தொகை ஏற்றுக்கொள்வதற்கு முடியுமான பெறுமதி வரை குறைத்துக் கொள்ளலாம். அதன்படி, 2022ஆம் ஆண்டுக்காக மின்சாரம் பொருட்டு ரூபா. 500,000.00 ஒதுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில்:

**நீர் கட்டணம் :**

- PGIIM 2019 தொடக்கம் 2024 டிசம்பர் வரை நீர் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.
- 2024 டிசெம்பர் மாதம் நீர் பொருட்டு உரித்து கூறும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

**மின்சாக் கட்டணம்**:

- மின்சார நுகர்வு குறித்து ஆயுர்வேத ஆணையாளருடன் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எந்த முடிவும் எட்டப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் மின்சாரத்திற்காக ரூபா. 2,484,024.00 ஒதுக்கீ செய்யப்பட்டுள்ளது.
- திரட்டப்பட்ட செலவுகளுக்காக மொத்தம் ரூ.8,560,947.81 ஒதுக்கப்பட்டுள்ளது, இதில் ரூ.6,698,048.00 ஆகஸ்ட் 2022 திகதியிட்ட ஆயுர்வேதத் துறையின் கடிதத்தின் அடிப்படையில் மின்சாரக் கட்டணத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- தீர்வுக்குத் தேவையான நிதியைப் பெற பொது நிறுவனங்கள் துறைக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சுடன் விவாதிக்கப்பட்டது, மேலும் அவர்கள் ஆயுர்வேதத் துறையுடன் ஒரு கூட்டத்தை நடத்தி ஒரு முடிவை எடுக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

**2.6 காசுப் பாய்ச்சல் கூற்று**

SLPSAS 2 க்கு இணங்க மறைமுக முறையைப் பயன்படுத்துவதன் மூலம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது, அங்கு செயற்பாட்டு நடவடிக்கைகள், நிதியீட்ட நடவடிக்கைகள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றின் மொத்த காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது. 01.01.2022 முதல் அமலுக்கு வரும் வகையில், திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மூலதன மானியத்தை அங்கீகரிப்பதற்காக இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் -11 (SLPSAS-11) பயன்படுத்தப்பட்டது.

**2.7 கடமைகள் மற்றும் எதிர்பாரா நிகழ்வுகள்**

அறியப்பட்ட அனைத்து கடன்களின் அளவையும் தீர்மானிப்பதில் அனைத்து தெளிவான அபாயங்களும் கணக்கிடப்படுகின்றன. தொடர்ச்சியான பொறுப்புகள் என்பது சாத்தியமான கடமைகளாகும், அவற்றின் இருப்பு நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது பொருளாதார நன்மைகளை மாற்றுவது சாத்தியமில்லை அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிடப்படாத தற்போதைய கடமைகளால் மட்டுமே உறுதிப்படுத்தப்படும். நிதி நிலை அறிக்கையில் தொடர்ச்சியான பொறுப்புகள் அடையாளம் காணப்படாத போதிலும் அவை தொலைதூரத்தில் இல்லாவிட்டால் அவை வெளிப்படுத்தப்படுகின்றன.

**2.8 அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

அறிக்கையிடல் காலத்திற்குப் பிறகு நிகழும் நிகழ்வுகளின் பொருள் பரிசீலிக்கப்பட்டு, தேவையான இடங்களில் பொருத்தமான மாற்றங்கள் நிதி அறிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்**
**கொழும்புப் பல்கலைக்கழகம்**
**நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்**
**2024 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான**

| குறிப்பு 03<br>காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா. |
|---|---|---|
| இலங்கை வங்கி பொரள்ளை வீதி. கணக்கிலக்கம்: 0084061028 - மீண்டுவரும் | 4,142,246 | 529,499 |
| இலங்கை வங்கி பொரள்ளை வீதி கணக்கிலக்கம்: 0084060859 - மூலதனம் | (147,043) | 386,038 |
| இலங்கை வங்கி பொரள்ளை - SG கணக்கிலக்கம்: 0085283375 – நிதி முகாமைத்துவ கணக்கு | 7,859,997 | 7,582,575 |
| BOC பொரள்ளை - SG கணக்கிலக்கம்: 0092027342 – உருவாக்கப்பட்ட நிதியம் - மூலதனம் | 3,657,371 | 249,000 |
| | **15,512,571** | **8,747,112** |

| குறிப்பு 04<br>முதலீடுகளும் நிலையான வைப்புகளும் | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா. |
|---|---|---|
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் 078-6001-000014506-3 | 647,990 | 602,291 |
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் 078-6001-000014505-4 | 647,990 | 602,291 |
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் 078-6001-000014504-5 | 647,990 | 602,291 |
| | **1,943,969** | **1,806,873** |

| குறிப்பு 05<br>பெறுவனவுகள் | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா. |
|---|---|---|
| முன்கூட்டியே செலுத்துதல் | 93,955 | 18,443 |
| முன்கூட்டியே செலுத்தப்பட்ட முத்திரை வரி | 1,125 | - |
| பாடநெறி கட்டணம் பெறத்தக்கவைகள் | 150,000 | 100,000 |
| போர்ட்/போலியோ மதிப்பீட்டு கட்டணம் பெறத்தக்கவை | - | 160,000 |
| வருடாந்திர மதிப்பாய்வு மதிப்பீட்டு கட்டணம் பெறத்தக்கவை | - | 80,000 |
| ஆராய்ச்சி முன்மொழிவு மதிப்பீட்டு கட்டணம் பெறத்தக்கவை | 60,000 | 240,000 |
| வட்டி வருமானம் பெறத்தக்கவை | - | - |
| திரும்பப் பெற முடியாத நூலக கட்டணம் பெறத்தக்கவை | 12,000 | - |
| பிற பெறத்தக்கவைகள் | - | 16,000 |

| | | | 317,080 | 614,443 |
|---|---|---|---|---|

| குறிப்பு 06<br>பணியாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | 2025 இல் மீறப்பெறக் கூடியவை | 2025 இன் பின்னர் மீறப்பெறக் கூடியவை | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா. |
|---|---|---|---|---|
| இடர்க் கடன் | 129,620 | 174,736 | 304,356 | 398,633 |
| கணினி கடன் | 12,000 | 14,500 | 26,500 | 38,500 |
| வாகன கடன் | - | - | - | 7,466 |
| பணியாளர் கடன் | 1,700 | 2,890 | 4,590 | 6,460 |
| | **143,320** | **192,126** | **335,446** | **451,059** |

| குறிப்பு 07<br>முற்பணங்கள் | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா. |
|---|---|---|
| நானாவித முற்பணங்கள் | - | - |
| முத்திரை கட்டுநிதி | 9,684 | 14,794 |
| | **9,684** | **14,794** |

| குறிப்பு 08<br>சரக்கிருப்புக்கள்/இருப்புக்கள் | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா. |
|---|---|---|
| இருப்புக்கள் | 196,751 | 471,657 |
| | **196,751** | **471,657** |

குறிப்பு 09
ஆதனம் பொறி மற்றும் இயந்திரம்

ரூபா.

கிரயம்

| விபரம் | 01.01.2024 ஆம் திகதியன்று மீதி | வருடத்தில் சேர்ப்பனவுகள் | வருடத்தில் அகற்றல் | 31.12.2024 ஆம் திகதியன்று மீதி |
|---|---|---|---|---|
| அலுவலக மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 3,349,929 | - | - | 3,349,929 |
| கணணியும் கணணி உதிரிப்பாகங்களும் | 994,700 | 1,718,151 | - | 2,712,851 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 4,726,870 | - | - | 4,726,870 |
| நூலகப் புத்தகங்கள் | 2,791,200 | - | - | 2,791,200 |
| இணைப்புக்கள் மற்றும் பொருத்துதல்கள் | 172,901 | - | - | 172,901 |
| மாலை | - | 28,000 | - | 28,000 |
| **மொத்தம்** | **12,035,600** | **1,746,151** | **-** | **13,781,751** |

**தேய்மானத்திற்கான ஒதுக்கங்கள்**

| **விபரம்** | **01.01.2024 ஆம் திகதியில் மீதி** | **ஆண்டுக்கான கட்டணம்** | **வருடத்தில் அகற்றல்** | **31.12.2024 ஆம் திகதியில் மீதி** |
|---|---|---|---|---|
| | | | | |
| அலுவலக மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 1,319,648 | 339,744 | - | 1,659,392 |
| கணணியும் கணணி உதிரிப்பாகங்களும் | 193,445 | 232,561 | - | 426,006 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 1,594,171 | 473,895 | - | 2,068,066 |
| நூலகப் புத்தகங்கள் | 761,047 | 558,240 | - | 1,319,287 |
| இணைப்புக்கள் மற்றும் பொருத்துதல்கள் | 26,499 | 17,290 | - | 43,789 |
| மாலை | - | 5,493 | - | 5,493 |
| **மொத்தம்** | **3,894,810** | **1,627,223** | - | **5,522,033** |

**பதிவழித்த பெறுமதி**

| **விபரம்** | **01.01.2024 ஆம் திகதியில் மீதி** | **31.12.2024 ஆம் திகதியில் மீதி** |
|---|---|---|
| | | |
| அலுவலக மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 2,030,280 | 1,690,537 |

| | | | |
|---|---|---|---|
| கணணியும் கணணி உதிரிப்பாகங்களும் | 801,255 | | 2,286,845 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 3,132,699 | | 2,658,804 |
| நூலகப் புத்தகங்கள் | 2,030,153 | | 1,471,913 |
| இணைப்புக்கள் மற்றும் பொருத்துதல்கள் | 146,403 | | 129,113 |
| மாலை | - | | 22,507 |
| **மொத்தம்** | **8,140,790** | | **8,259,718** |

**குறிப்பு 10**

**கட்புலனாகாச் சொத்துக்கள்** — **ரூபா.**

**கிரயம்**

| **விபரம்** | **01.01.2024 ஆம் திகதியன்று மீதி** | **வருடத்தில் சேர்ப்பனவுகள்** | **வருடத்தில் அகற்றல்** | **31.12.2024 ஆம் திகதியன்று மீதி** |
|---|---|---|---|---|
| இணையத்தள அபிவிருத்தி | 65,000 | - | - | 65,000 |
| **மொத்தம்** | **65,000** | **-** | **-** | **65,000** |

**பணமதிப்பிழப்புக்கான ஏற்பாடுகள்**

| விபரம் | 01.01.2024 ஆம் திகதியில் மீதி | ஆண்டுக்கான கட்டணம் | வருடத்தில் அகற்றல் | 31.12.2024 ஆம் திகதியில் மீதி |
|---|---|---|---|---|
| இணையத்தள அபிவிருத்தி | 17,808 | 13,000 | - | 30,808 |
| **மொத்தம்** | **17,808** | **13,000** | **-** | **30,808** |

**பதிவளித்த பெறுமதி**

| விபரம் | 01.01.2024 ஆம் திகதியில் மீதி | 31.12.2024 ஆம் திகதியில் மீதி |
|---|---|---|
| இணையத்தள அபிவிருத்தி | 47,192 | 34,192 |
| **மொத்தம்** | **47,192** | **34,192** |

| நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான சாராம்சம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| விபரம் | தளவாடங்கள் மற்றும் பொருத்துதல் | கணினி | அலுவலக மற்றும் கற்றல் உபகரணங்கள் | நூலகப் புத்தகங்கள் மற்றும் வார சஞ்சிகைகள் | இணைப்புகளும் பொருத்தல்களும் | தளவாடங்கள் மற்றும் பொருத்துதல் | மாலை | மொத்தம் |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 2024.01.01 ஆம் திகதியில் செலவினம் / மீள்கணிப்பீட்டு மீதி | 4,726,870 | 994,700 | 3,327,504 | 2,791,200 | 195,326 | 65,000 | - | 12,100,600 |
| மீள்கணீப்பட்டு காரணமாக சொத்துக்களின் செலவுகளை அகற்றல் | - | - | - | - | - | - | - | - |
| சொத்துக்களின் மீள்கணிப்பீடு | - | - | - | - | - | - | - | - |
| சேர்த்தல் | - | 1,718,151 | - | - | - | - | 28,000 | 1,746,151 |
| அகற்றல்/சீராக்கல் | - | - | - | - | - | - | - | - |
| 2024.12.31 ஆம் திகதியில் ஊேயு | 4,726,870 | 2,712,851 | 3,327,504 | 2,791,200 | 195,326 | 65,000 | 28,000 | 13,846,751 |
| தேய்மானம் மீதி | 10% | 20% | 10% | 20% | 10% | 20% | 20% | - |
| 2024.01.01 ஆம் திகதியில் திரட்டிய தேய்மானம் | 1,594,171 | 193,445 | 1,319,648 | 761,047 | 26,499 | 17,808 | - | 3,912,618 |
| சொத்துக்களை பிரதிபன்னல் காரணமாக ஆரம்ப மீதியில் சீராக்கல் | - | - | - | - | - | - | - | - |
| மீள்கணிப்பீடு திரட்டிய தேய்மானம் ஒதுக்கீடுகளை அகற்றல் | - | - | - | - | - | - | - | - |
| அப்புறப்படுத்தலுக்கான தேய்மானம் | - | - | - | - | - | - | - | - |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2024 இற்கான தேய்மானம் | 473,895 | 232,561 | 337,501 | 558,240 | 19,533 | 13,000 | 5,493 | 1,640,223 |
| 2024.12.31 ஆம் திகதியில் திரட்டிய மீதி | 2,068,066 | 426,006 | 1,657,149 | 1,319,287 | 46,031 | 30,808 | 5,493 | 5,552,841 |
| WDV 31. 12. 2024 | 2,658,804 | 2,286,845 | 1,670,354 | 1,471,913 | 149,295 | 34,192 | 22,507 | 8,293,909 |
| WDV 31. 12.2023 | 3,132,699 | 801,255 | 2,007,855 | 2,030,152 | 168,827 | 47,192 | - | 8,187,981 |

| குறிப்பு 11<br>அட்டுறுச் செலவுகள் | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா. |
|---|---|---|
| அட்டுறுச் செலவுகள் மீண்டுவரும் | 8,560,948 | 6,237,056 |
| **மொத்தம்** | **8,560,948** | **6,237,056** |

| குறிப்பு 12<br>செலுத்த வேண்டியவைகள் | 2024<br>சுள. | 2023<br>சுள. |
|---|---|---|
| கடன் கொடுத்தவர்கள் | 1,071,133 | - |
| தக்கவைப்புகள் | - | - |
| செலுத்த வேண்டிய முத்திரை வரி | - | - |
| செலுத்த வேண்டிய அமர்வுக் கொடுப்பனவு | - | - |
| திரும்பப்பெறக்கூடிய நூலகக் கட்டணம் | 225,000 | 75,000 |
| கணினி ஆய்வுகூடங்களின் கட்டணங்கள் மீள செலுத்தப்பட வேண்டிய பயன்பாடு | 30,000 | 10,000 |
| பிற செலுத்த வேண்டியவை | 47,600 | - |
| **மொத்தம்** | **1,373,733** | **85,000** |

| குறிப்பு 13<br>ஓய்வூதியப் பணிகொடைக்கான ஒதுக்கம் | 2024<br>சுள. | 2023<br>சுள. |
|---|---|---|
| ஜனவரி 01 ஆம் திகதி | 1,871,018 | 1,565,030 |
| வருடத்திற்கான அறவீடு | 1,847,231 | 305,987 |
| | 3,718,248 | 1,871,018 |
| மீளாய்வாண்டில் கொடுப்பனவு | - | - |
| டிசெம்பர் 31 ஆம் திகதி மீதி | **3,718,248** | **1,871,018** |

| குறிப்பு 14<br>செலவளித்த மூலதன மானியங்கள் | 2024<br>சுள. | 2023<br>சுள. |
|---|---|---|
| ஜனவரி 01 ஆம் திகதியில் மீதி | 6,439,168 | 7,008,063 |
| சீராக்கல் (முன்னரான ஆண்டு) | - | - |
| காலப் பகுதிக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை) | 105,928 | (568,895) |
| டிசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி | **6,545,096** | **6,439,168** |

| **குறிப்பு 15**<br>**திரட்டிய நிதியம் - மீண்டுவரும்** | **2024**<br>**சுள.** | **2023**<br>**சுள.** |
|---|---|---|
| ஜனவரி 01 ஆம் திகதியில் மீதி | (4,410,810) | 3,768,698 |
| சீராக்கல் (முன்னரான ஆண்டு) | 162,864 | 221,374 |
| காலப் பகுதிக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை) | 1,730,661 | (8,400,883) |
| டிசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி | **(2,517,285)** | **(4,410,810)** |

| **குறிப்பு 16- A**<br>**செலவினம் மேற்கொள்ளாத**<br>**மூலதன அளிப்பு** | **2024**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| ஆரம்ப மீதி | - | 849,575 |
| ஆண்டில் சேர்ப்பு | - | - |
| மாற்றல்கள் | | (849,575) |
| | - | - |

| **குறிப்பு 16-B**<br>**செலவின மூலதன அளிப்புகள்** | **2024**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| ஆரம்ப மீதி | - | - |
| மாற்றல்கள் | - | - |
| சீராக்கல்கள் | - | - |
| கடன்தீர் | - | - |
| | - | - |

| குறிப்பு 17 | 2024 | 2023 |
|---|---|---|
| **உயர் கல்வி அமைச்சின் மூலதன மானியங்கள்** | **ரூபா.** | **ரூபா.** |
| ஆரம்ப மீதி | 6,882,411 | 7,000,000 |
| சீராக்கங்கள் | (1,746,151) | (117,588) |
| கடன்தீர்நிதிகள் | - | - |
| | **5,136,260** | **6,882,411** |

| குறிப்பு 18 | 2024 | 2023 |
|---|---|---|
| **ஈட்டிய வருமானம்** | **ரூபா.** | **ரூபா.** |
| பதிவு கட்டணம் – MD பாடநெறிகள் | 217,000 | 15,000 |
| பாடநெறிக் கட்டணம் – MD பாடநெறிகள | 3,316,667 | 3,358,333 |
| பரீட்சை கட்டணங்கள் | 410,000 | 880,000 |
| வாரிய சான்றிதழ் (PBC) கட்டணம் | 1,260,000 | 150,000 |
| விண்ணப்பக் கட்டணம் | 77,000 | 3,000 |
| ஆய்வுத் திட்ட மதிப்பீடு கட்டணம் | 190,000 | 300,000 |
| நூலகக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) | 38,000 | 8,000 |
| கணினி ஆய்வக பயன்பாட்டு கட்டணம் (மீளளிக்க முடியாதது) | 8,000 | 4,000 |
| சேயமளர்வு (Workshop) கட்டணங்கள் | - | 47,500 |
| பதிவேடு (Portfolio) மதிப்பீடு கட்டணம் | 40,000 | 160,000 |
| ஆண்டு மதிப்பீடு கட்டணம் (Annual Review Assesment Fee) | 20,000 | 80,000 |
| ஆய்வறிக்கை மதிப்பீடு கட்டணம் | 60,000 | - |
| **மொத்தம்** | **5,636,667** | **5,005,833** |

| **குறிப்பு 19** | **2024** | **2023** |
|---|---|---|
| **ஏனைய வருமானம்** | **ரூபா.** | **ரூபா.** |
| கடன் மற்றும் முற்பணங்களுக்கான வட்டிகள் | 18,263 | 22,786 |
| நிதி முகாமைத்துவக் கணக்கிலிருந்து வட்டி | 441,431 | 737,923 |
| நிலையான வைப்புகளிலிருந்து வட்டி | 137,095 | 491,112 |
| வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கு (வருமானம்) | 700,000 | - |
| ஏனைய வருமானம் | 50,000 | - |
| **மொத்தம்** | **1,346,789** | **1,251,821** |

**மொத்த செலவினம்**

| **குறிப்பு 20 -A** | **2024** | **2023** |
|---|---|---|
| **தனிப்பட்ட ஊதியங்கள்** | **ரூபா.** | **ரூபா.** |
| **கல்வி** | | |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 2,172,507 | 2,486,437 |
| பல்கலைக்கழக சேமலாப நிதி | 491,453 | 453,215 |
| பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி | 522,301 | 517,960 |
| பணியாளர் நம்பிக்கை நிதி | 202,751 | 194,235 |
| கல்வி கொடுப்பனவுகள் | 4,122,093 | 3,800,863 |
| பொழுதுபோக்கு கொடுப்பனவுகள் | 184,281 | 217,260 |
| பிற கொடுப்பனவுகள் | 1,195,734 | 787,310 |
| வருகை விரிவுரையாளர் கட்டணம் | 234,300 | 979,700 |
| ஆராய்ச்சி கொடுப்பனவுகள் | 783,673 | 870,253 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகள் | 397,200 | 187,200 |
| பதிலாள் ஊதியம | - | - |
| மேலதிக கொடுப்பனவுகள் 20% | 447,813 | 497,287 |
| மேலதிக 5000 கொடுப்பனவு 2022 | 120,000 | 120,000 |
| பணிக்கொடை | 117,398 | 21,412 |
| **மொத்தம்** | **10,991,504** | **11,133,133** |

**கல்விசாரா**

| | | |
|---|---|---|
| சம்பளம் மற்றும் ஊதியம் | 3,809,742 | 3,591,103 |
| பல்கலைக்கழக சேமலாப நிதி | 452,311 | 371,712 |
| பல்கலைக்கழக ஓய்வூதிய நிதி | 516,926 | 424,813 |
| பணியாளர் நம்பிக்கை நிதி | 193,848 | 192,395 |
| பதிலாள் ஊதியம் | 66,714 | 148,905 |
| மாதாந்திர இழப்பீடு கொடுப்பனவுகள் | 1,575,993 | 1,444,645 |
| விடுமுறை கொடுப்பனவுகள் | 3,710 | - |
| பணிக்கொடை | 1,729,832 | 284,575 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 53,443 | 86,748 |
| பிற கொடுப்பனவுகள் | 39,935 | 24,000 |
| ஆராய்ச்சி கொடுப்பனவுகள் | 497,541 | 307,378 |
| வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகள் | 1,383,381 | 655,200 |
| மேலதிக கொடுப்பனவுகள் 20மூ | 700,441 | 642,065 |
| 2022 மேலதிக் கொடுப்பனவுகள் ரூ 5000 | 413,871 | 420,000 |
| **மொத்தம்** | **11,437,688** | **8,593,539** |
| | | |
| **மொத்தம்** | **22,429,192** | **19,726,671** |

| **குறிப்பு 20-B**<br>**போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரம்** | **2024**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| போக்குவரத்து | 95,160 | 28,158 |
| **மொத்தம்** | **95,160** | **28,158** |

| **குறிப்பு 20 -C**<br>**பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள்** | **2024**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| எழுதுபொருள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 317,722 | 450,592 |
| எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கிகள் | 8,507 | 86,097 |
| இயந்திர மற்றும் மின்சார பொருட்கள் | - | - |
| மருத்துவ பொருட்கள் | - | - |
| பிற பொருட்கள் | 14,710 | 106,793 |
| **மொத்தம்** | **340,938** | **643,482** |

| **குறிப்பு 20 - D**<br>**பராமரிப்பு செலவுகள்** | **2024**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| ஆலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 58,371 | 172,161 |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 3,200 | 10,350 |
| **மொத்தம்** | **61,571** | **182,511** |

| குறிப்பு 20 - E<br>**ஒப்பந்த சேவைகள்** | **2024**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| தொலைத்தொடர்பு | 169,014 | 185,281 |
| தபால் கட்டணம் | 45,585 | 44,920 |
| மின்சாரம் | 2,484,024 | 2,484,024 |
| பாதுகாப்பு சேவை | 428,161 | 440,149 |
| நீர் | 22,200 | 22,200 |
| சுத்தப்படுத்தும் சேவை | 586,697 | 459,391 |
| வாடகை மற்றும் வாடகைக் கட்டணங்கள் | 185,000 | 2,125,000 |
| அச்சிடுதல் மற்றும் விளம்பரம் | 136,705 | 594,439 |
| **மொத்தம்** | **4,057,386** | **6,355,405** |

| குறிப்பு 20 - F<br>**ஏனைய மீண்டுவரும் செலவுகள்** | **2024**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| சிறப்பு சேவை கவுன்சில் மற்றும் குழுக்கள் | 1,249,689 | 1,367,580 |
| செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் | 22,416 | 50,020 |
| சிறப்பு சேவை-தொழில்முறை மற்றும் பிற கட்டணங்கள் | 464,243 | 648,443 |
| பணியாளர்கள் அபிவிருத்தி மற்றும் பயிற்சி | - | 3,079 |
| சொத்துக் கடனுக்கான வட்டி மானியம் | 44,798 | 47,646 |
| விடுமுறை வாரண்டுகள் மற்றும் பருவகாலச் சீட்டுக்கள் | 23,000 | 40,400 |
| வங்கி கட்டணங்கள் | 27,872 | 67,213 |
| பங்களிப்புகள் மற்றும் உறுப்பினர் கட்டணம் | - | - |
| பரீட்சைக் கட்டணம் | 259,675 | 468,330 |
| வருடாந்த ஆராய்ச்சி தருத்தரங்கு | 574,391 | - |
| மற்றவைகள் | 67,465 | 29,601 |
| **மொத்தம்** | **2,733,548** | **2,722,311** |

| **குறிப்பு 20 -G**<br>**தேய்மானம்** | **2024**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| தேய்மானம் - அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 339,744 | 339,516 |
| தேய்மானம் - தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 473,895 | 454,830 |
| தேய்மானம் - கணினி மற்றும் கணினி உதிரிப்பாகங்கள் | 232,561 | 193,445 |
| தேய்மானம் - நூலகப் புத்தகங்கள் | 558,240 | 551,846 |
| தேய்மானம் - இணைப்புக்கள் மற்றும் பொருத்துதல்கள் | 17,290 | 17,290 |
| தேய்மானம் - மாலைகள் | 5,493 | - |
| **மொத்தம்** | **1,627,223** | **1,556,927** |

| **குறிப்பு 20 -H**<br>**பணமதிப்பு நீக்கம் - அசையா சொத்துக்கள்** | **2023**<br>**ரூபா.** | **2023**<br>**ரூபா.** |
|---|---|---|
| இணையத்தள அபிவிருத்தி | 13,000 | 13,000 |
| **மொத்தம்** | **13,000** | **13,000** |

## சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம்
## கொழும்புப் பல்கலைக்கழகம்

**2024 டிசம்பர் 31 ஆம் திகதியில் பரீட்சார்த்த சமன்பாடு**

| குறியீடு மற்றும் கணக்கின் பெயர் | பற்று | கடன் |
|---|---|---|
| 30010 - பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 3,718,248.45 |
| 30100 - கடன் கொடுத்தவர்கள் | | 1,071,133.20 |
| 30110 - திரட்டப்பட்ட செலவுகள் - மீண்டும் | | 8,560,947.81 |
| 30120 - முத்திரை வரி செலுத்த வேண்டியவை | | - |
| 30160 - தேய்மான அலுவலகம் ரூ கற்பித்தல் உபகரணங்களுக்கான ஏற்பாடு | | 1,659,391.85 |
| 30170 - தேய்மானம் கணினி மற்றும் கணினி துணைக்கருவிகளுக்கான ஏற்பாடு | | 426,005.61 |
| 30180 - தேய்மானத்திற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்களுக்கான ஏற்பாடு | | 2,068,066.49 |
| 30181 - தேய்மான நூலகப் புத்தகங்களுக்கான ஏற்பாடு | | 1,319,287.26 |
| 30182 - தேய்மானம் பொருத்துதல்கள் மற்றும் பொருத்துதல்களுக்கான ஏற்பாடு | | 43,788.83 |
| 30183 - அசையா சொத்துக்களை கடனாக மாற்றுவதற்கான ஏற்பாடு | | 30,808.22 |
| 30184 - தேய்மான மாலைக்கான ஏற்பாடு | | 5,492.60 |
| 30190 - மாறுபட்ட வருமானம் முதுகலைமாணி பாடநெறி கட்டணம் | | 2,465,666.67 |
| 30195 - பிற்போடப்பட்ட வருமானம் ீடீஊ கட்டணம | | 600,000.00 |
| 30200 - மீள செலுத்தப்படும் நூலக கட்டணம் | | 225,000.00 |
| 30210 - கணினி ஆய்வுகூட பயன்பாடு (மீள செலுத்தப்படும்) | | 30,000.00 |
| 30220 - பிற செலுத்த வேண்டியவை | | 47,600.00 |
| 20050 - தளபாடங்கள் மற்றும பொருத்துதல்கள் | 4,726,870.03 | |
| 20060 - அலுவலகம் மற்றும கற்பித்தல் உபகரணங்கள் | 3,349,928.54 | |
| 20070 - கணினி மற்றும கணினி துணைக்கருவிகள் | 2,712,850.80 | |
| 20080 - மற்றவை | 28,000.00 | |
| 20090 - நூலக புத்தகங்கள் | 2,791,199.60 | |
| 20100 - கணினி மென்பொருள் | 65,000.00 | |
| 20110 - பொருத்துதல் பொருத்துதல்கள் | 172,901.40 | |
| 20180 - விழா முன்பணம் | - | |
| 20190 - சிறப்பு முன்பணம் | - | |
| 20200 - இருப்பு பதிவேடு | 196,750.69 | |
| 20210 - இடர் கடன | 304,356.00 | |
| 20220 - போக்குவரத்து கடன் | - | |
| 20230 - கணினி கடன் | 26,500.00 | |
| 20231 - பதவியணி கடன் | 4,590.00 | |
| 20235 - கிடைக்கப்பெற வேண்டிய வட்டி வருமானம் | - | |
| 20240 – முற்கொடுப்பனவு | - | |

| | | |
|---|---|---|
| 20240யு - மூலதன முன்பணம் | - | |
| 20240டீ - சம்பள முன்பணம் | - | |
| 20245 - சிறிய ரொக்க முன்பணம் | - | |
| 20250 - BOC பொரளை SG கணக்கு இலக்கம் 0084061028 – மீண்டுவரும் | 4,142,246.37 | |
| 20260 - BOC பொரளை SG கணக்கு இலக்கம் 0084060859 - மூலதனம் | (147,042.60) | |
| 20270 - BOC பொரளை SG கணக்கு இலக்கம் 0085283375 – நிதியம் முகாமைத்துவக் கணக்கு | 7,859,996.78 | |
| 20275 - BOC பொரளை SG கணக்கு இலக்கம் 0092027342 – உற்பத்தி செய்த நிதியம் மீண்டுவரும் | 3,657,370.68 | |
| 20280 - நிலையான வைப்புகளின் முதலீடு – மக்கள் வங்கி பொரளை | 1,943,968.65 | |
| 20285 - முத்திரை கட்டுநிதி | 9,683.50 | |
| 20295 - முன் கொடுப்பனவு | 93,955.16 | |
| 20295யு - முன்கூட்டியே செலுத்தப்பட்ட முத்திரை வரி | 1,125.00 | |
| 20300 - கிடைக்கப்பெற வேண்டிய கற்கைநெறி கட்டணங்கள் | 150,000.00 | |
| 20310 - பிற பெறத்தக்கவை | - | |
| 20320 - விவரக் குறிப்பு கட்டணங்கள் - கிடைக்கப்பெற வேண்டியவைகள | - | |
| 20330 - வருடாந்த மதிப்பீட்டுக் கட்டணங்கள் - கிடைக்கப்பெற வேண்டியவை | - | |
| 20340 - ஆய்வு முன்மொழிவு மதிப்பீட்டுக் கட்டணங்கள்- கிடைக்கப்பெற வேண்டியவைகள் | 60,000.00 | |
| 20350 - பணப் பரிமாற்றக் கட்டுப்பாட்டுக் கணக்கு | - | |
| 20360 - திரும்பப் பெற முடியாத நூலகக் கட்டணம் பெறத்தக்கது | 12,000.00 | |
| 10010 – சம்பளம் மற்றும் வேதனங்கள் | 2,172,506.58 | |
| 10020 – ஊ.உ.நி (UPF) | 491,453.34 | |
| 10030 – ஓய்வூதியம் | 522,300.72 | |
| 10040 – ஊ.ந.பொ.நி (ETF) | 202,750.80 | |
| 10050 – பதில் கடமையாற்றும் கட்டணங்கள் | - | |
| 10060 - கல்வி உதவித்தொகை | 4,122,093.26 | |
| 10070 – மேலதிக கட்டணங்கள் 2022 | 120,000.00 | |
| 10080 – வெளியக விரிவுரையாளர் கட்டணங்கள் | 233,900.00 | |
| 10090 – வாழ்வாதார படி | 397,200.00 | |
| 10110 – ஏனைய படிகள் | 1,195,733.61 | |
| 10120 – பணிக்கொடை | 117,398.22 | |
| 10130 – ஆராய்ச்சிப் படி | 783,673.40 | |
| 10160 - 20ூ விசேட படி | 447,813.37 | |
| 10180 – உபசரணை படி | 184,280.79 | |
| 10190 – தரவு கட்டணங்கள் | 400.00 | |
| 10200 - APIT - Academic | - | |
| 10510 – சம்பளம் மற்றும் வேதனங்கள் | 3,809,742.10 | |

| | | |
|---|---|---|
| 10520 – ப.நம்.நிதியம் (UPF) | 452,310.84 | |
| 10530 – ஓய்வூதியம் | 516,926.44 | |
| 10540 – ஊ.சே.நி (ETF) | 193,847.63 | |
| 10550 – பதில் கடமையாற்றும் கட்டணங்கள் | 66,713.70 | |
| 10560 – மேலதிக கொடுப்பனவு | 53,442.64 | |
| 10570 – லீவு கொடுப்பனவு | 3,709.50 | |
| 10580 – மேலதிக படி 2022 | 413,870.97 | |
| 10690 - பொழுதுபோக்கு கொடுப்பனவு | - | |
| 10590 - வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு | 1,383,380.65 | |
| 10600 - 20ழூ சம்பள கொடுப்பனவு | - | |
| 10630 - சமன்பாட்டு கொடுப்பனவு | - | |
| 10610 - விடாக் ஜிபிஎ/ப்எஸ் | 39,935.48 | |
| 10620 - பணிக்கொடை | 1,729,832.48 | |
| 10680 - ஆராய்ச்சி கொடுப்பனவு | 497,541.49 | |
| 10650 - 20% சிறப்பு கொடுப்பனவு | 700,441.36 | |
| 10670 - இடைக்கால கொடுப்பனவு | - | |
| 10690 - 45 % மாதாந்த இழப்பீட்டு கொடுப்பனவு | 1,575,993.09 | |
| 10700 - சரிசெய்தல் கொடுப்பனவு | - | |
| 10710 - APIT -கல்விசாரா | - | |
| 11010 - உள்நாட்டு | 95,159.51 | |
| 11020 - வெளிநாட்டு | - | |
| 12010 - எழுதுபொருள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 317,721.71 | |
| 12020 - எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 8,506.66 | |
| 12070 - மற்றவை | 14,710.00 | |
| 13010 - வாகனங்கள் | - | |
| 13020 - ஆலை, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 58,370.52 | |
| 13030 - கட்டிடம் மற்றும் கட்டமைப்புகள் | 3,200.00 | |
| 13040 - தளபாடங்கள் | - | |
| 14010 - போக்குவரத்து | - | |
| 14020 - தொலைத்தொடர்பு | 169,013.97 | |
| 14030 - அஞ்சல் கட்டணங்கள் | 45,585.00 | |
| 14040 - மின்சாரம் | 2,484,024.00 | |
| 14050 - பாதுகாப்பு சேவைகள் | 428,161.00 | |
| 14060 - தண்ணீர் | 22,200.00 | |
| 14070 - துப்புரவு சேவைகள் | 586,697.28 | |
| 14080 - வாடகை மற்றும் வாடகை கட்டணங்கள் | 185,000.00 | |
| 14090 - உள்ளூர் அதிகாரிகளுக்கான விகிதங்கள் மற்றும் வரிகள் | - | |
| 14100 - அச்சிடுதல், விளம்பரம் போன்றவை. | 136,704.50 | |
| 14110 - பிற | - | |
| 15010 - பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கான பயண மானியங்கள் | - | |

| | | |
|---|---|---|
| 15020 - சிறப்பு சேவைகள் - பேரவை மற்றும் குழுக்கள் | 1,249,688.98 | |
| 15030 - சிறப்பு சேவைகள் - தொழில்முறை மற்றும் பிற கட்டணங்கள் | 464,243.00 | |
| 15040 - பட்டறைகள், கருத்தரங்குகள் | 22,415.50 | |
| 15241 - சொத்து கடன்களுக்கான வட்டி மானியம் | 44,798.36 | |
| 15150 - விடுமுறை வாரண்டுகள் மற்றும் சீசன் டிக்கெட்டுகள் | 23,000.00 | |
| 15160 - பொழுதுபோக்கு செலவுகள் | - | |
| 15170 - வங்கி கட்டணங்கள் | 27,871.57 | |
| 15190 - பங்களிப்புகள் மற்றும் உறுப்பினர் கட்டணம் | - | |
| 15210 - தேர்வு கட்டணம் | 259,675.00 | |
| 15230 - பிற | 67,465.00 | |
| 15240 - தேய்மானம் - அலுவலகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 339,743.71 | |
| 15250 - தேய்மானம் - கணினி மற்றும் கணினி பாகங்கள் | 232,560.95 | |
| 15260 - தேய்மானம் - தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 473,895.44 | |
| 15270 - தேய்மானம் - நூலக புத்தகங்கள் | 558,239.92 | |
| 15280 - தேய்மானம் - சாதனங்கள் மற்றும் பொருத்துதல்கள் | 17,290.14 | |
| 15290 - கடன் நீக்கம் - அருவ சொத்துக்கள் | 13,000.00 | |
| 15291 - தேய்மானம் - மாலை | 5,492.60 | |
| 15300 - போக்குவரத்து | - | |
| 15310 - மறுமதிப்பீடு | - | |
| 15320 - வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கம் | 574,390.60 | |
| 40100 - கருவூலத்திலிருந்து தொடர்ச்சியான மானியம் | | 24,465,000.00 |
| 40110 - ருபுஊ இலிருந்து தொடர்ச்சியான மானியம் | | - |
| 40120 - திரட்டப்பட்ட நிதி - நடப்பு | | (4,247,947.01) |
| 40125 - திரட்டப்பட்ட நிதி- மூலதனம் | | 8,185,318.35 |
| 40130 - மறுமதிப்பீட்டு இருப்பு | | 726,743.46 |
| 40140 - கருவூலத்திலிருந்து செலவிடப்பட்ட தொடர்ச்சியான மானியம் | | - |
| 40150 - செலவிடப்படாத மூலதன மானியம் | | - |
| 40160 - ஆழுர்நு இலிருந்து மூலதன மானியம் | | 5,136,260.31 |
| 40170 - கடன்கள் மற்றும் முன்பணங்களிலிருந்து வட்டி வருமானம் | | 18,263.09 |
| 40180 - நிதி முகாமைத்துவ கணக்குகளிலிருந்து வட்டி வருமானம் | | 441,430.90 |
| 40190 - கடன் நீக்க வருமானம் - நிலையான சொத்துக்கள் | | - |
| 40200 - நிலையானவற்றிலிருந்து வட்டி வருமானம் வைப்புத்தொகை | | 137,095.23 |
| 40300 - பதிவு கட்டணம் | | 217,000.00 |
| 40310 - பாடநெறி கட்டணம் | | 3,316,666.66 |
| 40320 - தேர்வு கட்டணம் | | 410,000.00 |
| 40330 - வாரிய சான்றிதழ் சலுகை கட்டணம் | | 1,260,000.00 |
| 40340 - விண்ணப்பக் கட்டணம் | | 77,000.00 |
| 40350 - ஆராய்ச்சி முன்மொழிவு மதிப்பீட்டுக் கட்டணம் | | 190,000.00 |
| 40360 - நூலகக் கட்டணம் (திருப்பிச் செலுத்த முடியாதது) | | 38,000.00 |

| | | |
|---|---|---|
| 40351 - ஆராய்ச்சி அறிக்கை மதிப்பீட்டுக் கட்டணம் | | 60,000.00 |
| 40370 - பிற வருமானம் | | 50,000.00 |
| 40380 - கணினி ஆய்வகத்தைப் பயன்படுத்துதல் (திருப்பிச் செலுத்த முடியாதது) | | 8,000.00 |
| 40390 - பட்டறை கட்டணம் | | - |
| 40400 - விவர மதிப்பீட்டுக் கட்டணம் | | 40,000.00 |
| 40410 - ஆண்டு மதிப்பாய்வு மதிப்பீட்டுக் கட்டணம் | | 20,000.00 |
| 40420 - ஆண்டு ஆராய்ச்சி கருத்தரங்கு (வருமானம்) | | 700,000.00 |
| 40430 - நுழைவு கட்டணம் | | - |
| | **63,520,267.98** | **63,520,267.98** |

# 6. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

**2018 இன் 19ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் 2024 டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நிதிக்கூற்றுகள் மற்றும் ஏனைய சட்ட, மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் குறித்த கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 தகுதிவாய்ந்த கருத்து

2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31இல் இருந்தவாறான நிதிநிலைக் கூற்று, நிதிச் செயல்நிறைவேற்றுக் கூற்று, உரிமைப்பங்கில் மாற்றங்கள் பற்றிய கூற்று, அன்று முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புக்கள் ஆகியவற்றைக் கொண்டதான சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையுடனும் 2017 ஆம் ஆண்டின் 05ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் ஒருங்கு வாசிக்கப்படவேண்டிய 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் உட்பிரிவு 107(5) மற்றும் பிரிவு 18 இல் உரித்தாக்கப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க, எனது பணிப்புரையின்கீழ் நடத்தப்பட்டது. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப்படி, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31இல் இருந்தவாறு நிதி நிலையையும் அதன் நிதிச் செயல்நிறைவேற்றத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல்களையும் பற்றி இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயமானதுமான ஒரு நோக்கை வழங்குகின்றன.

### 1.2 தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க (SLAS) நடத்தினேன். அந்நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விவரிக்கப்படுகின்றன. நான் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்று எனது

தகுதிவாய்ந்த கருத்துக்கான ஓர் அடிப்படையை வழங்குவதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமென நான் நம்புகின்றேன்.

**1.3 நிறுவகத்தின் ஆண்டறிக்கையில் உள்ள ஏனைய தகவல்**

ஏனைய தகவலென்பது, நிறுவகத்தின் 2024ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் இல்லாததுமான குறித்த திகதிக்கு பின்னர் என்னிடம் சமர்பிக்க எதிர்பார்க்கப்படும் தகவலைக் குறிக்கின்றது. இவ் ஏனைய தகவலுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் பற்றிய எனது கருத்து இவ் ஏனைய தகவலை உள்ளடக்காது. மேலும் அது தொடர்பில் நான் எவ்வித உறுதியையும் முடிவையும் வெளிப்படுத்த மாட்டேன்.

நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட ஏனைய தகவலை அணுகி வாசித்தலும் அவ் ஏனைய தகவல் நிதிக்கூற்றுக;டாக அல்லது கணக்காய்வின் போது நான் அறிந்துகொண்டுள்ளவற்றுடன் அல்லது வேறுவிதமாக தவறாக குறிப்பிடப்பட்டவற்றுடன் முரண்படுகின்றதாவென்று பரிசீலனை செய்தலுமாகும்.

கணக்காய்வுத் திகதிக்கு முந்தைய திகதியில் நான் பெற்ற ஏனைய தகவல்கள் தவறான அறிக்கை என நான் முடிவு செய்யுமிடத்து, மேலும் திருத்தப்படாத தவறான அறிக்கைகள் இருப்பின், அவற்றை கட்டுப்படுத்தும் தரப்பினருக்கு அவ் உண்மையை நான் தெரிவிக்க வேண்டும். இது தொடர்பில் அறிக்கைப்படுத்துவதற்கு எனக்கு எதுவுமில்லை.

**1.4 நிதிக் கூற்றுக்களுக்கு முகாமைத்துவத்தினதும் கட்டுப்படுத்தும் தரப்புகளினதும் பொறுப்பு**

முகாமைத்துவமானது, இந்நிதிக்கூற்றுக்களை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கத் தயாரிப்பதற்கும், நியாயமான முறையில் சமர்ப்பிப்பதற்கும், நிதிக்கூற்றுக்களை மோசடி அல்லது வழுவின் நிமித்தம் பொருள் சார்ந்த தவறான கூற்றுக்கள் இல்லாது தயாரித்தலை இயலச்செய்வதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கும் பொறுப்பானதாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்குவதற்கான ஆற்றலைத் மதிப்பீடு செய்ய வேண்டியதும் தொடர்ந்து இயங்குமென்ற அடிப்படையில் கணக்குகளைப் பேணுதலும் நிறுவகத்தை ஒழித்துவிடுவது அல்லது வேறு தெரிவு இல்லாதவிடத்துத் தொழிற்பாடு இல்லாதொழிதல் முகாமைத்துவத்தின்

நோக்கமாக இருந்தாலன்றிப் நிறுவகம் தொடர்ந்து இயங்குதல் தொடர்பில் நிகழ்வுகளை வெளிப்படுத்தலும்கூட முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தைக் கட்டுப்படுத்தும் தரப்பினர் நிதி அறிக்கையிடும் முறைமைக்குப் பொறுப்பானவர்களாவர்.

2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 16(1)ஆம் உபப்பிரிவுக்கிணங்க நிறுவகத்தின் வருடாந்த மற்றும் பருவக்கால நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியதாகப் பல்கலைக்கழகம் அதன் வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்களும் பொறுப்புகளும் தொடர்பில் முறையான புத்தகங்களையும் பதிவுச்சான்றுகளையும் பேணவேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வில் கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது குறிக்கோள் நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தத்தில் மோசடி அல்லது வழுவின் நிமித்தமான பொருள்சார்ந்த தவறான கூற்றுக்களல்லவென்ற நியாயமான உத்தரவாதத்தை வழங்குதலும் எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதலுமாகும். நியாயமான உத்தரவாதம் உயர் தரத்திலான உத்தரவாதமாக இருந்தபோதிலும், இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கக் கணக்காய்வு செய்யப்படும்போது அளவுசார்ந்த தவறான கூற்றுக்களை அது எப்போதும் வெளிப்படுத்துமென்று உறுதிப்படுத்தவில்லை. அளவுசார்ந்த தவறான கூற்றுக்களில் தனிப்பட்ட அல்லது கூட்டு மோசடியின் அல்லது வழுவின் தாக்கம் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுவதுடன், அந்நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படும் முடிவுகளில் ஒரு விளைவையும் கொண்டிருக்கலாம்.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, இக்கணக்காய்வானது தொழில்வாண்மைத் தீர்ப்புடனும் தொழில்வாண்மை ஐயுறவுடனும் என்னால் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன்,

- மோசடியினால் அல்லது வழுவினால் ஏற்படக்கூடிய இடர்களைத் தவிர்ப்பதற்குப் போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றைப் பெற்றுக்கொள்ளல்É மோசடியினால் அல்லது வழுவினால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய சாத்தியமான தவறான கூற்றுக்களைக் கண்டுணர்ந்து மதிப்பீடு செய்வதில் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுதலாகும். இதுவே எனது கருத்தின் அடிப்படை. பொருள்சார்ந்த தவறான கூற்றுக்களைவிட மோசடிக்கூடிய தாக்கத்தைக் கொண்டிருக்கும். கூட்டுச்சதி, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத்

தவிர்த்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் என்பவற்றால் மோசடி நிகழலாம்.

- கணக்காய்வாளர் சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறையைத் திட்டமிடும்பொருட்டுப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகளை ஆராய்ந்தாரேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதித்தன்மை பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகவல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மையையும் தொடர்புடைய வெளிப்படுத்துகைகளின் பொருத்தப்பாட்டையும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகளின் அல்லது சூழ்நிலைகளின் நிமித்தம் நிறுவகம் தொடர்ந்து இயங்குவதில் போதிய எதிர்பாராப் பொறுப்பு உள்ளதாவென்று பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையில் கணக்கீட்டு நோக்கத்துக்குத் தொடர்ந்து இயங்குகின்ற அடிப்படையைப் பயன்படுத்துவதன் பொருத்தம் தீர்மானிக்கப்பட்டது. போதிய எதிர்பாராப் பொறுப்பு உள்ளதென்ற முடிவுக்கு நான் வந்தால் நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களில் எனது கணக்காய்வு அறிக்கை கவனஞ்செலுத்தவேண்டுமென்பதுடன், வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாதவிடத்து எனது கருத்து மாற்றப்படவேண்டும். எனினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் நிமித்தம் தொடர்ந்து இயங்குதல் முடிவுக்கு வரக்கூடும்.
- வெளிப்படுத்தல்களுடன்கூடிய நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பவை மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அடிப்படையாயுள்ள கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் நிதிக்கூற்றுக்களில் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளனவாவென்றும் மதிப்பீடு செய்யப்பட்டன.

முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு வலுக்குறைவுகள் மற்றும் கணக்காய்வில் கண்டுணரப்பட்ட வேறு நிகழ்வுகள் என்பவை கட்டுப்பாட்டுத் தரப்பினருக்குத் தெரியப்படுத்தப்பட்டன.

## 2. <u>வேறு சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைகள் பற்றிய அறிக்கை</u>

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன:

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(அ) இன் தேவைகளுக்கிணங்க, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன். எனது

விசாரணையின் படி நிறுவகத்தினால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ) (iii) இன் தேவைகளுக்கிணங்க, நிறுவகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்களுடன் நிலைமாறாதுள்ளன.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ) (iv) இன் தேவைகளுக்கிணங்க முன்னைய ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெற்றுக்கொள்ளப்பட்ட சான்று மற்றும் அளவுசார்ந்த விடயங்களின் வரையறைகள் என்பவற்றுக்கிணங்க பின்வரும் கூற்றுக்களைச் செய்வதற்குப் போதுமானதான எவ்விடயமும் எனது கவனத்திற்கு வரவில்லை:

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஈ)இன் தேவைகளுக்கிணங்க கட்டுப்படுத்தும் தரப்பினரில் எவரேனும் உறுப்பினருக்கு நிறுவகத்தால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் வழமையான வியாபார ஏற்பாட்டுக்குப் புறம்பாக ஏதேனும் நேரடியான அல்லது நேரில் அக்கறை உள்ளது.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவுக்கிணங்க கணக்காயப்படும் நிறுவனம் ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டத்திற்கு அல்லது கணக்காயப்படும் நிறுவகத்தின் கட்டுப்படுத்தும் தரப்பினரால் வழங்கப்பட்ட வேறு பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளுக்கு இணங்கியிருக்கவில்லை.

2.2.3

| விதிகள்/ கட்டளைகளுக்கான குறிப்பு | அவதானிப்பு |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 11 (அ) மற்றும் 29 ஜூலை 2019 திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணையக்குழுவின் உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை | நிதி அமைச்சர் அல்லது துறைக்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது நிதிக் குழுவின் முன் ஒப்புதல் இன்றி, 2024ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியன்று நிறுவனம் ரூ.1,943,969 ஐ நிலையான வைப்புகளில் முதலீடு செய்துள்ளது. |

| | |
|---|---|
| கடித இல. 04/2019 | |
| (ஆ) 2021ஆம் ஆண்டின் நவம்பர் 16ஆம் திகதியிடப்பட்ட பொது நிதி சுற்றறிக்கை இல. 01.∴2021 மற்றும் அதன்படி வெளியிடப்பட்ட நிறுவன நல்லாட்சி குறித்த வழிகாட்டுதலின் இணைப்பு III (ஆ). | 2024 ஆம் ஆண்டு வரைவு ஆண்டறிக்கையில், நிறுவனத்தின் அபாயங்களை மதிப்பிடுதல் மற்றும் உத்திகளை வரையறுத்தல் குறித்த அறிக்கை எதுவும் காணப்படவில்லை. |

2.2.4 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைகளுக்கிணங்க நிறுவகம் அதன் தத்துவங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் என்பவற்றுக்கிணங்கச் செயலாற்றியிருக்கவில்லை.

2.2.5 2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைகளுக்கிணங்க கணக்காயப்பட்ட நிறுவகத்தின் வளங்கள் உரிய கால எல்லைகளுக்குள்ளும் ஏற்புடைய சட்டங்களுக்கிணங்கவும் பெறப்பட்டும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 வேறு அவதானிப்புகள்**

(அ) 2019ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி முதல் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் ஆயுர்வேதத் துறைக்குச் சொந்தமான கட்டிடத்தில் பராமரிக்கப்பட்டு வந்ததால், 2019 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் கட்டிடம் மற்றும் மின்சார நுகர்வுக்கான ஒப்பந்தத்தில் ஈடுபடாமல் நிதிநிலை அறிக்கைகளில் நடைமுறை பொறுப்புகளின் கீழ் இருந்த ரூ. 6,698,048 ஐ செலுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

(ஆ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த 60 செயல்பாடுகளில் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் கணினி அமைப்புகள் மற்றும் கட்டுமானங்களுக்கான 20 செயல்பாடுகளை செயற்படுத்த நிறுவகம் தவறிவிட்டது.

(இ) நிறுவகத்தை ஆரம்பிக்கும் போது 12 பட்டப்பின் படிப்பு கற்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டு 06 ஆண்டுகளான பின்னரும் 06 பட்டப்பின் படிப்பு கற்கைகளை ஆரம்பிக்க முடியாதுள்ளது.

(ஈ) நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டுகளுடன் 05 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், 2025 ஏப்ரல் 25 ஆம் திகதியின்படி நிறுவகத்தின் மொத்த மாணவர் எண்ணிக்கை 42 ஆக காணப்பட்டது. இதில் 06 பட்டப்பின் படிப்பு கற்கைகளுக்கு 19 மாணவர்களும் 07 சான்றிதழ் கற்கைகளுக்கு 23 மாணவர்களும் உள்ளடங்குவர். கற்கைநெறிகளுக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான திறன் குறித்து முறையான ஆய்வை மேற்கொள்ளாமல் இந் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிறுவகத்தின் தொடர்ச்சியான செலவினங்களுக்காக ரூ. 130,325,750 செலவிடப்பட்டிருந்தது.

**ஜி.எச்.டி. தர்மபால**
**கணக்காய்வாளர் நாயகம் (பதில்)**

❖ ***சிங்களப் பதிப்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.***

## 7. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்

**கொழும்புப் பல்கலைக்கழகத்திடம் இணைந்துள்ள சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2024 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.**

---

தங்களது HED/F/1/PGIIM/2024/01 மற்றும் 2025.05.29 திகதியுடைய சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம், விரிவான கணக்காய்வாளர் நாயக அறிக்கைக்கான தெளிவுபடுத்தல்களுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

2.2.2.

(அ) இந்த நிலையான வைப்புகள் தொடங்குவதற்காக அனுமதி பெற்றுக்கொள்ளும் பொருட்டு தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு ஊடாக அங்கீகரிக்கப்பட்டு திறைசேரியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சானது அக் கடிதத்தை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் அனுப்பி வைத்துள்ளது.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது, தேசிய நிறுவனங்கள் துறைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளமையால், இவ் வைப்புத்தொகைகளுக்கான ஒப்புதலை அத் துறைக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ் ஒப்புதலுக்கான கடிதம் மீண்டும் தேசிய நிறுவனங்கள் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதிர்ச்சியின் போது வைப்புத்தொகையை வட்டியுடன் புதுப்பிக்க வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதால், ஒவ்வொரு புதிய முதலீட்டிற்கும் புதிய ஒப்புதலைப் பெறுவது நடைமுறைக்கு பொருத்தமற்றது என்பது எமது கருத்தாகும்.

(ஆ) 2024ஆம் ஆண்டுக்கான வரைவு ஆண்டறிக்கையில் அபாயங்களை மதிப்பிடுதல் மற்றும் உத்திகளை வரையறுத்தல் குறித்த அறிக்கை இல்லை எனினும், உயர்கல்வி

அமைச்சின் பரிந்துரைகளுடன் இறுதி அறிக்கை நிறைவடைந்தவுடன் இப் பகுதியைச் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.3**

**(அ)** பொரளையில் உள்ள தேசிய ஆயுர்வேத போதனா மருத்துவமனையின் 5வது மாடியில் நிறுவப்பட்ட சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம், 2019 முதல் ஆயுர்வேதத் துறைக்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது, ஆரம்பத்திலிருந்தே அதன் மின்சாரக் கட்டணங்கள் எதையும் செலுத்தவில்லை, மேலும் திரட்டப்பட்ட கருத்தின் அடிப்படையில் கணக்குகளில் மின்சாரக் கட்டணத்திற்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பை ஒதுக்கியுள்ளது. இது தொடர்பாக செலுத்த வேண்டிய சரியான தொகையைக் கண்டறிய ஆயுர்வேதத் துறைக்கு 2022 மார்ச் 29 திகதியிடப்பட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆயுர்வேத ஆணையாளர் நாயகம், 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் 05 ஆம் திகதியிடப்பட்ட தனது கடிதத்தின் மூலம் (இணைப்பு I) மின்சாரக் கட்டணத்திற்கான மதிப்பீட்டை அனுப்பியுள்ளார். இருப்பினும், ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் அனுப்பிய மதிப்பிடப்பட்ட தொகையுடன், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்ப நிறுவகம் உடன்படவில்லை. இது சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்ப நிறுவகத்தின் இறுதிக் கணக்குகளில் உள்ள ஏற்பாடுகளை விட அதிகமாக இருந்தது, மேலும் இது சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்ப நிறுவகத்தின் உண்மையான மின்சார நுகர்வை விட அதிக மதிப்பாகும். இதன் விளைவாக, நிதிக் குழுவின் அறிவுறுத்தலின் கீழ், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், ஒரு சுயாதீன மதிப்பீட்டாளரால் (கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்விக்கூடத்தின் மின்சார மேற்பார்வையாளர்) தயாரிக்கப்பட்ட அறிக்கையை அனுப்பியுள்ளது.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் சமர்ப்பித்த அறிக்கையை ஆயுர்வேதத் துறை நிராகரித்துள்ளது, மேலும் இவ் அறிக்கை ஒரு சுயாதீன மதிப்பீட்டாளரால் தயாரிக்கப்படவில்லை என்றும், அத்தகைய அறிக்கையை இலங்கை மின்சார சபையின் மின்சார பொறியியலாளர் தயாரிக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர் (இணைப்பு 2). சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது, அதன் வளாகம் ஆயுர்வேதத் துறைக்குச் சொந்தமானது என்பதால், இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சார பொறியியலாளரின் சேவையைப் பெற முடியாது என்றும், அது ஆயுர்வேதத் துறையால் செய்யப்பட வேண்டும் என்றும் ஆயுர்வேதத் துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், சம்பளத்திற்கான நிதியை திறைசேரியிடமிருந்து பெறுகிறதுடன் நிறுவனத்தின் உள்வாரியான வருமானம் பிற தொடர்ச்சியான செலவினங்களுக்காக செலவிடப்படுகிறது.

இருப்பினும், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம், அறிவிப்புகளுக்குப் பின்னர் திரட்டிய மின்சார கட்டணத்திற்காக அறிவிக்கப்பட்ட தொகையை ஒதுக்க நடவடிக்கை எடுத்தது.

2024ஆம் ஆண்டு மார்ச் 25 திகதியிட்ட கடிதம் மூலம், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம். பொது நிறுவனங்கள் துறையின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2023ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை மின்சாரக் கட்டணங்களைச் செலுத்த கூடுதல் நிதியைக் கோரி அனுப்பப்பட்டுள்ளது. (இணைப்பு-3).

இக் கடிதம் உயர்கல்வி அமைச்சின் மூலம் அனுப்பப்பட்டதாகும்.

பின்னர், 2024 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணையக்குழுவிற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் இருந்து சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்குத் தேவையான நிதியை வழங்குமாறு உயர்கல்வி அமைச்சால் 2024ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டது. (இணைப்பு-4)

இவ் விடயம் 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் திகதியன்று நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2025 வரவு செலவுத்திட்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக் கூட்டத்தில், உயர்கல்வி அமைச்சினால், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு, ஆயுர்வேதத் துறையுடன் இவ் விடயம் குறித்து விவாதித்து, ஒரு சுயாதீன மதிப்பீட்டாளரின் சேவையைப் பெற்று, சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மின்சார நுகர்வை மதிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டது.

2025ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதியன்று நடைபெற்ற முகாமைத்துவச் சபையின் 52வது கூட்டத்தில் ஆயுர்வேத ஆணையாளர் நாயகத்தின் ஒப்புதலுடன் (கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்விக்கூடத்தின் மின்சார மேற்பார்வையாளரின்) சுயாதீன மதிப்பீட்டின் அடிப்படையில், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மின்சாரக் கட்டணங்களைத் தீர்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி, சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2025ஆம் ஆண்டு ஜனவரி முதல் இலங்கை மின்சார சபையின் தற்போதைய விகிதங்களில் ஆயுர்வேதத் துறைக்கு மாதாந்த

கொடுப்பனவுகளைச் செய்து வருகின்றது. இக் கட்டணத்துடன் கூடுதலாக, பொது நிறுவனங்கள் துறையின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2025ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதியன்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது, இது சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் வைத்திருக்கும் தொகைக்கு நிதி கோருகிறது. (இணைப்பு-5) மேலும், முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகையைத் தீர்க்க நிதி ஒதுக்கீடு கோரி ஒரு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது (இணைப்பு-6).

(ஆ) இந் நிறுவனம் அதன் செயற்திட்டத்தில் உள்ள 60 செயற்பாடுகளில் 40 செயற்பாடுகளை நிறைவு செய்துள்ளது, மேலும் பின்வரும் காரணங்களால் மீதமுள்ள செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

(01) 2024 ஆம் ஆண்டில் பயிற்சியாளர்களிடமிருந்து பின்னூட்டல் படிவங்கள் பெறப்படவில்லை யாயினும், அதற்கான நடவடிக்கைகள் முன்னரே செயல்படுத்தப்பட்டுள்ளன. (இணைப்பு-7)

(02, 03, 06,09,11,12,13) 2024 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் போதுமான நிதி ஒதுக்கீடுகள் காணப்படாததால் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

(04,05) நிறுவனத்திற்கு ஒரு தகவல் தொழில்நுட்ப மையத்தை நிறுவுவதற்கான திட்டங்கள் இருந்தபோதிலும், பொருத்தமான பணியாளர்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் இன்மையால் அத்தகைய நடவடிக்கையை ஆரம்பிக்க முடியாதுள்ளது. சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு கணினி ஆலோசகரை அனுமதிக்கக் கோரி முகாமைத்துவச் சேவைகள் துறைக்கு 2021.07.28ஆம திகதியன்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டது, ஆனால் இன்றுவரை ஒப்புதல் பெறப்படவில்லை (இணைப்பு-8)

(08) சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் ஆராய்ச்சிப் பிரிவு இல்லை. மாணவர்களின் ஆராய்ச்சியானது, கல்விச் சபைகள் மற்றும் சிறப்புச் சபைகள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு முதல் வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆராய்ச்சித் துறையை நிறுவுவதற்கு தகுதியான ஊழியர்கள் எவருமில்லை.

(10) நிறுவனத்தில் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் மற்றும் கல்வி ஊழியர்கள் காணப்படுவதன் காரணத்தால், ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளமையால் முன்னுரிமை அளிக்கப்படாதுள்ளது. தேவைக்கேற்ப எதிர்காலத்தில் இது நிறுவப்படும்.

(14) அது மேற்கொள்ளப்படவில்லை என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(15) நிறுவகமானது, மூலதனச் செலவுகள் மற்றும் தொடர் செலவினங்களுக்காக திறைசேரியிடமிருந்து நிதி கோரியிருந்த போதிலும், சம்பளம் மற்றும் ஊதியம் போன்ற தொடர் செலவினங்களுக்கான நிதியை மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளது. தற்போது நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய போதுமான நிதி பற்றாக்குறையாகவுள்ளது. ஆகையால், இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் அவை 2025 செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

(16, 17, 18, 19, 20) தற்போதுள்ள சுற்றறிக்கை விதிகளின்படி கட்டுமானப்பணிகளை மேற்கொள்ள அனுமதியின்மை மற்றும் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக போதுமான நிதி ஆதாரங்கள் இன்மை போன்ற காரணங்களால், இதுவரை கட்டுமானப்பணிகள் நிறைவடையாதுள்ளது.

(இ) சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIIM), அதன் முகாமைத்துவச் சபை (BOM), மூதவை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக பேரவை ஆகியவற்றிலிருந்து முதல்நிலை ஒப்புதலைப் பெற்ற பின்னர், ஆறு MD மற்றும் சபைச் சான்றிதழ் திட்டங்களை அறிமுகப்படுத்தும் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பைசஜ்யகல்பனா மற்றும் ரசாசாஸ்திரம், ஆயுர்வேத சல்யதந்திரம், சித்த குணபதம், சித்த மருத்துவம், யுனானி அம்ராஸ்-இ-நிஸ்வான் வ கபாலத் மற்றும் யுனானி இல்முல் அத்வியா ஆகிய ஆறு MD மற்றும் சபைச் சான்றிதழ் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் 08.04.2021ஆம் திகதியன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உள்ளக தர உத்தரவாதக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவிலிருந்து பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், திருத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2021.12.25 ஆம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உறுதிப்பாட்டுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. 2022.02.01ஆம் திகதியன்று தர உறுதிப்பாட்டுப் பிரிவு புதிய திருத்தங்களுடன் விண்ணப்பங்களை மீள் அனுப்பியது. சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் இத் திருத்தங்களைச் செய்து, உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவு மூலம் விண்ணப்பங்களை தர உறுதிப்பாட்டுப் பிரிவிற்கு மீண்டும் சமர்ப்பித்தது. இச் செயல்முறை 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது, மேலும் தர உறுதிப்பாட்டுப் பிரிவு மற்றும் உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவிலிருந்து

பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் விண்ணப்பங்களில் பல முறை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

திருத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2022.10.25ஆம் திகதியன்று உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவு மூலம் தர உறுதிப்பாட்டுப் பிரிவுக்கு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டன, மேலும் அவை 2023.08.22 ஆம் திகதியன்று மேலும் திருத்தங்களுக்காக சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டன. சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு, 2024.09.18ஆம் திகதியன்று உள்நாட்டு தர உறுதிப்பாட்டுப் பிரிவு மூலம் தர உறுதிப்பாட்டுப் பிரிவுக்கு விண்ணப்பங்களை மீண்டும் சமர்ப்பித்தது. இருப்பினும், 07.11.2024.11.07 ஆம் திகதியன்று சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவு மூலம் தர உறுதிப்பாட்டுப் பிரிவானது, 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு புதிய விண்ணப்ப மாதிரியை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இருப்பினும், தர உறுதிப்பாட்டுப் பிரிவு அல்லது உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவு இதற்கு முன்னர் தங்கள் கடிதப் பரிமாற்றங்களில் உள்ள இவ் வேறுபாட்டை நிறுவகத்திற்குத் தெரியப்படுத்தவில்லை.

இச் சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம புதிய வடிவத்தில் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து 2025.01.22ஆம் திகதியன்று உள்ளக தர உறுதிப்பாட்டு மையத்தில் சமர்ப்பித்தது. உள்ளக தர உறுதிப்பாட்டுக் மையத்தின் கருத்துகளின் அடிப்படையில் மேலும் திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர், விண்ணப்பங்கள் 2025.05.01 மற்றும் 2025.05.03 ஆகிய திகதிகளில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் கையொப்பமிடப்பட்டு, 2025.05.04 ஆம் திகதியன்று உள்ளக தர உறுதிப்பாட்டு மையத்தின் மூலம் தர உறுதிப்பாட்டுக் பேரவையிடம் அதிகாரப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டன.

**முடிவுரை**

08.04.2021 ஆம் திகதியன்று முதற்கட்ட சமர்ப்பிப்பிலிருந்து 04.05.2025 திகதியன்று இறுதி விளக்கக்காட்சி வரை முழு சமர்ப்பிப்பு செயல்முறையிலும், உள்ளக தர உறுதிப்பாட்டுப் பிரிவு மற்றும் தர உறுதிப்பாட்டு பேரவையால் பெறப்பட்ட வழிகாட்டுதல்களின்படி பெறப்பட்ட அனைத்து கோரிக்கைகள் மற்றும் திருத்தங்களுக்கும் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தொடர்ந்து மற்றும் விடாமுயற்சியுடன் பதிலளித்துள்ளது.

(ஈ) சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIIM), MD மற்றும் சபைச் சான்றிதழ் திட்டங்களுக்கான முதல் தொகுதியை (2020-2025) 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் திகதியன்று ஆரம்பித்தது, இதன் மூலம் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் (IIM) MD கற்கையில் இணைந்த மாணவர்களை ஓரளவு சேர்த்தனர். இவ் ஆட்சேர்ப்பில் ஐந்து MD சிறப்புப் பிரிவுகளில் 19 பயிற்சியாளர்கள் உள்ளடங்குவர்.

2022-2027 ஆம் ஆண்டின் இரண்டாவது ஆயுர்வேத தொகுதி 2022 இல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது, நான்கு சிறப்புப் பிரிவுகளுக்கு 07 MD ஆயுர்வேத பயிற்சியாளர்களை நியமித்தது. மேலும், 2022 இல் MD யுனானி மௌலிஜாத் சிறப்புப் பிரிவின் கீழ் 02 பயிற்சியாளர்கள் இணைக்கப்பட்டனர். மூன்றாவது உள்ளீர்ப்பு (2024-2029) 2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது, மேலும் நான்கு சிறப்புப் பிரிவுகளுக்கு 10 MD ஆயுர்வேத பயிற்சியாளர்கள் இணைக்கப்பட்டனர்.

நிறுவகத்தை ஆரம்பத்திலிருந்து, சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் அதன் கல்வித் தரங்களும் மருத்துவப் பயிற்சியும் தேசிய மருத்துவக் கல்வி அளவுகோல்களுடன் இணங்குவதை உறுதி செய்வதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது. சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் நிரந்தர கல்வி ஊழியர்கள் இன்மையால், பயிற்சியாளர்கள் மற்றும் விரிவுரையாளர்களை சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (இப்போது சுதேச மருத்துவ பீடம்) மற்றும் கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேத நிறுவனம் (இப்போது கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகம்) ஆகியவற்றிலிருந்து பெற வேண்டியிருந்தது. அதன்படி, தகுதிவாய்ந்த பயிற்சியாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் கிடைக்கும் தன்மைக்கு ஏற்ப பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வது மட்டுப்படுத்தப்பட்டது, மேலும் அக் காலத்தில் திட்டங்களின் தரம் மற்றும் தொடர்ச்சியைப் பராமரிப்பதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
இதற்கு மேலதிகமாக, இக் காலகட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கு பின்வரும் காரணிகள் பங்களித்தன:

- கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் தொடர்புடைய கட்டுப்பாடுகள். தொற்றுநோய் தொடர்பான இடையூறுகள் காரணமாக 2021 இல் ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டது.

• சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் எதிர்பார்த்தபடி, இக் காலகட்டத்தில் ஆறு முன்மொழியப்பட்ட MD திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கத் தவறியமையானது பயிற்சியாளர்களின் உள்ளீர்ப்பை விரிவுபடுத்துவதற்கு ஒரு தடையாக இருந்தது.

2025 ஆம் ஆண்டுக்குள், அனைத்து பட்டப்பின் படிப்பு மருத்துவ சிறப்புப் பிரிவுகளிலும் போதுமான தகுதிவாய்ந்த பயிற்சியாளர்கள் காணப்படுகின்றனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது, மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உறுதி பேரவையில் (QAC) 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் முன்மொழியப்பட்ட ஆறு MD திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு புதிய MD நுழைவுத் தேர்வு திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் இவ் ஆண்டு இறுதிக்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிற்சியாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்திய பல்கலைக்கழகங்களிலிருந்து MD தகுதிகளைப் பெற்ற மருத்துவ அதிகாரிகளை இலக்காகக் கொண்ட முதுநிலை பதிவாளர் (SR) பயிற்சிக்கான வழிகாட்டுதல்களை சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ் வழிகாட்டுதல்களின்படி:

- 31.07.2022 க்கு முன்னர் MD பட்டங்களைப் பெற்ற பட்டதாரிகள், இரண்டு வருட செயற்திறன்மிக்க சேவையை நிறைவு செய்த பின்னர் சிறப்புரிமை சபைச் சான்றிதழை (PBC) பெற தகுதியுடையவர்களாவர்.
- 31.07.2022 க்குப் பிறகு MD தகுதியைப் பெற்றவர்கள், சபைச் சான்றிதழை (BC) பெற தகுதியுடையவர்களாக இருக்க, முறையான இரண்டு வருட முதுநிலை பதிவாளர் மருத்துவப் பயிற்சித் திட்டத்தை நிறைவு செய்ய வேண்டியிருந்தது.

MD தகுதி பெற்ற மருத்துவர்கள், ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் மற்றும் சுதேச மருத்துவம் குறித்த நிலைக்குழுவின் கோரிக்கைகளின் அடிப்படையில், சிறப்புரிமை சபைச் சான்றிதழ் தகுதிக்கான வெட்டுப்புள்ளி திகதி 17.08.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சிறப்புரிமை கல்வி சபைச் சான்றிதழ்களுக்கு தகுதி பெற்ற முதுநிலை பதிவாளர் பயிற்சிபெறாத ஏராளமான இந்திய MD தகுதி பெற்ற மருத்துவர்களால் முதுநிலை பதிவாளர் பயிற்சி திட்டங்களுக்கான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. தற்போது,

மூன்று சித்த மருத்துவப் பயிற்சியாளர்கள் மாத்திரமே முதுநிலை பதிவாளர் மருத்துவப் பயிற்சிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் நிறுவப்பட்ட போதிலும், ஆயுர்வேதம், சித்த மற்றும் யுனானி மருத்துவ பட்டப்பின் படிப்பு பயிற்சிக்காக கணிசமான எண்ணிக்கையிலான மருத்துவர்கள் இந்திய பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந் நடைமுறை சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் திட்டங்களின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. இதற்கு நேர்மாறாக, சுதேச பட்டப்பின் படிப்பு மருத்துவக் கல்வியை உறுதிப்படுத்த உதவிய வெளிநாட்டு மருத்துவ பட்டப்பின் படிப்பு தகுதிகளைத் தொடர சுகாதார அமைச்சானது அலோபதி மருத்துவர்களை அனுமதிப்பதில்லை.

**முடிவுரை:**

2020 முதல் 2025 வரையிலான ஆண்டுகளில் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட ஒப்பீட்டளவிலான சரிவிற்கு, கல்வித் தரத்தைப் பராமரிப்பதில் ஒரு மூலோபாய கவனம், பயிற்சியாளர்களின் பற்றாக்குறை, COVID-19 தொற்றுநோய் போன்ற வெளிப்புற இடையூறுகள் மற்றும் முதுநிலை பதிவாளர் மருத்துவப் பயிற்சித் தகுதிகளைப் பாதிக்கும் கொள்கை முடிவுகள் என்பன காரணமாகும். நிறுவன திறன் இப்போது வலுப்படுத்தப்பட்டு, இறுதி கட்டங்களில் முன்மொழியப்பட்ட கற்கைகளுக்கான ஒப்புதல்கள் மூலம், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதன் பயிற்சியாளர் சேர்க்கையை கணிசமாக அதிகரிக்கத் தயாராக உள்ளது.

சித்த மருத்துவம் சித்த குணபாடம் ஆகிய பாடநெறிகளின் பொருட்டு அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, கொழும்பு பல்கலைக்கழகத்தின் தரக் காப்புறுதி நிலையத்தின் ஊடாக உரிய விண்ணப்பங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும், குறித்த பாடநெறிகளின் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இது தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழக தர உறுதி நிலையம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்ட மாற்றங்களை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்த போதிலும் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

**(ஆ)** நிறுவனத்தின் 5 இலக்குகளை அடிப்படையாகக்கொண்டு நிறுவனத்தின் செய்றபாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளில் 2023 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கு இயலாமைக்கான காரணம் யாதெனில், 2023 ஆம் ஆண்டில் நிறுவனத்திடம் மூலதன அல்லது மீண்டுவரும் செலவினமாக (சம்பளத்திற்காக மட்டுமே பணம் ஒதுக்கப்பட்டது). எந்தவொரு தொகையும் கிடைக்கப்பெறாமையாகும். இது தவிர புதிய பாடநெறிகளை தொடங்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்காமை, பணியாளர்கள் பற்றாக்குறை, புதிய பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெறாமையும் காரணங்களாகும்.

**(இ)** 2019 ஆம் ஆண்டு கல்வி அமைச்சிலிருந்து பெறப்பட்ட ரூபா. 7 மில்லியன் மானியம், 2022 ஆம் ஆண்டு வரை PGIIM நிறுவனத்திற்கு தேவையான ஒரு மோட்டார் வண்டியை கொள்வனவு செய்வதற்கு தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கம் காரணமாக பயன்படுத்தப்படவில்லை. ஆனால் நாட்டில் நிலவும் பல்வேறு நிலையற்ற தன்மைகளால், நாட்டின் பொருளாதாரம் எதிர்மறையான மதிப்பை எடுத்துக் காட்டியமையால், அனைத்து வாகன இறக்குமதியையும் அரசாங்கம் நிறுத்தியது.

இதன் விளைவாக, எமது நிறுவனத்திற்கு வாகனம் கொள்வனவு செய்வதற்குத் தேவையான அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, 2021.05.03 மற்றும் 2022.12.22 ஆம் திகதிய கடிதங்கள் மூலம், இந்த நிதியை நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் அனுமதிக்கமைவாக நிறுவனத்திற்கு தேவைப்படும் மூலதன இயல்பிலான செலவினங்களின் பொருட்டு தேவையான கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. மேலும், PGIIM 2023 திசெம்பர் தொடக்கம் 2024 அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் திட்டம் படி ரூபா.மில்லியன் 07 ஐ ஒதுக்கப்பட்டு கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணினி கொள்வனவு செயற்பாடுகளில் 50% அளவு முடிவடைந்துள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில் இச் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

(ஈ) சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தமது தொழில்பாட்டு நடவடிக்கைகளை 2019 பெப்ரவரி மாதம் முதலாவது முகாமைத்துவக் கூட்டம் நடாத்தப்பட்டவுடனயே தொடங்குகின்றது. அதன் பின்னர் பாடவிதானம் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறுதல், பாடநெறி தொடங்குவதற்கு தேவையான பௌதீக வளங்களை கொள்வனவு செய்தல், பயிற்றுவிப்பாளர்களையும் பயிற்சி நிலையங்களையும் அடையாளம் காணுதல் போன்ற செயல்பாடுகளின் பின்னர் 2020 ஆம் ஆண்டில் முதலாவது மாணவர் தொகுதி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டது.

அந்த மாணவர் குழு முன்னர் சுதேச மருத்துவ நிறுவனத்தில் பதிவாகியிருந்து lateral entry இன் கீழ் சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்துடன் இணைந்துள்ள மாணவர் குழுவாகும். 2021 ஆம் ஆண்டில் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யாமைக்கு காரணங்களாக, அப்போது ஆயர்வேத அமைச்சு அல்லது ஆயர்வேத திணைக்களத்தால் ஒவ்வொரு நிபுணத்துவ துறையின் கீழ் பதவிகளை வெவ்வேறாக காட்டப்பட்டு நிறுவனத்திடம் அனுப்பி வைக்கப்படாமை, சில பாடநெறிகளின் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெறாமை, நேரம், முயற்சி மற்றும் பணம் சேமிக்கப்படுதல் என்பவற்றுக்காக ஒரு ஆட்சேர்ப்பு பரீட்சை மட்டும் நடாத்துவதற்கு திட்டமிடுதல், அப்போது கோவிட் அச்சுறுத்தல் போன்ற விடயங்கள் அமைந்துள்ளன.

2022ஆம் ஆண்டில் ஒரு யுனானி பாடநெறி மற்றும் 04 ஆயுர்வேத பாடநெறிகளின் பொருட்டு மாணவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். கூடுதலாக, Senior Registrar (Post MD) சித்த பாடநெறிக்காக 2023 ஆம் ஆண்டில் மூன்று மாணவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். மருத்துவ கலாநிதி ஆயர்வேத மற்றும் பட்டயச் சான்றிதழ் (MD and Board Certification) நான்கு பாடநெறிகளின் பொருட்டு 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி 12 மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும், மேலும் 04 மாணவர்களை சாலக்கியதந்திர மற்றும் பைசஜ்ய கல்பனா ரசசாஸ்திர பட்டப்படிப்புகளுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்**
**சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்**

- ***சிங்களப் பதிப்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.***

## 8. நிலைபேறான அபிவிருத்திக்கான முன்மொழிவு.

சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகமானது (PGIIM) 2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதுடன் சுகாதார சேவைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறைகளுக்கான மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. சுகாதார பிரமாணக் குறிப்புகளினடிப்படையில் சுதேச மருத்துவ அமைச்சின் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யூனானி ஆகிய முக்கிய சிறப்புத் துறைகளுக்கு தேவையான அனைத்து நிபுணர்களையும் சுகாதார மற்றும் சுகாதார மற்றும் சுதேச மருத்துவம் மற்றும் உயர் கல்வி அமைச்சின் ஆயுர்வேதம், யூனானி மற்றும் சித்த மருத்துவத் துறைக் கல்வி நிறுவனங்களுக்குரிய கல்வி நிபுணர்களுக்கு வழங்குவது சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) பொறுப்பாகும். அதன்படி, சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது (PGIIM) நாட்டின் மனித வலுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பயிற்சித் திட்டங்களைத் தொடங்க உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த இலக்கை அடைய சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகத்தின் (PGIIM) கல்வி நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. உள்நாட்டு மருத்துவத் துறைகளில் முதுகலைமாணி (MD) திட்டங்களை வழங்குவதன் மூலம் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது (PGIIM) எல்லா வயதினரதும் ஆரோக்கியமான வாழ்வை உறுதிசெய்யவும், நல்வாழ்வை மேம்படுத்தவும் உதவுகிறது.

இலங்கையின் சுதேச மருத்துவத் துறைக்கு வைத்திய கலாநிதி பட்டயச் சான்றிதழ் வைத்திருப்பவர்களை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் செய்கிறது. நிறுவகமானது, தர உறுதிப்படுத்தல் நிகழ்ச்சிகளினூடாக மருத்துவ கலாநிதி பயிலுநர்களுக்கு உயர் தரம் வாய்ந்த கல்வி வாய்ப்பினை வழங்கும் நோக்கில் உள் தர உறுதிப் பிரிவை நிறுவுவதற்குத் திட்டமிட்டு வருகின்றது. இதன் மூலம தரமான கல்வித் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கும் உதவுகிறது.

-நிறுவனம் எப்போதும் பாலின சமத்துவம் மற்றும் சமத்துவத்தை பராமரிக்க நடவடிக்கை எடுக்கிறது.

சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது (PGIIM) சமீபத்தில் நிறுவப்பட்ட நிறுவனமாக இருப்பதால், அனைவருக்கும் நீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பது மற்றும் நிலையான முகாமைத்துவத்தை உறுதி செய்யும் பணியில் உள்ளது. அதற்கான முன்முயற்சியாக தனித்தனியாக குப்பைகளை சேகரித்து சிதைக்கக்கூடிய பொருட்களான கண்ணாடி, பொலித்தீன்/பிளாஸ்டிக் மற்றும் காகிதங்களை சேகரித்து உரிய முறையில் அகற்றுகிறது.

-இலங்கையில் உள்ள சுதேச மருத்துவத் துறையின் ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யூனானி துறைகளுக்கு மருத்துவ கலாநிதி (MD) திட்டங்களை வழங்கி வருகிறது. இம்

மருத்துவ கலாநிதி (MD) திட்டங்களுக்கு, தேசிய இனங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்கள் ஆயுர்வேத மற்றும் யூனானி பயிற்சி திட்டங்களில் தொடங்கியுள்ளனர். மேலும், எதிர்காலத்தில் மருத்துவ கலாநிதி (MD) சித்த மருத்துவத் திட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு இனங்கள் மற்றும் மதங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களிடையே பரஸ்பர நம்பிக்கையை வளர்க்க சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகமானது (PGIIM) அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

-சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் (PGIIM) வழங்கும் அனைத்து மருத்துவ கலாநிதி (MD) பட்டப்படிப்புகளும், மருத்துவ கலாநிதி (MD) திட்டங்களும் இறுதி ஆண்டில் ஒரு வருட வெளிநாட்டுப் பயிற்சியைக் கொண்டுள்ளது. பிற நாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் (PGIIM) திட்டமிட்டுள்ளது (மருத்துவ கலாநிதி (MD) புலமைப் பரிசில் பெறுவோருக்கு இறுதி ஆண்டு பயிற்சியை வழங்குவதற்கான இந்தியாவில்) இந்த செயல்முறையின் மூலம் சுதேச மருத்துவ பட்டப்பின் நிறுவகம் (PGIIM) மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச உறவுகளை வளர்க்க இடமளிக்கின்றது.

# 9. இடர் பகுப்பாய்வு அறிக்கை

**கவனிக்கப்படும் காலம் : 01.01.2024 முதல் 31.12.2024 வரை**

**தயாரிக்கப்பட்டது : SWOT பகுப்பாய்வின் அடிப்படையில் உள்ளக மற்றும் வெளிப்புற சுற்றுச்சூழல் மதிப்பீடு.**

1. **நிறைவேற்று சுருக்கம்**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வருகின்ற, சுதேச மருத்துவத்தில் பட்டப்பின் படிப்பு பயிற்சிக்கு அர்ப்பணிக்கப்பட்ட இலங்கையில் உள்ள ஒரே உயர்கல்வி நிறுவனமாக சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIIM) திகழ்கின்றது. PGIIM ஆனது ஆயுர்வேதம், சித்தம் மற்றும் யுனானி மருத்துவ முறைமைகளில் பயிற்சியளித்து சபையால் சான்றளிக்கப்பட்ட மருத்துவ முனைவர் பட்டங்களை (SLQF நிலை 12) வழங்குகின்றது.

2020 ஆம் ஆண்டு முதல் அதன் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பித்ததிலிருந்து, நிலைத்தன்மை தொடர்பான பல சவால்களை எதிர்நோக்கிய போதிலும், நிறுவனம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. தற்போது, PGIIM ஆனது நிரந்தர கல்விசார் ஊழியர்கள் அல்லது அதன் நிர்வாக மற்றும் கல்வி செயல்பாடுகளுக்கு ஒரு பிரத்யேக அலுவலக வளாகம் இன்றி செயல்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக, அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையங்களில் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் உயர்தரமான பட்டப்பின் படிப்பு கல்வியை ஆதரிப்பதற்குத் தேவையான தரங்களைப் போதுமான அளவு பூர்த்தி செய்யாதுள்ளது.

2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடத்தப்பட்ட SWOT பகுப்பாய்வின்படி, பின்வரும் முக்கிய அபாயங்கள் அடையாளம் காணப்பட்டன:

2. **அடையாளம் காணப்பட்ட அபாயங்கள்**

- மூலோபாய மற்றும் நிறுவக அபாயங்கள்
- கல்வி மற்றும் மனிதவள அபாயங்கள்
- கொள்கை மற்றும் துறைவாரியான அபாயங்கள்
- சந்தை மற்றும் வாய்ப்பு அபாயங்கள்
- ஆராய்ச்சி மற்றும் நிதி அபாயங்கள்

## I. மூலோபாய மற்றும் நிறுவக அபாயங்கள்

| அபாய பகுதி | விளக்கம் | சாத்தியமான தாக்கம் | சாத்தியக்கூறு | நிவர்த்தி உத்திகள் |
|---|---|---|---|---|
| நிரந்தர வசதிகள் குறைவு | அர்ப்பணிப்புடன் கூடிய நிலம்/கட்டிடங்கள் இல்லாதது விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் நீண்டகால நிறுவன வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது. | கல்வி நிலைத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் திட்ட வளர்ச்சியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. | உயர்தரம் | நிலம் கையகப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கல்: பொது-தனியார் கூட்டு முயற்சிகள் அல்லது தேசிய மானியங்களை மேற்கொள்ளுதல்: படிப்படியாக உட்கட்டமைப்பு மேம்பாட்டைத் தொடங்குதல். |
| PGIIM இன் பங்கு குறித்த வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வு | பல பங்குதாரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் 'புஜஜஆ இன் கல்விப் பங்கு மற்றும் நற்சான்றிதழ்கள் பற்றி அறியாமல் உள்ளனர். | உள்ளீர்ப்பு, பங்குதாரர் ஆதரவு மற்றும் கொள்கை செல்வாக்கைக் குறைக்கிறது. | நடுத்தரம் | குறிப்பிட்ட தொடர்பு, சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள் மற்றும் பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டங்களைத் தொடங்குதல். |
| சீரற்ற அரசாங்க நிதி | அரசாங்க வரவுசெலவுத்திட்ட வரையறைகள் நிதி உறுதியற்ற தன்மையை ஏற்படுத்துகின்றன. | ஆராய்ச்சி, உள்கட்டமைப்பு, பணியாளர்கள் மற்றும் நீண்டகால திட்டமிடல் ஆகியவற்றை பாதிக்கிறது. | உயர்தரம் | கட்டமைக்கப்பட்ட நிதி திரட்டும் உத்தியை உருவாக்குதல் தொழில், அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச கூட்டாண்மைகளை உருவாக்குதல். |

## II. கல்வி மற்றும் மனிதவள அபாயங்கள்

| அபாய பகுதி | விளக்கம் | சாத்தியமான தாக்கம் | சாத்தியக்கூறு | நிவர்த்தி உத்திகள் |
|---|---|---|---|---|
| தகுதிவாய்ந்த பயிற்சியாளர்களின் பற்றாக்குறை | குறிப்பாக சிறப்புத் துறைகளில். தேசிய அளவிலான பயிற்சியாளர்களின் பற்றாக்குறை. | கல்வி வழங்கலின் தரம் மற்றும் பாடத்திட்ட பன்முகத்தன்மையை பாதிக்கின்றமை. | நடுத்தரம் தொடக்கம் உயர்தரம் | ஓய்வு பெற்றவர்களை முன்கூட்டியே பணியமர்த்தல், துணை நிபுணர்கள் மற்றும் ஜூனியர் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல் பல்கலைக்கழகங்களுடனான ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துதல். |
| பணியாளர்கள் பற்றாக்குறை | வரையறுக்கப்பட்ட அளவிலான கல்விசார் மற்றும் நிர்வாக பணியாளர்கள் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளைத் தடுக்கின்றமை. | நிகழ்ச்சித் திட்டத்தை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறமை மற்றும் தற்போதைய பணியாளர்களுக்கு அதிக சுமையை ஏற்படுத்துகிறமை. | உயர்தரம் | மனிதவளத் திட்டமிடலை வலுப்படுத்துதல் கூட்டு நியமனங்களை முன்மொழிதல் பகுதிநேர பீடங்களை பயன்படுத்துதல். |
| மருத்துவப் பயிற்சி உள்கட்டமைப்பு போதுமானதாக இல்லை | உயர்தர மருத்துவ அமைப்புகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சிக்கான அணுகல் குறைவாக உள்ளமை. | பயிற்சி பெறுபவர்களின் திறன் வளர்ச்சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தல். | உயர்தரம் | அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகளுடன் இணைதல் நடைமுறை பயிற்சிக்காக ஆயுர்வேதம் மற்றும் சுதேச நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை உருவாக்குதல். |

## III. கொள்கை மற்றும் துறைவாரியான அபாயங்கள்

| அபாய பகுதி | விளக்கம் | சாத்தியமான தாக்கம் | சாத்தியக்கூறு | நிவர்த்தி உத்திகள் |
|---|---|---|---|---|
| சுதேச சுகாதாரத்தில் தேசிய தொழில் மார்க்கங்கள் இன்மை | பட்டதாரிகளுக்கு தெளிவான பணியாளர்கள் மற்றும் தொழில் முன்னேற்றக் கொள்கை இன்மை. | பட்டதாரி நிச்சயமற்ற தன்மை, குறைவான உள்ளீர்ப்பு மற்றும் மோசமான துறை சீரமைப்பு. | நடுத்தரம் | சுகாதார அமைச்சு மற்றும் ஆயுர்வேதத் துறையுடன் இணைந்து பணியாற்றி, பணிகளையும் தொழில் கட்டமைப்புகளையும் முறைப்படுத்துதல். |
| பலவீனமான கொள்கை ஈடுபாடு | தேசிய சுகாதாரக் கொள்கையில் செல்வாக்கு செலுத்தும் வாய்ப்புகள் தவறவிடப்படலாம். | சுகாதார அமைப்பை வடிவமைப்பதில் PGIIM இன் மூலோபாய பொருத்தத்தை குறைக்கிறது. | நடுத்தரம் | சுகாதாரக் கொள்கை மன்றங்களில் தீவிரமாகப் பங்கேற்று, நிபுணர் சபைகள் மூலம் பணிநிலை ஆவணங்களைச் சமர்ப்பித்தல். |

## IV. சந்தை மற்றும் வாய்ப்பு அபாயங்கள்

| அபாய பகுதி | விளக்கம் | சாத்தியமான தாக்கம் | சாத்தியக்கூறு | நிவர்த்தி உத்திகள் |
|---|---|---|---|---|
| உலகளாவிய கேள்வியைப் பயன்படுத்துவதற்கு தவறியமை. | சுதேச மருத்துவத்தில் அதிகரித்து வரும் உலகளாவிய ஆர்வம் பயன்படுத்தப்படாமல் போகலாம். | சர்வதேச நற்பெயர் மற்றும் வருவாய் இழப்பு. | நடுத்தரம் | சர்வதேச பயிற்சி தொகுதிகளை உருவாக்குதல்: வலைத்தளத் தெரிவுநிலையை மேம்படுத்துதல்: பிராந்திய கூட்டணிகளை உருவாக்குதல். |
| சர்வதேச நிறுவனங்களின் போட்டி | இந்தியாவிலும் பிற இடங்களிலும் உள்ள நிறுவனங்கள் அதிக சர்வதேச மாணவர்களை ஈர்க்கக்கூடும். | PGIIM இன் சந்தைப் பங்கு மற்றும் வியாபாரக் குறியின் வீழ்ச்சி | நடுத்தரம் | தனித்துவமான சான்றுகளை (MD + சபை சான்றிதழ்) வலியுறுத்துதல்: உயர் கல்வித் தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை |

| அபாய பகுதி | விளக்கம் | சாத்தியமான தாக்கம் | சாத்தியக்கூறு | நிவர்த்தி உத்திகள் |
|---|---|---|---|---|
| | | | | அங்கீகாரத்தைப் பராமரித்தல். |

## V. ஆராய்ச்சி மற்றும் நிதி அபாயங்கள்

| அபாய பகுதி | விளக்கம் | சாத்தியமான தாக்கம் | சாத்தியக்கூறு | நிவர்த்தி உத்திகள் |
|---|---|---|---|---|
| இடர் முன்னுரிமை அணி | ஆராய்ச்சி மானியங்களை ஈர்க்க / நிர்வகிப்பதற்கு கட்டமைக்கப்பட்ட அமைப்பு இன்மை. | புதுமை, ஊழியர்களின் உந்துதல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புகளை கட்டுப்படுத்துகிறது. | உயர்தரம் | ஒரு ஆராய்ச்சி அலுவலகத்தை நிறுவுதல்: WHO, AYUSH மற்றும் UGC மானியங்களைப் பெறுதல்: வெளியீடு மற்றும் மானிய எழுத்துக்கு ஊக்கமளிக்கவும். |

### 3. இடர் முன்னுரிமை அணி

| தாக்கம் → | குறைவு | நடுத்தரம் | உயர்தரம் |
|---|---|---|---|
| **அதிக வாய்ப்பு** | சிறிய தாமதங்கள் | பணியாளர்கள் பற்றாக்குறை, நிதி கட்டமைப்பு இன்மை | போதுமான வசதிகள் இன்மை, சீரற்ற நிதி, மருத்துவ உட்கட்டமைப்பு இடைவெளிகள் |
| **நடுத்தர வாய்ப்பு** | குறைந்த உள்ளீர்ப்பு | தேசியக் கொள்கை இன்மை, தவறவிட்ட கொள்கை ஈடுபாடு | பயிற்சியாளர் பற்றாக்குறை, உலகளாவிய சந்தை இடைவெளி |
| **குறைந்த வாய்ப்பு** | குறைந்தது | - | - |

## 4. PGIIM இன் நிறுவன வலுப்படுத்தல் மற்றும் நிலையான செயல்பாட்டிற்கான பரிந்துரைகள்

மேற்குறிப்பிட்டுள்ள இடர் பகுப்பாய்வின் அடிப்படையில், சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் (PGIIM) பயனுள்ள செயல்பாடு மற்றும் நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக பின்வரும் மூலோபாய பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன:

**(அ). உட்கட்டமைப்பு மேம்பாடு**

PGIIM-க்கான நிரந்தர வளாகத்தின் வளர்ச்சியை விரைவுபடுத்துவது கட்டாயமாகும். நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட வசதிகளுடன் கூடிய பிரத்யேக பௌதீக இடப்பரப்பானது, கல்வி வழங்கல், நிறுவன ஸ்திரத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த கற்றல் சூழலையும் மேம்படுத்தும். இதில் விரிவுரை அரங்குகள், தகவல் தொழில்நுட்ப ஆய்வகங்கள், கேட்போர்கூடங்கள், நிர்வாக அலுவலகங்கள் மற்றும் தேசிய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் தரத்திற்கு ஏற்ப மாணவர் வசதிகளை நிறுவுதல் ஆகியவை உள்ளடங்கும்.

**(ஆ). வெளியகநடவடிக்கை மற்றும் நிறுவனத் தெரிவுநிலை**

PGIIM- இன் கல்வித் திட்டங்கள் மற்றும் உள்நாட்டு மருத்துவத்தில் அதன் தேசிய பங்கின் தெரிவுநிலையை அதிகரிப்பதற்கு ஒரு விரிவான விழிப்புணர்வு மற்றும் வியாபாரக் குறி பிரச்சாரமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். இம் முயற்சி சுகாதார தொழில்வாணமையாளர்கள், மாணவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பொதுமக்களை இலக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். மூலோபாய தொடர்பாடலானது, பங்குதாரர் ஈடுபாட்டை அதிகரிப்பதுடன் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கு அதிக திறன் கொண்ட வேட்பாளர்களை ஈர்க்கும்.

**(இ) பீட உள்ளீர்ப்பு மற்றும் பயிற்சி கூட்டாண்மைகள்**

நடைமுறை பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்த அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகள், ஆயுர்வேத கற்பித்தல் நிறுவகங்கள் மற்றும் சுகாதார அமைச்சுகளுடன் கூட்டு கூட்டாண்மைகளை வலுப்படுத்த வேண்டும். அதே நேரத்தில், அனைத்து துறைகளிலும் நிபுணத்துவ பயிற்சியாளர்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, தகுதிவாய்ந்த கல்வி மற்றும் மருத்துவ ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் தக்கவைத்துக்கொள்தல் என்பன முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும், இதன் மூலம் பட்டப்பின் படிப்பு கல்வியின் தரத்தை மேம்படுத்த முடியும்.

**(ஈ) ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் புதமை**

ஆராய்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் நிதி பெறுதலுக்காக ஒரு பிரத்யேக பிரிவை நிறுவுவது அவசியமாகும். இப் பிரிவு ஆராய்ச்சி திட்டங்களை உருவாக்குவதற்கும், தேசிய மற்றும் சர்வதேச மானியங்களைப் பெறுவதற்கும், அறிவார்ந்த வெளியீட்டை ஊக்குவிப்பதற்கும் உதவும். ஆராய்ச்சி கலாச்சாரத்தை வலுப்படுத்துவது, உள்நாட்டு மருத்துவத்தில் சான்றுகள் சார்ந்த நடைமுறைகளை ஆதரிப்பதோடு, ீபுஐஐஆ இன் கல்வி நற்பெயரை வலுப்படுத்தும்.

**(உ) மூலோபாய கொள்கை ஈடுபாடு**

தேசிய சுகாதாரக் கொள்கை மற்றும் உள்நாட்டு மருத்துவத் துறையில் திட்டமிடலுக்கு PGIIM ஒரு முக்கிய பங்களிப்பாளராக நிலைநிறுத்தப்பட வேண்டும். சுகாதார அமைச்சு, ஆயுர்வேதத் துறை மற்றும் தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஈடுபடுவது, நிறுவனம் கொள்கை திசைகளில் தீவிரமாக செல்வாக்கு செலுத்தவும், பணியாளர் மேம்பாட்டு உத்திகளுக்கு பங்களிக்கவும், கல்வித் திட்டங்களை தேசிய முன்னுரிமைகளுடன் சீரமைக்கவும் அனுமதிக்கும்.

# 10. பௌதீக மற்றும் நிதி செயல்திறன் பகுப்பாய்வு

## 1. பௌதீக செயல்திறன் பகுப்பாய்வு

**மருத்துவ முனைவர் தேர்வு மற்றும் பட்டமளிப்பு விழா**

2024ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு விழாவில் ஆயுர்வேத மருத்துவ கலாநிதி நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் தொகுதி மாணவர்கள் பட்டம் பெற்றனர். ஒரு வருட பட்டப்பின் படிப்பு மருத்துவ கலாநிதி உள்நாட்டுப் பயிற்சியின் பின்னர், முதல் ஆயுர்வேதத் தொகுதியின் சிரேஷ்ட பதிவாளர்கள், வெளிநாட்டு பட்டப்பின் படிப்பு மருத்துவப் பயிற்சியைப் பெறுவதற்காக இந்தியாவில் உள்ள கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டனர். 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் மருத்துவ கலாநிதி பட்டப்படிப்புத் தேர்வில் வெற்றிபெறாதவர்களுக்காக 2024 ஆம் ஆண்டு ஒரு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டது. குறித்த மருத்துவப் கலாநிதி நிகழ்ச்சித் திட்டத்தின் பயிற்சியாளர்கள் 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதியன்று நடைபெற்ற கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு பட்டமளிப்பு விழாவிலும் பங்கேற்றனர்.

**மருத்துவ முனைவர் மற்றும் சபை சான்றிதழ் திட்டம்**

உள்நாட்டில் ஒரு வருட பட்டப்பின் படிப்பு மருத்துவப் பயிற்சியை நிறைவு செய்த பதினாறு (16) சிரேஷ்ட பதிவாளர்கள் (முதல் தொகுதி) 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் 16 ஆம் திகதியன்று இந்தியாவின் ஜாம்நகரில் உள்ள ஆயுர்வேத கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் (ITRA) தங்கள் வெளிநாட்டுப் பயிற்சியை ஆரம்பித்தனர். வெளிநாட்டுப் பயிற்சிக்கு தகுதியற்ற சிரேஷ்ட பதிவாளர்கள் தங்கள் பட்டப்பின் படிப்பு மருத்துவ கலாநிதி பயிற்சியை உள்நாட்டில் தொடர நியமிக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவ கலாநிதி (ஆயுர்வேதம்) பயிற்சி பெறுபவர்களின் இரண்டாவது தொகுதி (2022–2027) மற்றும் மருத்துவ கலாநிதி (ஆயுர்வேதம்) பயிற்சி பெறுபவர்களின் மூன்றாவது தொகுதி அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையங்களில் Pre-MD மருத்துவப் பயிற்சிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மூன்று மருத்துவ கலாநிதி தகுதி பெற்ற சித்த மருத்துவர்கள், அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையங்களில் இரண்டு வருட சிரேஷ்ட பதிவாளர்கள் பயிற்சியைப் பெற நியமிக்கப்பட்டுள்ளனர்.

**மனித வள மேம்பாடு**

மனித வளங்களை வலுப்படுத்தும் பொருட்டு சுதேச பட்டப்பின் படிப்பு மருத்துவ நிறுவகம் பல பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தது. 2024 ஆம் ஆண்டு நவம்பர் PGIIM இன் அனைத்து ஊழியர்களுக்கும் “செயற்கை நுண்ணறிவு (AI)” குறித்த பயிற்சிப்பட்டறையொன்று நடத்தப்பட்டது. நிரந்தர அடிப்படையில் ஒரு (01) தொழில்நுட்ப அதிகாரி, ஒரு (01) முகாமைத்துவ உதவியாளர் (கணக்கு பதிவு) மற்றும் இரண்டு (02) பணி உதவியாளர்களை நியமிக்க ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந் நியமனங்கள் தற்போது முகாமைத்துவ சேவைகள் துறையின் ஒப்புதலுக்காக காத்திருக்கின்றன.

ஒன்பது ஊழியர்கள் மாத்திரமே இருந்தபோதிலும், PGIIM மேற்கூறிய அனைத்து பணிகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றியது.

**நிரந்தர அலுவலக வளாகம்**

தற்போது, சுதேச மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PGIIM) பொரல்லயிலுள்ள தேசிய ஆயுர்வேத போதனா மருத்துவமனையின் (NATH) 5வது மாடியில் தற்காலிகமாக தனது செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

PGIIM இன் நடவடிக்கைகள் மேலும் சீராகவும், சுயாதீனமாகவும் நடைபெறும் வகையில் புதிய நிரந்தர அலுவலக வளாகம் ஒன்றை பெறுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன

## 2. நிதி செயல்திறன் பகுப்பாய்வு

2024 ஆம் ஆண்டில், நிறுவனத்தின் மொத்த செலவு ரூ. 31,463,946 ஆனது, அன்றாட செயல்பாட்டு செலவுகள் (மீண்டுவரும் செலவு) மற்றும் நீண்ட கால முதலீடுகள் (மூலதனச் செலவு) ஆகிய இரண்டையும் உள்ளடக்கும். வரவு செலவுத்திட்டத்தின் பெரும்பகுதி தனிநபர் ஊதியத்திற்காக செலவிடப்பட்டதுடன், இதன் மதிப்பு ரூ. 22,429,192 ஆகும். இது நிறுவனம் தனது ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் தொடர்புடைய சலுகைகள் மூலம் ஆதரவளிப்பதில் அதிக கவனம் செலுத்துவதை பிரதிபலிக்கிறது. வெளிமூலச் சேவைகள் மற்றும் அத்தியாவசிய செயல்பாடுகளை நிர்வகிக்க உதவிய ஒப்பந்த சேவைகள் இரண்டாவது மிக உயர்ந்த செலவாவதுடன் இது மொத்தமாக ரூ. 4,057,386 ஆகும்.

ஏனைய முக்கிய மீண்டுவரும் செலவுகளில் பொருட்களுக்கு ரூ. 340,938, நானாவித செயல்பாட்டுத் தேவைகளுக்கு ரூ. 2,733,548, பயணத்திற்கு ரூ. 95,160 மற்றும் பராமரிப்புக்கு ரூ. 61,571 ஆகியவை அடங்கும். இப் புள்ளிவிபரங்கள் நிறுவனம் அதன் வழக்கமான நடைமுறைச் செலவுகளை கவனமாக நிர்வகித்து, அத்தியாவசிய சேவைகள் அதிக செலவு இன்றி திறமையாக வழங்கப்படுவதை உறுதிசெய்தது என்பதை வெளிக்காட்டுகிறது.

மூலதனப் பக்கத்தில் மொத்தமாக ரூ. 1,746,151 செலவிடப்பட்டது, முக்கியமாக கணினிகள் மற்றும் தொடர்புடைய துணைக்கருவிகளுக்கு (ரூ.1,718,151) செலவிடப்பட்டது. மாலைகளுக்கு ரூ. 28,000 ஒரு சிறிய தொகை பயன்படுத்தப்பட்டது. இவ் ஆண்டு கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள் அல்லது நூலக புத்தகங்களுக்கு எவ்வித பணமும் செலவிடப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் நிறுவனம் பௌதீக உள்கட்டமைப்பை விட தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியதை மூலதனச் செலவுகள் வெளிகாட்டுகின்றன.

MOHE மூலதன மானியம் ரூ. 6,882,411 ஆக இருந்ததுடன், அதில் ரூ. 1,746,151 மட்டுமே பயன்படுத்தப்பட்டது, இதன் விளைவாக ரூ. 5,136,260 சேமிக்கப்பட்டது. மேலதிகமாக, தனிப்பட்ட ஊதியங்களுக்காக பெறப்பட்ட நிதியும் ரூ. 2,035,808 சேமிப்பைப் பதிவு செய்தது. ஏனெனில் செலவிற்காக ஒதுக்கப்பட்ட தொகையை விட குறைவாகவே இருந்தது.

ஒட்டுமொத்தமாக 2024 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் நிதி செயல்திறன் நன்கு நிர்வகிக்கப்பட்டு சமநிலையில் காணப்பட்டதுடன் கிடைக்கக்கூடிய நிதியை கவனமாகப் பயன்படுத்தியது. மேலும் சேவைகளின் தரத்தைப் பாதிக்காமல் குறிப்பிடத்தக்க சேமிப்பு செய்யப்பட்டது. இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளைப் பின்பற்றி, 2024ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியின்படி நிதிநிலை அறிக்கைகள் உண்மையானதும் மற்றும் நியாயமானதுமான பார்வையை வழங்குகின்றன என்பதை கணக்காய்வாளர் நாயகம் உறுதிப்படுத்தினார். இது நிறுவனம் வலுவான நிதி நிலையில் உள்ளது என்பதையும், வரும் ஆண்டுகளில் அதன் முன்னேற்றத்தைத் தொடரத் தயாராக உள்ளது என்பதையும் காட்டுகிறது.

**மீண்டுவருஞ் செலவின விபரங்கள்:**

| விடயம் | 2024இல் (ரூ.) |
|---|---|
| அ. ஆளணி ஊதியங்கள் | 22,429,192 |
| ஆ. பிரயாணம் | 95,160 |
| இ. வழங்கல்கள் | 340,938 |
| ஈ. பராமரிப்பு | 61,571 |
| உ. ஒப்பந்தச் சேவைகள் | 4,057,386 |
| ஊ. ஏனையவை | 2,733,548 |
| **மொத்தம்** | **29,717,795** |

**ஓ. மூலதனச் செலவின விபரங்கள்:**

| விடயம் | 2024இல் (ரூ.) |
|---|---|
| அ. அலுவலக மற்றும் கற்பித்தல் சாதனக் கையேற்பு | - |
| ஆ.. கணினி மற்றும் கணினி உபகரணங்களை கையகப்படுத்துதல் | 1,718,151 |
| இ. கட்டிடம் மற்றும் கட்டமைப்புகளை கையகப்படுத்துதல் | - |
| ஈ. நூலக புத்தகங்கள் | - |
| உ. சாதனங்கள் மற்றும் பொருத்துதல்கள் | - |
| ஊ. மாலைகள் | 28,000 |
| **மொத்தம்** | **1,746,151** |

**நிதி முன்னேற்றத்தின் விபரங்கள் (செலவினம்)**

| விடயம் | கிடைக்கபெற்ற நிதி (ரூ.) | செலவினம் (ரூ.) | சேமிப்பு/ மிகை (ரூ.) |
|---|---|---|---|
| | 2024 | 2024 | 2024 |
| அ. ஆளணி ஊதியங்கள் | 24,465,000 | 22,429,192 | 2,035,808 |
| **மொத்தம்** | **24,465,000** | **22,429,192** | **2,035,808** |

**நிதி முன்னேற்றத்தின் விபரங்கள் (உருவாக்கிய வருமானம்)**

| விடயம் | ஏற்பாடு (ரூ.) | செலவினம் (ரூ.) | சேமிப்பு/ மிகை (ரூ.) |
|---|---|---|---|
| | 2024 | 2024 | 2024 |
| அ. உருவாக்கிய வருமானம் | 23,289,000 | 7,288,603 | 16,000,397 |
| **மொத்தம்** | **23,289,000** | **7,288,603** | **16,000,397** |

**நிதி முன்னேற்றத்தின் விபரங்கள் (ஆழுர்நு மானியம்)**

| விடயம் | ஏற்பாடு (ரூ.) | செலவினம் (ரூ.) | சேமிப்பு/ மிகை (ரூ.) |
|---|---|---|---|
| | 2024 | 2024 | 2024 |
| அ. MOHE மானியம் (மூலதனம்) | 6,882,411 | 1,746,151 | 5,136,260 |
| **மொத்தம்** | **6,882,411** | **1,746,151** | **5,136,260** |